

ஆட்டம் ஆரம்பம் என்றியளோ...


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 32 | சுடர் 31 | கதிர் 265 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 01, புதன்கிழமை 17.08.2016


## கூட்டமைப்பை களங்கப்படுத்த கனவிலும் நினைத்ததில்லை

### முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு களங்கம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணம் எனது கனவில் கூட எழுந்ததில்லை.

இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:

நான் கடந்த அமர்வில் முன்வைக்கப்பட்ட பிரேரணையின் தொடர் விவாதத்தை நான் ஆட்சேபிக்கவில்லை. வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும் என்பதற்காகவே இதனைச் செய்கின்றேன். எமது அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டை உறுப்பினர்கள்தான் முதலில் முன்வைத்தார்கள்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவடைந்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட போது, உங்கள் எவரையும் எனக்குத் தெரி >> 27ஆம் பக்கம்

# அமைச்சர்களை விசாரிப்பதில் முதலமைச்சர் கடும் உறுதி

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 17

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு முதலமைச்சர் தனியான குழுவை நியமிக்கவுள்ளார். முதலமைச்சருக்கு இருக்கும் தற்துணிவு அதிகாரத்தின்படி அவரின் இந்த முடிவை வடக்கு மாகாண சபை நேற்று ஏற்றுக்கொண்டது.

ஆனால் இந்தக் குழுவை நியமிப்பதற்குத் தனக்கு அனுமதி தருமாறு வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரேரணையை முன்வைத்தார். அதனை ஏற்றுக்கொள்ள உறுப்பினர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். குழுவை நியமிப்பதற்கு முதலமைச்சருக்கு உள்ள அதிகாரத்தின் கீழ் முடிவெடுத்து, அதனைச் சபைக்கு அறிவித்தார். அந்த முடிவை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

வடக்கு மாகாண முதலமைச்சரினால், மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு அனுமதி கோரி முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து முதலமைச்சர், மாகாண சபை அமைச் >> 27ஆம் பக்கம்

முன்னாள் போராளிகளுக்கு மருத்துவ சோதனை

## அமெரிக்கா இணக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணம் வந்துள்ள அமெரிக்க இராணுவத்தின் மருத்துவக் குழு ஊடாக, முன்னாள் போராளிகளை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் இணக்கம் தெரிவித்தார்.

இவ்வாறு >> 27ஆம் பக்கம்

## காணாமற்போனோரின் உறவினர்கள் நாளை முல்லைத்தீவில் போராட்டம்

முல்லைத்தீவு, ஓக 17

காணாமற்போனோர் அலுவலகம் அமைப்பது தொடர்பான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அந்த அலுவலகம் கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவிலேயே அமைக்க வேண்டும் >> 28ஆம் பக்கம்

## 9 மணித்தியாலம் நடந்த விவாதம்; ரூ.5 லட்சம் செலவு

### முதலமைச்சரின் பிரேரணைக்கு

யாழ்ப்பாணம், ஓக. 17

அமைச்சர்களை விசாரிக்கக் கோரும் முதலமைச்சரின் பிரேரணை மீது 9 மணித்தியாலம் விவாதம் நடந்துள்ளதுடன், இதற்காக மக்களின் வரிப் பணம் 5 லட்சம் ரூபா செலவிடப்பட்டது.

அமைச்சர்களை விசாரணை செய்வதற்கு அனுமதி கோரும் பிரேரணையை முதலமைச்சர், வடக்கு மாகாண சபையின் 58 ஆவது அமர்வில் சமர்ப்பித்திருந்தார். இந்தப் பிரேரணை அன்றைய தினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மூன்றரை மணி நேரம் விவாதம் நடைபெற்றது. முடிவு எட் >> 28ஆம் பக்கம்

## ஆஸியிலிருந்து நாடு கடத்திய 6 பேர் ரி.ஐ.டியினரின் பிடியில்

மட்டக்களப்பு, ஓக 17

மட்டக்களப்பிலிருந்து கடல் வழியாக படகு மூலம் சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற 6 பேரை ஆஸ்திரேலியக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்த அந்தநாட்டுக் கடற்படையினர், அங்கிருந்து அவர்களை விமான மூலம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பினர். அவர்கள் 6 பேரும் நேற்றுக் காலை 8.15 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்களைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் (ரி.ஐ.டி) விசாரணை நடத்தி வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். >> 28ஆம் பக்கம்

## கிராம அலுவலரும் மனைவியும் காயம் முகமூடிக் கொள்ளையர் மல்லாவியில் வாள்வெட்டு

### 15 பவுண் நகை, 2 இலட்சம் பணம் கொள்ளை

யாழ்ப்பாணம், ஓக. 17

மல்லாவியில் கிராம அலுவலர் ஒருவரின் வீட்டுக்குள் நள்ளிரவு புகுந்த முகமூடிக் கொள்ளையர் அவரையும் மனைவியையும் வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டு 15 பவுண் நகைகள், இரண்டரை லட்சம் ரூபா பணம் என்பனவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று முறையிடப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலகத்தின் கீழ் பணிபுரியும் கிராம அலுவலரின் வீட்டில் நேற்றுமுன்தினம் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

7 க்கும் மேற்பட்ட கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்து கிராம அலுவலரையும் மனைவியையும் வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுக் கொள்ளையடித்துள்ளனர்.

கிராம அலுவலரின் உறவினர் ஒருவர் வெளி >> 27ஆம் பக்கம்

## நான்காவது நாளாகவும் தொடர்கிறது பரவிப்பாஞ்சான் மக்களின் போராட்டம்

கிளிநொச்சி, ஓக. 17

பாதுகாப்பு அமைச்சர் அல்லது மீள்குடியேற்ற அமைச்சர் நேரடியாக வந்து எமது காணிகளில் உள்ள இராணுவத்தினரை எமது கண் முன்னே வெளியேற்றி எம்மை காணிகளுக்குள் செல்ல அனுமதித்தாலேயே எமது போராட்டத்தைக் கைவிடுவோம்.



இவ்வாறு தெரிவித்து பரவிப்பாஞ்சான் மக்கள் நேற்று நான்காவது நாளாகவும் கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். பரவிப்பாஞ்சான் மக்களது 13 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைக்க உள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தார்.

கடந்த சனிக்கிழமை காலை பரவிப்பாஞ் >> 27ஆம் பக்கம்

## வடக்குத் திணைக்களங்களில் 67 கோடி ரூபா முறையற்ற வழியில் செலவு

### கணக்காய்வு அறிக்கையைச் சுட்டிக்காட்டி எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17

வடக்கு மாகாண சபையின் 5 அமைச்சுக்களுக்கு உட்பட்ட 28 திணைக்களங்களின், 67 கோடியே 45 ஆயிரம் ரூபா பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய ஆவணங்கள் முன்வைக்கப்படவில்லை என்று கணக்காய்வுத் திணைக்களத்தினால் கண்டறியப்பட்டது.

2014ஆம் ஆண்டுக் கணக்காய்வுத் திணைக்கள அறிக்கையிலேயே இந்த விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார். >> 27ஆம் பக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி ஓக.17
சாவகச்சேரி அல்லாரை தம்பு தோட்டப் படை முகாமுக்கு அருகில் உள்ள கடற்கரையோரக் காணியொன்றில் வெடிக்காத நிலையில் 8 கைக்குண்டுகள் நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளன.
அந்தப் பகுதியில் உள்ள காணியொன்றைத் துப்புரவு செய்த வேளை வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று காணப்பட்டதையடுத்து காணி உரிமையாளரால் அருகில் உள்ள படை முகாமுக்குத் தகவல் வழங்கப்பட்டது.
அங்கு விரைந்த படையினர் சோதனையிட்டபோது 8 இடங்களில் புதைந்திருந்த கைக்குண்டுகளை மீட்டனர்.
இந்தக் குண்டுகளைச் செயலிழக்கச் செய்வதற்காகக் கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்து யாழ். சிறப்பு அதிரடிப் படையினர் மூலம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது
1996 ஆம் ஆண்டு தொடக்கம் அல்லாரை தம்புதோட்ட முகாம் பகுதியில் படையினர் நிரந்தரமாகத்தங்கியுள்ளனர். 2010ஆம் ஆண்டுவரை அந்தப் பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டதுடன் படையினருக்குப் பயிற்சி வழங்கும் முகாமாகவும் செயற்பட்டது.
அத்துடன் அங்கு பல இடங்களில் காவலரண்கள் இருந்தன எனவும், தற்போது அவை அகற்றப்பட்டுப் பொதுமக்கள் தமது காணிகளில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
தம்புதோட்டத்தில் இப்போது 52 ஆவதுபடையணியின்தலைமை அலுவலகம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.
(த-9)

# சவூதி, குவைத் குழு நேற்று யாழ். வருகை

## முஸ்லிம்களுக்கு மூன்று இடங்களில் தொடர்மாடி அமைப்பது குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக. 17
சவூதி அரேபியா மற்றும் குவைத் நாட்டுப் பிரதிநிதிகள் குழு அமைச்சர் ரிசாத் பதியுதீனுடன் நேற்று யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டு முஸ்லிம்களுக்கான வீடமைப்புத் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.
மூன்று இடங்களில் தொடர்மாடிக் குடியிருப்புக்களை அமைப்பது தொடர்பில் இந்தக் குழுவினர் ஆராய்ந்துள்ளனர் எனக் கூறப்பட்டது.
சவூதி அரேபியா மற்றும் குவைத் நாட்டின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினரை அமைச்சர் ரிசாத் பதீயுதீன், யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு நேற்று அழைத்துச் சென்றார்.
இந்தக் குழுவினர் அங்கு முஸ்லிம் மக்களுக்கான வீட்டுத் திட்டத் தேவையை நிறைவு செய்வது தொடர்பான வழிமுறைகளை நேரில் ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழும் முஸ்லிம்களிடம் அதிகமாக முக்கால் பரப்புக் காணிகளே காணப்படுவதால் மாநகர சபையின் சட்டத்துக்கமைய வீடுகளை அமைக்க முடியாமல் உள்ளமை தொடர்பிலும் இதன் போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.
இதனால் இங்கு வாழும் அனைத்து முஸ்லிம்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அடுக்கு மாடிகளை அமைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டது. இதன்படி யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம்களுக்காக மூன்று இடங்களில் அடுக்குமாடி வீடுகளை அமைப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.
யாழ்ப்பாணம் மூர் வீதியில் உள்ள பல காணிகளையும் நேரில் சென்று பார்வையிட்ட இந்தக் குழுவினர், இதில் மூன்று இடங்களைத் தேர்வு செய்வது தொடர்பில் கலந்து ரையாடியுள்ளனர்.
இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மக்களுக்கும் வீட்டு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பில் இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
(த-101)

## முல்லைத்தீவு இளையோருக்கு பொலிஸாரால் நீச்சல் பயிற்சி



முல்லைத்தீவு, ஓக. 17
முல்லைத்தீவு மாவட்ட இளையோருக்கு பொலிஸாரால் நீச்சல் பயிற்சி வழங்கப்பட்டது.
இந்தப்பயிற்சிமுல்லைத்தீவு நாயாற்றுக் கடற்பரப்பில் நேற்று வழங்கப்பட்டது.
கடலில் பயணிக்கும் போது, இயற்கை இடர் மற்றும் கடலில் மூழ்க நேரிடும் சந்தர்ப்பங்களில், இலகுவான முறையில் எவ்வாறு நீந்திக்கரை சேர்வது தொடர்பாகவே இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். பயிற்சியின் நிறைவில் பயிற்சி பெற்றவர்களுக்குப் பொலிஸ்மா அதிபர் கையொப்பமிட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (வ-21)

## வீட்டிலுள்ளவர்கள் கோயிலுக்கு சென்றவேளை நகைகள் திருட்டு

### *நல்லூரில் திங்களன்று இரவு சம்பவம்*

நல்லூர் முன் வீதி, கச்சேரி - நல்லூர் வீதி ஆகிய இடங்களிலுள்ள 2 வீடுகளில் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.
நேற்றுமுன்தினமிரவு சம்பவங்கள் இடம்பெற்றன. நல்லூர் முன் வீதியில் 6 பவுண் நகை மற்றும் 20 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
கச்சேரி வீதியில் கொள்ளையர் கத்தி முனையில் சுமார் 20 பவுண் என மதிப்பிடப்படும் நகைகளைக் கொள்ளையடித்ததாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. வீட்டில் உள்ளவர்கள் கோயிலுக்குச் சென்றிருந்த நிலையில் திருட்டு இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,107)

## ஐங்கரநேசனின் சாட்சிகள் நேற்று சபையில் மௌனம்

யாழ்ப்பாணம், ஓக. 17
ஆளும் கட்சி உறுப்பினர்களான விந்தன் மற்றும் அன்ரனி ஜெகநாதன் ஆகியோரிடம் முதலமைச்சரை பதவி நீக்கும் நோக்குடன் அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராகச் செயற்படுமாறு கோரி அணுகியவர்கள் யார் என்பதை அவர்கள் இருவரும் சபையில் வெளிப்படுத்த வேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன் பகிரங்கமாகக் கேட்டார். எனினும் இருவரும் நேற்றுப் பதிலளிக்காமல் இறுதி வரை மௌனம் காத்தனர்.
"முதலமைச்சரை அகற்ற வேண்டும். அதற்கு முன்னோடியாக என்னை அகற்ற வேண்டும். இவ்வாறு தெரிவித்து, எனக்கு எதிரான விசாரணை பிரேரணையைக் கொண்டு வருமாறு உறுப்பினர் விந்தனிடம் கேட்டிருக்கின்றனர். இதனை விந்தனே என்னிடம் தெரிவித்தார். பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதனிடம், என்னை நீக்குவதற்கான கடிதத்தில் கையெழுத்து வாங்குமாறு 'ஜிஞ்சர்' குழுவினர் கேட்டிருக்கின்றனர். இதனை அவரும் என்னிடம் தெரிவித்தார்' என்று கடந்த அமர்வில் அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவித்தார்.
இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற அமர்வில் உரையாற்றிய ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன், முதலமைச்சரைப் பதவி நீக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் யார் செயற்படுகின்றார்கள் என்பது பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். அமைச்சர் ஐங்கரநேசன், ஆளும் கட்சி உறுப்பினர்களான விந்தன் மற்றும் அன்ரனி ஜெகநாதன் ஆகியோர் தன்னிடம் தெரிவித்தாக குறிப்பிட்டார்.
முதலமைச்சரை நீக்குவதற்காக அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராகச் செயற்படுமாறு விந்தன் மற்றும் அன்ரனி ஜெகநாதன் ஆகியோரிடம் கேட்டுக்கொண்டவர்களை இங்கே பகிரங்கப்படுத்த வேண்டும். முதலமைச்சரைக் காண்பித்து யாரும் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கக் கூடாது என்று தெரிவித்தார்.
இதன் பின்னர் ஆளும் கட்சி உறுப்பினர் விந்தன், பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன் ஆகியோர் பல தடவைகள் சபையில் உரையாற்றியபோதும், அவ்வாறு தம்மைக் கேட்டுக் கொண்டவர்கள் யார் என்பதை இறுதி வரையில் பகிரங்கப்படுத்தாமல் மௌனம் காத்தனர். (வ-5)

## கோப் குழுவின் ஆவணங்களுக்கு பாதுகாப்பு இல்லை

### அதன் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 17
கோப் குழுவின் ஆவணங்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.
அத்துடன் கோப் குழுவில் பல குறைப்பாடுகள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அரசினால் தனக்கு வழங்கப்படவிருந்த சொகுசு வாகனத்துக்கு நிதி ஒதுக்கப்பட்ட விடயத்தைப் பிரபல்யப்படுத்தி கோப் குழுவையும் விசாரணைக்கு உட்படுத்தச் சிலர் முயற்சிப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி குறிப்பிட்டார்.
எனினும் எந்தவித வாகனத்தையும் தான் அரசிடம் கோரவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.
இதேவேளை, கோப் குழுவின் தலைவருக்கும், அரச கணக்காய்வாளர் தலைவருக்கும் வாகனங்கள் கொள்வனவுக்காக அரசு 9 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## பொலித்தீன் பைகளில் பொதியிட்டு விற்கத் தயாரான கசிப்பு சிக்கியது

### *தருமபுரம் பொலிஸாரின் தேடுதலில்*

கிளிநொச்சியில் பாழடைந்த வீடொன்றில் சட்ட விரோதமாக உற்பத்தி செய்யப்பட்டு, வித்தியாசமான முறையில் பொதிசெய்யப்பட்டு விற்பனைக்கு தயாரான நிலையில் இருந்த 154 போத்தல் கசிப்புகைப்பற்றியதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி, தருமபுரம், கட்டைக்காட்டுப் பகுதியில் இடம்பெற்றது.
தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசியத்தகவலை அடுத்து கட்டைக்காடு 4ஆம் வீதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் தேடுதல் மேற் கொள்ளப்பட்டது. கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் அங்கிருந்து தப்பித்தனர். உற்பத்தி செய்யப்பட்ட 154 போத்தல் கசிப்பு மீட்கப்பட்டது.
இந்தக் கசிப்பு 20 ரூபா பெறுமதியான 8 பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு வித்தியாசமான முறையில் இருந்தன. அந்த பொலித்தீன் பைகளை சோதனையிட்டபோதே அதனுள் கசிப்பு அடைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட கசிப்பு நீதிமன்றில் பாரப்படுத்தப்படும்எனதருமபுரம்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சதரங்க தெரிவித்தார். (வ-21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டுப் புள்ளிகளில் மாவட்ட ரீதியில் மாற்றம்

## கூறுகின்றார் கல்வி அமைச்சர்

கொழும்பு, ஓக. 17

உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய மாவட்ட ரீதியாக வெளியிடப்படும் வெட்டுப் புள்ளிகளில் மாற்றம் கொண்டு வரப்பட உள்ளது.

மாவட்ட வெட்டுப்புள்ளிகள் ஊடாகப் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும்நடவடிக்கையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட உள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். மாணவர்கள் இதன் காரணமாகவே தமது சொந்த மாவட்டங்களில் பரீட்சைகளுக்குத் தோற்றாமல் வேறு மாவட்டங்களில் தோற்றுவதாகவும், இதனைத் தடுப்பதற்காகவே குறித்த மாவட்ட வெட்டுப்புள்ளிகளில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (த-4)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
16.08.2016 | 2018 | நீலம்
சிம்மம்
வெற்றி இலக்கங்கள்
12 41 43 59
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 41,40,980 /-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919
அல்லது நேரடி அழைப்பு 1919

நியத்த ஜய
488
16.08.2016
மஞ்சள்
03 12 47 60 A
1,16,05,240/=
2016.08.19
Tel: 011 4 824 824

அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 9,11,15,620/-
037
2016.08.16
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
Z 04 06 61 62
கோடிபதி ஷனிதா
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது நேரடி அழைப்பு 011 4 824 824

Invest in Your Future @ICBT Jaffna Campus
Apply now for September Intake 2016



Entry Criteria
• G.C.E. A/L or Equivalent Qualification
• Certificate in related field
QUALITY ASSURED AND MODERATED BY
CARDIFF METROPOLITAN UNIVERSITY - UK
HND CIVIL ENGINEERING
HND QUANTITY SURVEYING
Duration 02 Years
» Career Path
MSc
BSc
HND
A/L's
DEGREE COMPLETION IN SRI LANKA
For registrations or more informations
Thiru - 076 928 9810
thiru@icbtcampus.edu.lk
Roy - 077 074 6553
merojan@icbtcampus.edu.lk
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
National Business Excellence 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk

யாழ் மண்ணில் முதல் முறையாக!
அறிமுகப்படுத்துகிறோம்
DIGITAL Offset Printing



6 colour
2800 DPI



இச் சேவை முலம்........
Business Cards
Letterheads
Certificate
Calenders
Catalogs
Book Cover
Brochures
CD Label
CD Cover
Stickers
Menu Cards
Invitation Card
உலகத்தரம் வாய்ந்த பிரதியாக்கற் சேவையை வழங்கும்
MOORTHY
digital imaging service
021 222 1358

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF SKILLS DEVELOPMENT AND VOCATIONAL TRAINING

UNIVERSITY COLLEGE OF JAFFNA

### VACANCIES

Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna.

**1. LECTURER (PROBATIONARY)- FOOD TECHNOLOGY**

**Qualifications:**

1. A Degree with specialization in a relevant subject with First Class or Second Class (Upper Division) Honours.

OR

2. A degree with specialization in a relevant subject with Second Class (Lower Division) Honors and at least 01 year of experience in teaching /research/professional work in recognized mercantile establishment /postgraduate studies in a recognized University or Higher Education Institution;

OR

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other general degree with at least Second Class Honors,

AND

(b) A Postgraduate Degree with duration of at least 02 academic years in the relevant subject with a research component by way of thesis/dissertation;

OR

4. (a) A Degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) One year Master Degree in the relevant subject or equivalent further professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka.

AND

(c) Five (5) years professional experience after graduation or after securing professional qualification given in 4(a).

OR

5. (a) A degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by Act of parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) Eight (8) years professional and/ or teaching experience after graduation or after securing professional qualification given in 5(a)

**Age Limit** - 22 – 60yrs
**Selection Procedure**: Through an Interview.
**Salary Scale**: U-AC 3 (IV) - 2006A- Rs. 27,775 – 10 x 645 - 13 x790 – 8 x 1050 – 52895 p.m

**2. LECTURER (PROBATIONARY) / VISITING LECTURER - COSMETOLOGY (BEAUTY CULTURE)**

**Qualifications:**

1. Candidates shall possess the academic qualifications required for the Category 1 Mentioned above

OR

2. National Vocational Qualification (NVQ) Level 5 or equivalent in the relevant field.

**Age Limit** - 22 – 60yrs
**Selection Procedure**: Through an Interview.
**Salary Scale**: U-AC 3 (IV) - 2006A- Rs. 27,775 – 10 x 645 -13 x790 – 8 x 1050 – 52895p.m (For Permanent Posts)

**3.DEMONSTRATORS- BUILDING SERVICES TECHNOLOGY (Mechanical &Electrical), PRODUCTION TECHNOLOGY (Mechanical & Manufacturing Technology) and FARM MACHINERY TECHNOLOGY**

**Qualification:**

- A Degree in the relevant filed

**Age Limit**- 22 – 45yrs
**Selection Procedure**: Through an Interview.
**Salary Scale**: U-AC-1 2006A Rs.21,370p.m (Fixed)
**Nature of Appointment** :Temporary with entitlement to EPF & ETF

**4. LABORATORY ASSISTANT– FOOD TECHNOLOGY**

**Qualifications:**

1. Persons who have sat for the G.C.E. (O/L) Examination and passed a minimum of 02 subjects

AND

2. National Vocational Qualification (NVQ) Level 4 in the relevant field.

**Salary Scale**:U- PL3- 2006A – Rs.15,650 – 10X140 – 10 X155 – 10X185 -12 X200 – 22,850p.m
**Age Limit** - 18 – 45yrs
**Selection Procedure**: Through a Trade test & Interview.

**5. MAINTENANCE TECHNICIAN**

**Qualifications:**

(a) Having passed the G.C.E. (O/L) Examination in six subject in one sitting with credit passes for 04 subject including;
(i)Sinhala/Tamil
(ii)English Language
(iii)Mathematics

(b) Having achieved the performance level required to follow a tertiary education course by passing the required number of subjects other than the 'General Papers' at the G.C.E.(A/L) Examination.

AND

(c) Not below National Vocational Qualification (NVQ) Level 5 in Electronics, Electrical, Multi Media, Instructional Material Development, Mechanical& ICT.

**Salary Scale** : U-MT-12006A - Rs 16,535-7X155-11X185-10X245-13X320-26,265p.m
**Age Limit** - 18 – 45yrs
**Selection Procedure**: Written competitive Examination & Interview.

**Nature of Appointment:**
✓ Demonstrator - Temporary with entitlement to EPF & ETF, Period of appointment is limited to one year
✓ All Other Posts - Permanent with entitlement to EPF & ETF (Except Visiting)

❖ Other Government Approved Allowances.

- Specimen Application form and further details are available at www.ucj.lk. Duly filled applications forms indicating academic and professional qualifications should have sent to "Assistant Registrar, University College of Jaffna, No 29, Brown Road, Kokuvil, Jaffna" by Registered post on or before 26th August 2016.
- Desired post applied should indicate clearly on the top left hand corner of the envelope
- Applicants from Higher Education Institutions, Government Departments and Government Corporations should apply through the Heads of such Institutions. Applications which do not conform to this requirement will be rejected. Such applicants are strongly advised to submit an advance copy to the address given above.
- Only short listed applicants will be called for the written examination and or for the interview.

Assistant Registrar
University College of Jaffna
17.08.2016


# சிறுமியுடன் துர்நடத்தை; சந்தேக நபர்களுக்கு மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஓக. 17

பளையில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து பதின்ம வயது சிறுமியைத் துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கும், விடுதி நடத்துநருக்கும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்க மறியலை நீடித்தது கிளிநொச்சி நீதிமன்று.

இந்த மாத ஆரம்பத்தில் பதின்ம வயதுச் சிறுமியை 23 வயது இளைஞன் பளையில் உள்ள விடுதியில் வைத்துத் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்று சிறுமியின் பெற்றோரால் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதையடுத்து நீதிமன்றால் விடுதி,மறு அறிவித்தல்வரை சீல் வைத்து மூடப்பட்டது. இந்த வழக்கில் மூன்று பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இரு தினங்களுக்கு முன்னர் ஒருவர் உயிரிழந்தார்.

(ற-ரி3)


**மணமக்கள் தேவை**

- 1986 ரோகினி இந்து M.A அரசபணியில் உள்ள பெண்ணுக்கு அரசபணி அல்லது அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரியும் மணமகன் தேவை.
- 1990, மகம், இந்து, B.Com, அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரியும் ஆணுக்கு அரசபணி அல்லது அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரியும் மணமகள் தேவை.

கிளி/முல்லை/ வவுனியா மாவட்டத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

076 577 4849


# புதிய பல்கலை அமைக்க அரசு திட்டம்

கொழும்பு, ஓக.17

தெஹியத்தகண்டி பிரதேசத்தில் புதிய பல்கலைக் கழகம் அமைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

தற்போதைய அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முன்மொழியப்பட்டுள்ள முக்கிய அம்சங்களில் இதுவும் ஒன்று. இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடப்படவுள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார். ஒலுவில் துறைமுகத்துக்குஅண்மித்த பகுதியில் மீன்பிடி வலயம் ஒன்றை உருவாக்கவும் அரசு கவனம் செலுத்தியுள் ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(ற-4)


**CAREER OPPORTUNITY**

We, Sarukaya construction (Pvt) Ltd is looking for suitable candidates against following positions for building / Treatment Plants Project.

**1. Site Engineer(Civil)**
(Degree Holder with 3years Experience)

**2. Technical Officer**
(NDT/HNDE/NCT Civil 3year Experience or Equivalent)

**You CV and Covering letter must be send to**
**Email: Sarukaya10@gmail.com Before 22nd August 2016**
**Address: No.27, Navalar Road, Jaffna.**

**பெண் வேலையாள்கள் தேவை**

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்திலுள்ள சைவ, அசைவ உணவகத்துக்கு சப்ளையர்ஸ் பெண்கள் இருவர் தேவை.(வயது 25-35)

021 221 7819, 077 990 1340

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**Personal Class**

தரம் 03 - A/L வரையான மாணவர்களுக்கு English, Spoken with Grammar, சிங்களம் என்பன வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

077 495 6590

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம். ஐயனார் கோயில் வீதியில் கெங்காதரன் வைத்தியசாலைக்கு முன் உள்ள ஒழுங்கையில் வீடும் பத்து (10) பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

076 714 8126

**யாழ்ப்பாணம் ஈ-சிற்றி கல்லூரியில் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

SINHALA LANGUAGE COURSE
3 மாதங்களில் சரளமாக எழுதப் பேசக் கூடிய சிங்களப் பாடநெறி.
கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சைக்கான துரித தயார்ப்படுத்தல் வகுப்புக்கள்
ஆரம்பம் : 20.08.2016 காலை 8.30

E-City College Of English
இல.372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 7106/ 077 340 0418/ 077 061 0271

**விற்பனைக்கு**

பொமேரியன் ஆண், பெண் நாயும், பொக்கட்ஸ் பெனியர் ஆண், பெண் நாயும், மணித்தாரா, முயல், வெள்ளடியன், ஒரு வயது நிரம்பிய யமுனா பாறி ஆட்டுக்கடாய், J.C இன நாம்பன் கன்று, சில்கி என்பன விற்பனைக்குள்ளன.

மயூரன் பாம் சென்ரர்
நீர்வேலி கந்தசாமி கோயில் பின்வீதி.
077 015 8690

**ASTROLOGY Softwares Based on வாக்கிய பஞ்சாங்கம்**

ICS நிறுவனத்தாரின் வாக்கிய பஞ்சாங்க முறையிலான Softwares விற்பனைக்குண்டு. துல்லியமான கணிதம், எல்லா நாடுகளுக்குமானது. திருமணப் பொருத்தம், சுபமுகூர்த்தம், குழந்தை பெயர், நியுமாலஜி உள்ளடக்கப்பட்டுள்ளது. ஜாதகம் 7,11,21,115 பக்கங்களில் பிரிண்ட் செய்யும் வசதி.

077 789 1945 - கமலநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு எதிர்க்கட்சியின் தென்கொரியா பயணம் பெரும் வெற்றியாம்



கொழும்பு, ஓக.17
மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் தென் கொரியாவுக்கான பயணம் வெற்றியளித்துள்ளது. அந்த நாட்டின் அரச தலைவர்கள் மற்றும் இலங்கையர்களுடன் ஆக்கபூர்வமான பேச்சு நடத்தப்பட்டது. இவ்வாறு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

அதில் அவர் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் மற்றும் நாட்டுக்கு எதிரான நெருக்கடியான நிலைமைகள் தொடர்பில் அந்த நாடுகளில் வாழும் இலங்கையர்கள் நன்கு அறிந்துள்ளனர்.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான சுயநல அரசியலுக் காக கூட்டு எதிர்க்கட்சியினர் தென் கொரியாவுக்குச் செல்லவில்லை. உலக நாடுகளில் உள்ள இலங்கையர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்திக்க விரும்புகின்றனர். அதேபோன்று அவர்கள் சமகால சூழல்தொடர்பில்அறிந்துகொள்ள விரும்புகின்றனர்.

சுமார் 4 ஆயிரம் இலங்கையர்கள் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்தனர். பல்வேறு கூட்டங்களில் கலந்து கொண்டோம். அந்த நாட்டு அரசியல் தலைவர்களையும் சந்தித்தோம். தென்கொரியாவுக்கான இலங்கையர்களின் வேலை வாய்ப்பு விடயத்தில் மகிந்த ராஜபக்ச ஆற்றிய சேவை மகத்தானது – என்றார். (ந-4)

# பிரான்ஸ் கடற்படைக் கப்பல் திருமலை துறைமுகத்தில்

கொழும்பு, ஓக. 17
பிரான்ஸின் கடற்படைக் கப்பலான ரெவி நல்லெண்ணப் பயணமாக திருகோணமலை துறைமுகம் வந்துள்ளது. கடற்படையின் பாரம்பரியங்களுடன் குறித்த கப்பலுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது என்று கடற்படை தெரிவித்தது.

கிழக்கு மாகாண கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ட்ரா விஸ்ஸுக்கும் பிரான்ஸ் கடற் படை கப்பலின் கட்டளையிடும் அதிகாரிக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. கிழக்கு மாகாண கடற்படை கட்டளைக்கான தலைமையகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மாகாண பிரதி கட்டளை தளபதி மெரில் சுதர்சன உள்ளிட்ட ஏனைய அதிகாரிகளும் பங்கு பற்றினர்.

இந்த உத்தியோகபூர்வ சந்திப்பில், நினைவு பரிசுகளும் பரிமாற்றிக் கொள்ளப்பட்டன. நாளை வியாழக்கிழமை வரை இந்தக் கப்பல் துறைமுகத்தில் தங்கியிருக்கும்.

அண்மையில் அமெரிக்காவின் யூ.எஸ்.எஸ். நியூ ஓர்லியன்ஸ் கடற் படை கப்பல் இலங்கைக்கு வந்திருந்தது. (ந-4)

# மத சுதந்திரத்தின் தனித்துவத்துக்கு மதிப்பளித்தாலே ஒற்றுமை ஏற்படும்

## யாழ்ப்பாண இந்து சமயப் பேரவை சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 17
இலங்கையில் இந்துக்களும் பௌத்தர்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டுமாயின் மத சுதந்திரத்தின் தனித்துவத்துக்கு மதிப்பளித்து நடக்க வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண இந்து சமயப் பேரவை தெரிவித்தது.

தமிழ் பிரதேசங்களில் எந்தவித காரணங்களும் இன்றி புத்தர் சிலைகள் அமைக்கப்படுவது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழ் பிரதேசங்களில் புத்தர் சிலைகளை அமைத்து வருவது நாட்டில் மீண்டும் குழப்ப நிலையை ஏற்படுத்துவதற்கான ஒரு பெரும் முயற்சி. அரசு உடனடியாக தடுத்து நிறுத்தாவிட்டால் நாடு மீண்டும் ஒரு பெரும் அழிவைச் சந்திக்கும். எந்த விதக் காரணங்களும் இன்றி புத்தர் சிலைகள் அமைக்கப்படுவது தமிழ் மக்களுக்கு சினமூட்டும் செயல். இந்த நடவடிக்கையின் பின்னணியில் எவர் செயற்படுகின்றனர் என்பதை அரசு கண்டறிந்து, அவர்களுக்கு புத்திமதி கூறவேண்டும். போரால் அழிக்கப்பட்ட ஆலயங்களைப் புனரமைக்க கோடிக்கணக்கான பணத்தை மக்களே செலவிட்டுள்ளனர். கண்துடைப்புக்காக சில லட்சம் ரூபாவை அரசு வழங்கியுள்ளது. இந்து ஆலயங்கள் இருந்த இடங்களில் புத்தரின் சிலைகள் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இதனை உடனடியாக அரசு தடுத்து நிறுத்த வேண்டும் –என்றுள்ளது. (ந-ரி3)

# தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து மு.கா. செயற்படுவதைக் குழப்ப முயற்சி

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.17
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட முயற்சிக்கின்றபோது சிலதரப்பினர் அதனை குழப்பி மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர்.

இவ்வாறு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கல்முனையில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்து செயற்படுகின்றோம். அதனை சிலர் குழப்பத் திட்டமிட்டுள்ளனர். இவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்துபவர்களுக்கு மக்கள் அங்கீகாரம் இல்லை. அவர்கள் மக்களை குழப்புவதற்குப் போலியான கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

தற்போது நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது. எவரையும் கடத்தி – அச்சுறுத்தி எதனையும் செய்யலாம் என்ற காலம் மாறியுள்ளது. நிரந்தரத் தீர்வு என்பது எல்லா சமூகமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிம்மதியான தீர்வாக அமைய வேண்டும்.

நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொள்வதற்காக காலம் தற்போது நெருங்கி வருவதனால் சில விட்டுக் கொடுப்புக்கள் அவசியம் – என்றார். (ந-4)

# உயர்தரப் பரீட்சை கண்காணிப்பாளர்கள் நால்வர் பணி நீக்கம்

கொழும்பு, ஓக.17
கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை மண் டபங்களில் பணியாற்றிய 4 கண்காணிப்பாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். பரீட்சைகள் திணைக்களம் இதனைத் தெரிவித்தது.

கிரிஉல்ல, நுவரெலிய மற்றும் வெலிவேரிய ஆகிய கல்வி வலயங்களில் பணியாற்றிய கண் காணிப்பாளர்கள் நால்வரே பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

குறித்த நால்வருக்கும் பரீட்சை மண்டபங்களில் பணிபுரிய வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார். (ந-4)

# முடிவுக்கு வந்தது இலங்கையரின் எதிர்ப்பு நடவடிக்கை

கொழும்பு, ஓக.17
டுபாயிலுள்ள சத்துவா எனும் இடத்தில், இலங்கை தொழிலாளர்கள் நடத்திய எதிர்ப்பு நடவடிக்கை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது என்று டுபாயிலுள்ள இலங்கை தூதுவர் காரியாலயம் தெரிவித்தது.

சத்துவா நகர பஸ் தரிப்பு நிலையத்தில் 32 தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படுகின்றது. தாம் பணியாற்றிய நிறுவனத்தில் ஊதியம்வழங்கப்படாமை, வசதி வாய்ப்புக்கள்செய்து கொடுக்கப்படாமை போன்ற காரணங்களுக்காக அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று அங்குள்ள அதிகாரிகள் உடன்பட்டதால் போராட்டம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-4)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோ அமைப்பின் முகவராகச் செயற்பட்டார் மாத்தையா

## *இந்திய ஊடகவியலாளரின் நூலில் தகவல்*

விடுதலைப் புலிகளின் அமைப்பிலிருந்த மாத்தையா எனப்படும் (கோபாலசாமி மகேந்திரராஜா) இந்தியாவின் வெளியகப் புலனாய்வுப் பிரிவான றோவின் முகவராகச் செயற்பட்டிருந்தார்.

இவ்வாறு இந்திய ஊடகவியலாளர் நீனா கோபால் எழுதி வெளியாகியுள்ள நூல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1991ஆம் ஆண்டு படுகொலை செய்யப்படுவதற்கு முன்னதாக, ராஜீவ்காந்தியை செவ்வி கண்ட நீனா கோபால், ராஜீவ்காந்தி படுகொலை என்ற தலைப்பில் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

மாத்தையா ஒரு றோ உளவாளி. 1989ஆம் ஆண்டு தொடக்கத்தில் றோ அவரை உளவாளியாக நியமித்திருந்தது. ஆழமாக அவர் புலிகள் இயக்கத்துக்குள் எழுச்சி பெற்று, பிரபாகரனை அகற்றி விட்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவிருந்தார். றோவுடன் தொடர்பில் இருந்த மாத்தையா பின்னர் இந்தியப் புலனாய்வு முகவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார். அதை இந்திய இராணுவப் புலனாய்வுப் பிரிவோ, ஐபி எனப்படும் புலனாய்வுப் பிரிவோ அறிந்திருக்கவில்லை.

1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று பற்றிய தகவலை இந்தியாவுக்கு மாத்தையா வழங்கியிருக்கலாம் என்று விடுதலைப் புலிகள் சந்தேகித்தனர். அந்தக் கப்பலில் பயணம் செய்த பிரபாகரனின் இளவயது தம்பியான, விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு உயிரிழந்தார். மாத்தையா விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு, முகாம் ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பல வாரங்களாக சித்திரவதை செய்யப்பட்டார். அவர் தகவல் சொல்லும் வரையில் சித்திரவதைகள் இடம்பெற்றன. அவர் கைது செய்யப்பட்டு 19 மாதங்கள் கழித்து, 1994 டிசெம்பரில் கொல்லப்பட்டார். அவருடன் 257 வரையான அவரது ஆதரவாளர்களும் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகளின் பாணியில் அவர்களின் உடல்கள் குழியொன்றில் போடப்பட்டு எரிக்கப்பட்டன.

1987ஆம் ஆண்டு தொடக்கம் 1990ஆம் ஆண்டு வரை, இந்திய இராணுவத்தினர் இலங்கையிலிருந்தபோது விடுதலைப் புலிகளுக்குள் றோ ஊடுருவிய போதிலும், இந்திய இராணுவமும், சிவில் புலனாய்வுப் பிரிவும், இராஜதந்திரிகளும் குறுக்கு நோக்கங்களுக்காகப் பணியாற்றினர். நாம் சமிக்ஞைகளைச் சரியாகப் படித்திருந்தால், பிரபாகரனின் மனதில் என்ன வெளிப்படுகிறது என்பதை நாம் விளங்கிக் கொண்டிருந்தால், நாம் அதனை(ராஜீவ் காந்தி படுகொலை) தடுத்திருக்க முடியும் என மூத்த றோ அதிகாரி ஒருவர் கூறினார். நாம் ராஜீவ்காந்தியைப் பாதுகாக்கத் தவறிவிட்டோம்- என்றும் அவர் கூறினார். (ற-4)

**நீங்காத நினைவுகளுடன்**
**ஆண்டுகள் 10**



தோற்றம்
22.04.1981

மறைவு
17.08.2006

திதி:
17.08.2016

**அமரர் சுகுணராசா நிமலன்**

என்றும் உன் நினைவுகளுடன் ஆத்மசாந்தி
வேண்டி நிற்கும் உறவுகள்

அம்மா, அப்பா, மனைவி,
மகன், அண்ணா, அண்ணி,
அக்கா, அத்தான்
மற்றும் மருமக்கள்.

இல.265/2,
ஞானவைரவர் வீதி,
கரந்தன்.

**ஈர விழிகளுடன்**
**31ஆம் நாளில்**

அமரர்
**கந்தையா வைகுந்தராஜா**



தாயின் அணைப்பில்
12.03.1945

ஆண்டவன் அணைப்பில்
18.07.2016

கடந்த 18.07.2016 அன்று எமது குடும்பத்துக்கு நேர்ந்த துயர் அறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்து, ஆறுதல் வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டோர், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களைப் பிரசுரித்தோர், சகல விதத்திலும் உதவி புரிந்த அத்தனை உறவுகளையும் நன்றியுணர்வுடன் நோக்குகின்றோம். எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 15.08.2016 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன.

இன்று (17.08.2016) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆடியபாதம் ஒழுங்கை,
சிவன்கோயில் வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிற்றம்பலம் மாணிக்கவாசகர்**
(ஓய்வுபெற்ற அதிபர்)



அறிவின் சிகரமாய்...
பாசத்தின் உறைவிடமாய்....
அன்பின் திருவுருவமாய்....
எம் எல்லோருக்கும் வழிகாட்டியாய்.....
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு
என்றும் இனியவராய்...
மாணவர்களுக்கு திசைகாட்டியாய்....
வாழ்ந்து காட்டிய - எம்
பாச தெய்வம் எம்மைவிட்டுப் பிரிந்து
இரண்டாண்டுகள் உருண்டோடி விட்டாலும் என்றும்
எம் உள்ளத்தில் இனிய நினைவுகளாய்
மலர்ந்திருப்பீர்கள் அப்பா...!

நீங்கா நினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**

சக்கடத்தார் வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

தோற்றம்
15.05.1952

மறைவு
17.08.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுவண் அரசின் பிடிக்குள்ளேயே காணி, பொலிஸ் அதிகாரங்கள்

## அரசமைப்பு உருவாக்கும் உப குழுவில் ஆராய்வு

கொழும்பு, ஓக. 17

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கை குறித்த உப குழுவில் கலந்துரையாடப்பட்டது.

மாகாண முதல்வர்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக வழங்காது, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் இதன்போது யோசனை முன்வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், மாகாண முதல்வர்களை உள்ளடக்கிய வகையில் தேசிய காணி ஆணைக் குழுவை அமைப்பது பற்றி பரீசிலிக்கப்பட்டதாக அறிய முடிந்தது.

அத்துடன், காணி, பொலிஸ் அதிகாரங்கள் முழுமையாக மாகாணங்களுக்கே வழங்கப்பட வேண்டுமெனவும் இதன்போது யோசனைகள் முன்வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசமைப்பை மறுசீரமைப்பதற்கு தேசிய அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது. இதற்காக முழு நாடாளுமன்றமும் அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டது. இந்த நடவடிக்கையைக் கையாள்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வழிநடத்தும் குழுவொன்று அமைக்கப்பட்டதுடன், ஒவ்வொரு விடயதானங்களுக்குமாக உப குழுக்களும் அமைக்கப்பட்டன. அந்தவகையில், நடுவண் அரசுக்கும், மாகாண அரசுக்குமிடையிலான அதிகாரப் பகிர்வு உட்பட இதர விடயங்களைக் கையாள்வதற்கு நியமிக்கப்பட்ட உப குழுவுக்கும், அரசமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கை எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றி மக்கள் கருத்தறிவதற்காக நியமிக்கப்பட்ட 'லால் விஜேநாயக்க' தலைமையிலான குழுவினருக்குமிடையில் கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் முக்கிய சந்திப்பொன்று நடைபெற்றது.

மாகாண சபைகளுக்குரிய அதிகாரப்பகிர்வு பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ள இந்தச் சந்திப்பில் முக்கிய சில யோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படவேண்டுமென நாம் கோரிக்கை விடுத்தோம். மக்களும் இதைத்தான் விரும்புகின்றனர் எனச் சுட்டிக்காட்டினோம். காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றியும் பேசப்பட்டது. மாகாண பொலிஸ் ஆணைக் குழுவொன்று நிறுவப்பட்டு, முதல்வர், ஆளுநர், பொலிஸ்மா அதிபர் ஆகிய மூன்று தரப்பினரினது பிரதிநிதிகளும் அதில் அங்கம் வகிக்கப்படவேண்டும். பதவி உயர்வு, நியமனம் உள்ளிட்ட விடயங்களில் இங்கு இணைந்தே முடிவெடுக்கப்பட வேண்டும். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிலேயே மாகாண பொலிஸ் ஆணைக்குழு செயற்படவேண்டும். பொலிஸ் அதிகார சர்ச்சைக்கு இதுவே சிறந்த தீர்வாக அமையும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், காணி அமைச்சின் கீழ் செயற்படும் வகையில் தேசிய காணி ஆணைக்குழுவொன்று நிறுவப்பட்டு அதற்கு மாகாண முதல்வர்கள் உள்வாங்கப்பட வேண்டும். மாகாண காணிகள் சம்பந்தமாக இந்த ஆணைக் குழுவில் கலந்துரையாடிய பின்னரே முடிவெடுக்கப்பட வேண்டும்' என்று சட்டத்தரணி லால் விஜேநாயக்க நேற்று 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

இதேவேளை இறையாண்மை, தேசிய பாதுகாப்பு, அதிகாரப் பகிர்வு ஆகியன தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் பிரதமர் தலைமையிலான வழி நடத்தும் குழுவிடம் இருப்பதால், மேற்படி குழு அந்தக் குழுவுக்கு அறிக்கையொன்றை விரைவில் கையளிக்கவுள்ளது என அறிய முடிகின்றது.

(வ-21)

## வளலாயில் ப.நோ.கூ. சங்க கிளை விரைவில்

யாழ்ப்பாணம், ஓக.17

வளலாயில் விடுவிக்கப்பட்ட பகுதியில் கூட்டுறவுக் கிளை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கான கட்டடத்தை யூ.என்.டி.பி. நிறுவனம் அமைத்துக் கொடுக்கவுள்ளது.

வலி. வடக்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டுறவுக் கிளை நிலையக் கட்டடம் அமைக்கப்பட உள்ளது. கிளை நிலையக் கட்டடத்துக்கான அடிக்கல் கடந்த வாரம் நடப்பட்டது. (ற-17)

## தொடர் இசைப் பேருரை

யாழ்ப்பாணம், ஓக.17

நல்லூர் கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு, தெய்வீக தொடர் இசைப் பேருரை, நல்லூர் ஆனதீ குருமூர்த்த ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடை பெறும். இன்று பாரத வம்சமும், நாளை பீஷ்மர் சபதமும், நாளை மறுதினம் பாண்டவர் ஜனனம் ஆகிய தலைப்புகளில் பேருரை நடைபெறும். (ற-ரி4)

# நல்லாட்சி அரசுக்கு எதிராக வடமராட்சியில் சுவரொட்டி

யாழ்ப்பாணம், ஓக.17

நல்லாட்சி அரசுக்கு எதிரான சுவரொட் டிகள் வடமராட்சி பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன. வெள்ளை சிவப்பு மற்றும் கறுப்பு நிறங்களில் சுவரொட்டிகள் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

ஆட்சியாளர்களே இந்தியாவிற்கு அடிபணியாது வடக்கின் மீனவர்கள் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்துவை, மாணவர் செயற்பாட்டாளர்களை அடக்குமுறை செய்வதை உடனடியாக நிறுத்து போன்ற வாசகங்கள் அவற்றில் காணப்பட்டன.

வடமாகாண கடற்றொழிலாளர்களின் இணையம் மற்றும் அகில இலங்கை, பொது மீனவர் சங்கம், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய தொழிற் சங்க மத்திய நிலையம் ஆகிய பெயர்கள் சுவரொட்டிகளில் காணப்படுகின்றன.

(ற-4,108)

# நாட்டின் பாதுகாப்புப் படைகள் பல்லினப்படுத்தப்பட வேண்டும்

## மக்கள் கருத்தறியும் செயலணியிடம் நாவிதன்வெளி இளைஞர்கள் கருத்து

அம்பாறை, ஓக. 17

நாட்டின் பாதுகாப்புப் படைகள் பல்லினப்படுத்தப்பட வேண்டும். சிறுபான்மை இனங்களிலிருந்து பாதுகாப்புப் படைகளுக்கு உள்வாங்குவதை அதிகரிப்பதும் மற்றும் பெரும்பான்மை இனத்திலிருந்து ஆட்சேர்ப்பதை மட்டுப் படுத்தவும் வேண்டும்.

இவ்வாறு கல்முனையில் நடைபெற்ற, நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியின் வலய மட்ட அமர்வில், நாவிதன் வெளிப்பிரதேச தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் பரிந்துரைத்தனர்.

கல்முனை கிறிஸ்தவ இல்ல மண்டபத்தில் நடைபெற்ற இந்த அமர்வில் நாவிதன் வெளிப் பிரதேச தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் சார்பில் பரிந்துரைகள் கருத்துக்களாகவும், எழுத்து மூலமும் முன்வைக்கப்பட்டன.

அவர்கள் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகளின், சகிப்புத்தன்மை அற்ற பேச்சுக்கள் தவிர்க்கப்பட வேண்டும். இனவாதத்தை தூண்டக்கூடிய பழைய விடயங்களைக் கதைத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். இதற்காக புதிய சட்டங்கள் இயற்றப்பட்டு அவற்றை முற்றாகத் தடை செய்ய வேண்டும்.

ஓர் இனத்துக்குப் பாதிப்பைக் கொண்டு வரக்கூடிய சட்டங்களைத் தடை செய்தல் வேண்டும். புதிய அரசமைப்பில் சிறுபான்மைக் காப்பீடுகள் ஏற் படுத்தப்பட வேண்டும்.

வேலையில்லாப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாகக் காணப்படுவது எமது கல்விமுறையில் காணப்படுகின்ற ஒவ்வாத தன்மையேயாகும். திறன் விருத்தியை மையப்படுத்திய கல்வி முறையாக கல்விமுறையை மாற்ற வேண்டும்.

இளைஞர்கள் தேர்தலில் பங்கு பற்றுபவர்களுக்கான கட்டாய விகிதாரசார ஒதுக்கீடு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் வழங்கப்படல் வேண்டும்.

தனது பொறுப்பை/சேவையை சரியாகச் செய்யாத பொதுமக்கள் பிரதிநிதியைத் திருப்பி அழைக்கின்ற முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

மக்களுக்கு அவசியமான சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமைக்கு அடிப்படைக் காரணம் கல்வி அறிவில்லாதவர்கள்/குறைந்தவர்கள் நாடாளுமன்றத்தில் இருப்பதே காரணம் என நாங்கள் கருதுகிறோம். நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கான அடிப்படைக் கல்வித்தகமை கட்டாயமாக்கப்பட வேண்டும்.

அபிவிருத்தித் திட்டங்கள் ஆட்சியில் இருக்கின்ற கட்சியை அடிப்படையாக வைத்து வழங்கப்படாமல், மாவட்ட ரீதியில் வழங்கப்பட வேண்டும்.

குற்றங்களுக்கு விரைவாகத் தீர்வு கிடைக்கக் கூடிய வகையில் நீதி சட்ட முறைமைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

அரச கரும மொழிச் சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்தலும், சகல அரச காரியாலய செயற்பாடுகளும் அரச கருமமொழியில் இடம்பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

போரால் சொத்துக்கள், உயிர்களை இழந்த நாவிதன்வெளிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டோர் எவருக்கும் இழப்பீடுகள் இதுவரை வழங்கப்படவில்லை. அவற்றை வழங்குவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கடந்தகால சம்பவங்களை நினைத்து முஸ்லிம்களுடன் தமிழர்கள் அவ நம்பிக்கையாக வாழ்கின்றனர். அவநம்பிக்கையைப் போக்கி, நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். – என்றனர்.

பிரதேச தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் கலந்து கொண்ட திறந்த கலந்துரையாடல் கூட்டத்தின் [illegible] விடயங்களே அமர்வுக்குப் பரிந்துரை செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-30)

## மக்கள் கருத்தறியும் செயலணியின் அமர்வு

வவுனியா, ஓக.17

போர்க் குற்ற விசாரணைப் பொறிமுறை, நல்லிணக்கம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் செயலணியின் அமர்வு இன்று வவுனியா பிரதே செயலக குணநாயகம் மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு இடம்பெறவுள்ளது என்று வவுனியா பிரதேசசெயலாளர் கா.உதயராஜா அறிவித்தார். (ற-402)

தரம் - 5
முன்னோடிப் பரீட்சை

பெற்றோர்களே!
உங்கள் பிள்ளை தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதுகின்றாரா?
சுயமான முன்னோடிப்பரீட்சை ஒன்றின் மூலம் உங்கள் பிள்ளையின் அடைவு நிலையை அறிய ஓர் அரிய சந்தர்ப்பம்.
தேசிய ரீதியாக ஒளிஅரசி சஞ்சிகை வழங்கும் இறுதிச் சந்தர்ப்பம் இது.
உங்கள் பிள்ளையும் முன்னோடிப் பரீட்சையில் பங்குபற்ற விரும்புகின்றீர்களா?

சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள்
ஒகஸ்ட் மாத ஒளிஅரசியுடன் இலவசமாக இணைக்கப்பட்டுள்ள சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாளுக்கு (பகுதி i,ii) உங்கள் பிள்ளைகள் மூலம் சுயமாக விடையளித்து கொழும்பு முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தால் மிகக் குறுகிய காலத்தில் உங்கள் வீட்டு முகவரிக்கு அந்த வினாத்தாள்கள் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் வீட்டு முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறை ஒன்றையும் சேர்த்து அனுப்புதல் அவசியமானது.

ஒகஸ்ட் மாத ஒளிஅரசியை
சுடர்ஒளி, உதயன் முகவர்களிடம்
பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக தொடர்புகளுக்கு
071 4273035, 071 8628369,
0718 628 351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டத்தரிப்பு பிரதான வீதியை சீரமைத்துத் தருமாறு கோரிக்கை

### ஆண்டிறுதிக்குள் காப்பெற் வீதியாகும் என வீதி அதிகார சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.17

பண்டத்தரிப்பு பிரதான வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது. அதைச் சீர்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த வீதியில் பெரும் குழிகள் காணப்படுகின்றன. வாகனங்கள் பயணிப்பது கடினமாகவுள்ளது. விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் அதிகரிக்கின்றன. பயணிக்கும் வாகனங்கள் சேதமடைகின்றன- என்று பிரதேச மக்கள் குறிப்பிட்டனர்.

ஓட்டுமடத்தில் இருந்து சித்தன்கேணி, பண்டத்தரிப்பு, மாதகல் வரை உள்ள வீதி காப்பெற் வீதியாக மாற்றப்படவுள்ளது. இந்த ஆண்டு முடிவுக்குள் காப்பெற் வீதியாக்கப்படும். வீதியில் ஏற்பட்டுள்ள சேதங்கள் திருத்தப்பட்டு, பாதசாரிகள் கடவைகள், ஒளிர்வுக் கற்கள் பதிக்கப்பட்டு சீரமைக்கப்படும்- என்று வீதி அதிகார சபையினர் தெரிவித்தனர். (ற-ரி4)

## ஓய்வூதியர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட ஏற்பாடு

தென்மராட்சி, ஓக. 17

தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களைப் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென்மராட்சிக் கிளையின் பிரதிநிதிகள் மாதாந்தம் முதலாவது மற்றும் மூன்றாவது புதன்கிழமைகளில் பிரதேச செயலகத்தில் சந்தித்து ஓய்வூதியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர்.

பிரதேச ஓய்வூதியர்கள், ஓய்வூதியம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக கிளைக் குழுவுடன் கலந்துரையாடித் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு கிளைத் தலைவர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

ஓய்வூதியம் மற்றும் நிதியத்தால் வழங்கப்படும் மருத்துவக் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை ஓய்வூதியர்கள், இந்தக் கிளையின் பிரதிநிதிகளைச் சந்தித்துத் தெரிவிக்க முடியும் என்று அவர் குறிப் பிட்டார்.

யாழ். மாவடத்தில் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் அதிகளவு உறுப்பினர்களைக் கொண்ட கிளையாகத் தென்மராட்சிக் கிளை உள்ளது. (ற-9)

# குப்பி விளக்கு வெளிச்சத்தில் 350 குடும்பங்கள்

### மின் வசதி தேவை எனக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக.17

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முத்துஐயன்கட்டுக் குளம், கனகரத்தினபுரம், தட்டயமலை, முத்துவிநாயகர்புரம் ஆகிய கிராமங்களில் உள்ள 350 குடும்பங்களுக்கு இது வரை மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. குப்பி விளக்கின் ஒளியில் இன்னல்களுக்கு மத்தியில் வாழும் தமக்கு மின்சார வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அந்தக் குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

படிப்படியாக மின் இணைப்புக்கள் வழங்கப்படும். இந்த மாத இறுதிக்குள் அனைத்துக் குடும்பங்களுக்கும் மின் இணைப்புக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்று முல்லைத்தீவு மாவட்ட மின்சார சபை அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

50 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பிரதேசத்தில் மின்சார வசதி இல்லை. கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அனைத்து இடங்களுக்கும் மின் வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்தக் கிராமங்களில் சுமார் 650 குடும்பங்கள் வாழ்கின்றன. அவற்றில் 300 குடும்பங்களுக்கு ஒன்றரை ஆண்டுக்கு முன்னர் மின்சாரம் வழங்கப்பட்டது. மிகுதி 350 குடும்பங்களுக்கும் இதுவரை மின்சார வசதி ஏற்படுத்தித் தரப்படவில்லை.

இந்தக் கிராமங்கள் காட்டின் அருகில் உள்ளன. யானைகளின் அட்டகாசத்தால் கிராமங்களில் உள்ளவர்கள் பெரும் அழிவுகளைச் சந்திக்கின்றனர். மாணவர்கள் குப்பி விளக்கின் ஒளியிலேயே கல்வியைத் தொடர்கின்றனர். மின்கம்பங்கள் நடப்பட்டு, மின் கம்பிகளும் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் மின்சாரம் வழங்க எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை- என்று கிராமங்களில் உள்ளவர்கள் கவலையுடன் கூறினர்.

இதுவரை மின்சாரம் வழங்கப்படாதுள்ள குடும்பங்களுக்கு கடன் அடிப்படையில் மின் இணைப்பு வழங்குகின்றோம். குறிப்பிட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்களும் மின் இணைப்புப் பெறுவதற்கான படிவங்களை எம்மிடம் சேர்ப்பித்துள்ளனர். படிப்படியாக மின் இணைப்புகள் வழங்கப்படும். இந்த மாத இறுதிக்குள் அங்குள்ள குடும்பங்கள் அனைத்துக்கும் மின் இணைப்பு வழங்கப்படும்.- என்று முல்லைத்தீவு மாவட்ட மின்சார சபை அத்தியட்சகர் தெரிவித்தார். (ற-ரி7)

## மரண அறிவித்தல்



மலர்வு
20 . 09 . 1948

உதிர்வு
14 . 08 . 2016

### திருமதி பாக்கியம் (கிளி) செல்லத்துரை

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கு சோமசுந்தரப்புலவர் வீதியை வசிப்பிடமாகவும், வவுனியா வேப்பங்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் செல்லத்துரை 14.08.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், செல்லத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும், தயாநந்தினி, தயானந்தன், (தயா - சுவிஸ்), சகுலாநந்தினி, சுதாநந்தினி, சுதாநந்தன் (ரமேஷ்) சதாநந்தினி (மீரா - USA), சதாநந்தன் (ஜெகன் - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற தியாகேஸ்வரி, சுப்பிரமணியம், கமலாம்பிகை, விமலா, தேவராசா (குகன் - சுவிஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவச்சந்திரன், (அபிராமி அரிசி ஆலை), சுகிர்தமலர் (சுகிர் - சுவிஸ்), நந்தகுமார் (அபிசன் பெற்றோல் செட், மந்திகை), பாலரூபன் (மக்கள் வங்கி), சயந்தினி, திரவியராஜா (குகன் -USA), நிர்மலஜோதி (ஜோதி - கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், நிரோஜன் (M.B.B.S.) அஜந்தன் (கட்டார்), நிவேதிகா (இலங்கைவங்கி) லிக்ஷனா, சாருஜா, சௌம்யா, தபிஷன் (சுவிஸ்), சஸ்மிதா, லக்ஷாயினி, தர்ணிகா, சகீர்த்தனா, டினோஜன், சோபிசா,திபிக்கா, கிஷாந், வைஷ்ணவி, வக்ஷாலினி, அக்ஷனன் (USA) துவாரகா, பிரணவி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தச்சணாங்குளம் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

சந்திரன் - 077 515 2383,
ரமேஸ் - 077 126 1813

## வெடிபொருள் அகற்றாத பகுதிக்குள் செல்ல வேண்டாமென அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.17

வியாபார நோக்கத்துக்காகவே முகமாலையில் மிதிவெடிகள் அகற்றப்படாத பகுதிக்கு மக்கள் செல்கின்றனர். பாதுகாப்பற்ற பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்வதால் உயிரிழப்புகளைத் தவிர்க்கலாம்.

இவ்வாறு அந்தப் பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பணியில் உள்ளவர்கள் தெரிவித்தனர்.

கடந்தவாரம் முகமாலையில் வெடிபொருள்களில் உள்ள இரசாயனக் கலவையை எடுத்து விற்பனை செய்வதற்காகச் சென்ற ஒருவர் வெடி பொருள் வெடித்து உயிரிழந்தார். இரு நாள்களின் பின்னர் அவர் மீட்கப்பட்டார்.

அந்தப் பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பணியில் உள்ளவர்கள் தெரிவித்ததாவது-

சட்டவிரோதமாக மரங்கள் வெட்டுவோரும், வெடிபொருள்களில் உள்ள வெடி மருந்துகளை எடுத்து விற்போரும், இரும்பு விற்போரும் வெடிபொருள்கள் அதிகம் உள்ள பகுதிகளுக்குச் செல்கின்றனர். அதனாலேயே இவ்வாறான உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன.

வெடிபொருள்களில் இருந்து எடுக்கும் வெடி மருந்தை மீன் பிடியில் ஈடுபடுவோருக்கு விற்கின்றனர்.

மோதல்கள் அதிகமாக நடந்த இடங்களில் இரும்புகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பலர் திருட்டுத் தனமாக இந்தப் பகுதிகளுக்குச் செல்கின்றனர். மரங்கள் தறிக்கவும் செல்கின்றனர்.

போர் நிறைவடைந்து 8 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் இந்தப் பகுதியில் இன்னமும் வெடிபொருள்கள் முற்றாக அகற்றப்படவில்லை. அதனாலேயே மீள்குடியமர்வுக்கு மக்களை அனுமதிக்கவில்லை. தற்போதும் வெடிபொருள்கள் இயங்கு நிலையில் உள்ளன. பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்வதைத் தவிர்ப்பதன் மூலம் உயிரிழப்புகளையும், அவய இழப்புகளைம் தவிர்த்துக் கொள்ள முடியும்- என்றனர். (ற-4,ரி3)

## மருதங்கேணி - பருத்தித்துறை வீதி சீரமைப்பு இன்று ஆரம்பம்

கொழும்பு, ஓக. 17

மருதங்கேணி-பருத்தித்துறை வீதியின் சீரமைப்புப் பணியின் ஆரம்ப நிகழ்வுகள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரால் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து பருத்தித்துறை செல்லும் பிரதான வீதி 28 கிலோமீற்றர் நீளமுடையது. இந்த வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதால் அதனைச் சீரமைக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து வீதியின் 8 கிலோ மீற்றர் தூரம் தற்போது சீரமைக்கப்படவுள்ளது. வீதியைத் தரமானதாகப் புனரமைக்கும் நோக்கில் ஒரு கிலோ மீற்றருக்கு 40 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகாரை கட்டப்பட்ட காணியை விடுவித்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக.17

மன்னார், திருக்கேதீஸ்வரத்தில் இரகசியமாக அமைக்கப்பட்ட புத்தவிகாரை அமைந்துள்ள காணியை விடுவித்துத் தரவேண்டும் என்று காணி உரிமையாளர் கோரிக்கை விடுத்தார்.

திருக்கேதீஸ்வர ஆலயச் சூழலில் பௌத்த மதத்தைப் பின்பவற்றுபவரோ அல்லது சிங்கள இனத்தவரோ இல்லாத நிலையில், தமிழ் மக்களின் பிரதேசத்தில் புத்த விகாரை அமைக்கப்பட்டது.

விகாரை அமைப்பதற்கு எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து, கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டன. பின்னர் கட்டுமானப் பணிகள் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டு, கடந்த சிவராத்திரி தினத்தன்று இரகசியமாக விகாரை திறக்கப்பட்டது.

விகாரை அமைக்கப்பட்டுள்ள 10 ஏக்கர் காணியின் உரிமையாளர் காணியை மீட்டுத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிமலநாதனிடம் கோரிக்கை விடுத்தார். காணிக்குரிய உறுதி தன்னிடம் உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித் ததாவது:

திருக்கேதீஸ்வர சூழலில் விகாரை அமைக்கப்பட்டுள்ளது. விகாரை அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்தின் நில உரிமையாளர்கள் பலர் என்னிடம் தமது நிலத்தை மீட்டுத் தருமாறு கோரினர். தாம் நீட்ட காலமாக அந்தப் பகுதியில் வசித்தமைக்கான சான்றுகளையும் சமர்ப்பித்தனர். அவற்றுக்கு அப்பால் அந்தப் பகுதி நிலத்தின் உறுதியும் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த விடயத்தை நான் நாடாளுமன்றத்தில் கேள்வியாக, விஜயதாச ராஜபக்சவிடம் தொடுத்துள்ளேன்.

முழு விளக்கத்துடன் பதிலளிக்க நான்கு வார கால அவகாசம் கோரினார். இரு வார கால அவகாசமே நிறைவுற்றுள்ளது. எதிர் வரும் அமர்வுகளில் இது தொடர்பில் நாடாளுமன்றில் கேள்வியெழுப்பப்படும் - என்றார். (ற-101)

## மீள்குடியமர்ந்த முஸ்லிம்களுக்கு நடமாடும் சேவை

தென்மராட்சி, ஒக.17

தென்மராட்சி பிரதேசத்தில் மீள்குடியமர்ந்துள்ள முஸ்லிம் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் நடமாடும் சேவை இன்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

வடமாகாண சபை உறுப்பினர் அஸ்வினின் எற்பாட்டில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையில், பிரதேச செயலகத்தின் அனைத்துப் பிரிவினரும் கலந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## பட்டம் பிடிக்க ஓடிய சிறுவன் விபத்து

தென்மராட்சி, ஒக.17

அறுந்த பட்டத்தைப் பிடிக்க வீதியைக் கடந்து ஓடிய சிறுவன், மோட்டார் சைக்கிளில் மோதுண்டு விபத்துக்குள்ளானான். காயமடைந்த சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி பெருங்குளம் - மட்டுவில் வீதியில் இடம்பெற்றது.

காயமடைந்த சிறுவன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-9)

## தேர்த்திருவிழா

தென்மராட்சி, ஓ.17

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்திலும், சாவகச்சேரி டச்சு வீதி செருக்கல்பதி சித்திவிநாயகர் ஆலயத்திலும் இன்று புதன்கிழமை தேர்த் திருவிழா காலை 9 மணிக்கு இடம்பெறும். நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ற-9)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக.17

புத்தூர் லிட்டில் மாஸ்டர்ஸ் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பாலர் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக அச்சு வேலி, தெரேசா மகளிர் கல்லூரி அதிபர் அருட் சகோதரி. மரியா ஜீவந்தி கலந்துகொள்வார். (ற-ரி4)


# University of Jaffna - Invitatioin For Bids

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost ( Rs. In million) | Contract Period (No of Calendar Days) | Minimum Required ICTAD Grade | Required Bid Security Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/ RE/ 2016-25 | Supplying and Fixing of Laboratory Furniture for Natural Science Block, University of Jaffna | 13.5 | 90 | C6 or above | Rs. 135,000.00 |
| 2 | YA/CWP/ RE/ 2016-26 | Ancillary Works at Siddha Medicine Unit, University of Jaffna | 6.7 | 90 | C7 or above | Rs. 65,000.00 |
| 3 | YA/CWP/ RE/ 2016-27 | Renovation and Improvements to Lecture Hall Building, Siddha Medi cine Unit, University Of Jaffna | 6.4 | 120 | C7 or above | Rs. 65,000.00 |
| 4 | YA/CWP/ RE/ 2016-28 | Renovation and Improvements to Hostel Building, Ramanathan Academy of Fine Arts, University of Jaffna | 2.6 | 90 | C8 or above | Rs. 25,000.00 |
| 5 | YA/CWP/ RE/ 2016-29 | Improvement to the Badminton Court and Student Complex of University of Jaffna | 1.2 | 45 | C9 or above | Rs. 12,000.00 |
| 6 | YA/CWP/ RE/ 2016-30 | Extension to Canteen at Faculty of Agriculture, University of Jaffna | 10.1 | 90 | C6 or above | Rs.100,000.00 |
| 7 | YA/CWP/ RE/ 2016-31 | Construction of Chain Link Fence for Staff Quarters at Faculty of Agriculture, Kilinochchi, University of Jaffna | 0.7 | 45 | C9 or above | Rs.7,000.00 |
| 8 | YA/CWP/ RE/ 2016-32 | Improvements to the Pathology Depart ment at Faculty of Medicine, University of Jaffna | 29.6 | 120 | C5 or above | Rs. 300,000.00 |
| 9 | YA/CWP/ RE/ 2016-33 | Improvements to the Physiology Department at Faculty of Medicine, University of Jaffna | 29.6 | 120 | C5 or above | Rs. 300,000.00 |
| 10 | YA/CWP/ RE/ 2016-34 | Improvements to the Anatomy Depart ment, Faculty of Medicine, University of Jaffna | 21.1 | 120 | C6 or above | Rs. 200,000.00 |
| 11 | YA/CWP/ RE/ 2016-35 | Extension to Canteen at Faculty of Medicine, University of Jaffna | 3.5 | 90 | C8 or above | Rs. 35,000.00 |
| 12 | YA/CWP/ RE/ 2016-36 | Completion of first floor of the Examination hall of the Faculty of Arts | 30.0 | 180 | C5 or above | Rs. 300,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Training and Development (ICTAD) as indicated in the above table.
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the above table.
5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna up to $1^{st}$ September, 2016**from **9.00 hrs to 15.00 hrs** upon payment of a non refundable fee of **rupees three thousand five hundred(Rs.3,500/-) for each bids No 1, 6, 8, 9, 10 &12 and one thousand five hundred rupees ( Rs. 1,500/-) each for other bids.**
7. Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Registrar's office to reach on or before 14.00 hrs on the $2^{nd}$ September,2016.** Bids will be opened immediately thereafter on$2^{nd}$ **September,2016**in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period for **90 days** from the date fixed for closing of Bids or any extend period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - For the amount as indicated in the above table.
   - Valid up to $31^{st}$ December, 2016
   - In favour of "Vice Chancellor, University of Jaffna."
   - Issued by one of the agencies indicated in the clause 16 of ITB of the schedule.
10. Pre Bid meeting will be held at Board room, University of Jaffna at 10.00 hrs on the **$23^{rd}$August, 2016** for all works other than the work No. 6 & 7for which a Pre Bid meeting will be held 10.00 hrs on **$24^{th}$August, 2016**at the board room of the Faculty of Agriculture, Ariviyal Nagar, Kilinochchi.

(c/24300)
(11.37.18)

**Chairperson, Department Procurement Committee,**
**University of Jaffna.**

**16.08.2016**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF ENGINEERING, UNIVERSITY OF JAFFNA**

**Senior Professor/Professor of Electrical & Electronic Engineering**

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)** in Electrical & Electronic Engineering/ *Mechanical Engineering/ **Engineering Mathematics

**Note:**
*For position in **Mechanical Engineering** special consideration will be given to those who have sound knowledge in Mechanical, Production and Process Engineering.

**For position in **Engineering Mathematics** special consideration will be given to those who have sound knowledge in Mathematics with strong background in Probability and Statistics.

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.67,100 – 11x1425 -82,775/-p.m |
| Professor | Rs.56,505 – 13x1310 -73,535/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.45,545 – 7x1050 – 52,895/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.39,755 – 11x790 – 48,445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27,775 – 10x645 – 34,225/-p.m |

**Note**:
In addition to the above salary, the following allowances will also be paid for academic staff:
i. Academic allowance - Senior Professor - 152% of the basic salary
Professor - 147% of the basic salary
Senior Lecturer Gr. I /Gr. II - 136% of the basic salary
Lecturer (Probationary) - 100% of the basic salary
ii. Special allowance - 20% of the basic salary
iii. Additional Monthly Allowance-20% of the basic salary (other than Temporary Instructor)
iv. Interim Allowance- Rs.10,000/- p.m
v. Cost of living allowance - Rs.7,800/-p.m

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff

**Statutory benefits:**
Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
i) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
ii) Gratuity payments
iii) Employees Trust Fund benefits
iv) Free Medical Services.

**Closing Date:**

**Post of Senior Professor/ Professor - 17.10.2016**
**Other Posts - 19.09.2016**

Applications and other documents for the post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with the covering letter. Applications for the other posts shall be sent to the **Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Thirunelvely Jaffna.**

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
16.08.2016

(c/24969) (13.18.17)


# புலிகளின் குண்டுத் தாக்குதலால் சந்திரிகாவுக்கு மூளைப் பாதிப்பு

## கண்டுபிடித்தார் உதய கம்மன்பில எம்.பி.



கொழும்பு, ஓக.17
புலிகளின் குண்டுத் தாக்குதலால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரரணதுங்கவுக்கு மூளை பாதித்துள்ளது. போரின் நான்கில் ஒரு பகுதியைத் தனது ஆட்சிக் காலத்தில் முடித்தேன் என்று அவர் புலம்புகின்றார்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில தெரிவித்தார்.

பாகொடையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:
சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில், இராணுவத்தினர் புலிகளிடத்தில் மூன்றுமுறை தோல்வியடைந்தனர். ஆனால் போர் வெற்றிக்கு எனது ஆட்சிக் காலத்தில் நான்கில் மூன்று வீதம் பங்களிப்பு கிடைத்தது. ஐக்கிய தேசியக் கட்சி, போர் வெற்றிக்குத் தனது பங்களிப்பை ஓரளவு செய்தது. மகிந்த நான் கில் ஒரு வீதம் போர் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்தார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரரணதுங்க கூறுகிறார்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகாவும், மகிந்தவும் நான்கில் மூன்று, நான்கில் ஒன்று என்ற வீதத்தில் போர் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்தனர். அவ்வாறாயின் ஐக்கிய தேசியக் கட்சியின் பங்களிப்பு போர் வெற்றிக்கு எப்பபோது கிடைத்தது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரரணதுங்கவின் ஆட்சிக் காலத்திலேயே போர்க் களத்தில் இராணுவத்தினர் படுதோல்விகள் மூன்றைச் சந்தித்தனர். 1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவப் படைத்தளம் முற்றாக அழிக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டில் வன்னியிலிருந்த ஒட்டு மொத்த இராணுவப் படைத்தளங்களும் முற்றாக அழிக்கப்பட்டன. அதன் பின்னர் ஆனையிறவு படைத்தளம் முற்றாக இல்லா தொழிக்கப்பட்டது. சந்திரிகா குமாரரணதுங்க புலிகளின் குண்டுதாக்குதலுக்கு இலக்காகியிருந்தார். அதனால் அவருக்கு ஏற்பட்ட மூளை பாதிப்பால் புலம்புகின்றார் - என்றார். (ற-4)



இலங்கை வந்துள்ள ஜப்பானின் முன்னாள் பிரதமர் யஸ்ஸூ புகுடாவை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைலாகு கொடுத்து வரவேற்றார்.

# வெலிக்கடைச் சிறைச்சாலையை ஹொரணைக்கு மாற்றத் திட்டம்

கொழும்பு, ஓக.17
கொழும்பு வெலிக்கடையிலுள்ள சிறைச்சாலையை அகற்றி, ஹொரணையில் சிறைச்சாலையை ஒன்றை அமைக்க அமைச்சரவை அனுமதி கோரப்பட்டது.

அமைச்சரவை அனுமதித்ததும் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று சிறைச்சாலைகள் மற்றும் மீள்குடியேற்றத்துறை அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி தெரிவித்தார்.

ஹொரணை, சொரணவத்தையில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் சிறைச்சாலை அமைக்கப்படும்.

அதேவேளை, புதுக்கடை நீதிமன்றத்துக்கு அண்மையில் 4 ஏக்கர் நிலப்பரப்பில் தற்காலிகமாக கைதிகளை தடுத்து வைப்பதற்கு தடுப்பு நிலையம் ஒன்று அமைக்கவுள்ளது.

தற்போது சிறைச்சாலை அமைந்துள்ள பிரதேசத்தில், வர்த்தக நகரமொன்று அமைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் முக்கியமான சிறைச்சாலைகள் பொருளியல் ரீதியாக மற்றும் முக்கிய நகர்களில் அமைந்துள்ளன. அந்த இடங்களை பொருளாதார தேவைகளுக்காகப் பயன்படுத்தி, சிறைச்சாலைகளை இடம்மாற்றம் செய்ய அரசு திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் சட்டத் திருத்தம் குறித்த மக்கள் கருத்துக்கள் ஆராய்வு

## நீதி அமைச்சு தகவல்

கொழும்பு, ஓக. 17
குற்றவியல் மற்றும் சிவில் சட்ட திருத்தங்களுக்கு அமைவாகக் கிடைத்த மக்கள் கருத்துக்களை ஆராயும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று நீதியமைச்சு தெரிவித்தது.
சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகளிடம் பெற்றுக்கொண்ட கருத்துக்களும் ஆராயப்படும் என்று நீதியமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன தெரிவித்தார்.
சிவில் மற்றும் குற்றவியல் சட்டங்களில் திருத்தங்களை முன்னெடுப்பதற்கான அறிக்கையைப் பெறும் நோக்கில், நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவால் இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டன.
உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரியசாத் டெப் மற்றும் புவனேக அலுவஹிரா ஆகியோரின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது. குறித்த அறிக்கை அமைச்சரவையின் அனுமதிக்காக விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதியமைச்சின் செயலாளர் கூறினார்.
அமைச்சரவையின்கொள்கைரீதியானஅனுமதிகிடைத்ததன் பின்னர், அதன் யாப்பு ரீதியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக சட்ட வரைவு சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-4)

# சவூதியில் தொழில் இழந்தோருக்காக தினமும் 5,000 டொலர் செலவு

கொழும்பு, ஓக. 17
சவூதி அரேபியாவின் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக தொழில் வாய்ப்பை இழந்த இலங்கையர்களுக்காக அங்குள்ள இலங்கைத் தூதரகம் ஒரு நாளைக்கு 5 ஆயிரத்து 600 டொலரை ஒதுக்கியுள்ளது என்று வேலை வாய்ப்புப் பணியகத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி உபுல் தேசப்பிரிய தெரிவித்தார்.
தற்பொழுது சவூதியிலுள்ள 112 பேர் தொழில்களை இழந்துள்ளனர். இவர்களுக்கு உணவு, தங்குமிட வசதிகளை வழங்குவது வெளி நாட்டுவேலைவாய்ப்புப் பணியகத்தின் பொறுப்பாகும். இவர்களில் பலருக்கு மீண்டும் தொழில்வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
அவர்கள் பணியாற்றிய நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இதனால் அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வர முடியாத நிலை காணப்படுகின்றது - என்று அவர் தெரிவித்தார். (ந-4)

# நல்லாட்சி அரசின் கன்னி சம்மேளனம்

கொழும்பு, ஓக. 17
நல்லாட்சிக்கான தேசிய அரசின் கன்னிச் சம்மேளனம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாத்தறையில் இடம்பெறவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ள சம்மேளனத்துக்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
நாட்டின் நன்மை கருதி அமைக்கப்பட்ட தேசிய அரசு இதுவரை வெற்றி கொண்ட சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் தொடர்பில் சம்மேளனத்தில் அறிவிக்கப்பட உள்ளது. ஏற்பாட்டு பணிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீரதலைமை தாங்குகின்றார்- என்று தெரிவிக்கப்பட்டது.
2015 ஆம் ஆண்டில் நாட்டின் முதல் பதவியில் ஏற்பட்ட ஜனநாயக மாற்றம் மற்றும் ஒகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற ஆட்சி மாற்றம் என்பன நல்லாட்சிக்கான தேசிய அரசின் உதயத்துக்குகாரணமாகியது. இதன்பின்னரான செயற்பாடுகள் மற்றும் மக்கள் நலன்புரித் திட்டங்கள் குறித்து இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டன. இதனூடாக தேசியமற்றும்பன்னாட்டுரீதியில்இலங்கை அடைந்த வெற்றிகள் மற்றும் நன்மதிப்புக்கள் சொல்லிடங்காதவை.
தனது கன்னி சம்மேளனத்தை மிகவும் அபிமானத்துடன் நல்லாட்சிக்கான தேசிய அரசு முன்னெடுக்க உள்ளது. மாத்தறை உயன்வத்தை மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாக உள்ள நல்லாட்சிக்கான தேசிய அரசின் கன்னி சம்மேளனத்தில் பல்வேறு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-4)

# மென்பானத்தில் உள்ள சீனி அளவு அவசியம்

*சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்து*

கொழும்பு, ஓக. 17
மென்பானங்களில் அடங்கியுள்ள சீனியின் அளவு குறித்துத் தெளிவாக வர்ணங்களில் குறிப்பிடப்பட்டு விற்பனைசெய்யப்பட வேண்டும் என்ற சட்டம் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படும். இந்த விதி முறைகளை கடைபிடிக்கத் தவறும் விற்பனையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் பாலித மஹிபால தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மென்பான போத்தல்களில் மில்லி மீற்றர் அடங்கியுள்ள சீனி அளவு குறிப்பிடப்பட வேண்டும். குளிர்பானங்களை பருகுவது உடல் ஆரோக்கியத்துக்கு ஏற்றதா? என்பதை நுகர்வோர் தீர்மானிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது. இலங்கையில் தொற்றா நோயை முற்றாக ஒழிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு நடவடிக்கையாக இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது - என்றார்.
விசேட மருத்துவர் லக்ஷ்மன் கம்லத் தெரிவித்ததாவது:
சீனியால் ஏற்படும் பாதிப்புக்கான சமிக்ஞையை வெளிப்படுத்தும் வகையில், அனைத்து இனிப்பு பானங்களின் போத்தல்களில் இவ்வாறான சுட்டிகள் (லேபிள்) இடம்பெற வேண்டும். அவற்றில் பானத்தில் அடங்கியுள்ள சீனியின் அளவு விவரமாகக் குறிப்பிடப்பட வேண்டும். இலங்கைக்கு கொண்டு வரப்படும் பால்மா, இறைச்சி, மீன் போன்ற அனைத்து உணவு வகைகளும் பொதுச் சுகாதார பரிசோத கர்களால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.
சந்தைக்கு விநியோகிக்க முன்னர் விசேட பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும். உணவுப் பானங்கள் தொடர்பில் உள்ள சட்ட விதிகள் போதுமானதல்ல. அவற்றில் திருத்தங்களை மேற்கொள்ள தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ந-4)

# காணாமற்போனோரின் பணியகம் அரசமைப்பை மீறும் செயற்பாடு

## தேசிய நிறுவனங்களின் சம்மேளனம் கூறுகிறது

கொழும்பு, ஓக. 17
காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைக்கும் சட்டவரைவு இலங்கை அரசமைப்பை மீறும் செயற்பாடு. அது நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலானது.
இவ்வாறு தேசிய நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவித்தது.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சம்மேளனத்தின் அமைப்பாளர் கலாநிதி குணதாஸ அமரசேகர இதனைத் தெரிவித்தார்.
அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளையும் உலக தமிழர் பேரவையையும் மகிழ்விக்கவே இந்த சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது என்று அவர் கூறினார்.
அங்கு கருத்து வெளியிட்ட சம்ளேனத்தின் நிர்வாக உறுப்பினர் பெங்ஹமுவ நாலக்க தேரர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஜாதிக்க ஹெல உறுமய ஆகிய கட்சிகள் பன்னாட்டு தீய சக்திகளின் கைப்பாவையாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் கணிப்புக்கு இசைவாக நடனமாடுகின்றன- என்றார்.
கொடூரமான இந்த சட்டவரைவு குறித்து ஜனாதிபதி தம்முடன் விவாதம் நடத்தவேண்டும் எனவும் அவர் கூறினார்.
பன்னாட்டு மலக்குழியால் சூழப்பட்டிருக்கும் மைத்திரிபால சிறிசேனவுடன் விவாதிக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்ற போதிலும், இந்த சட்டவரைவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (ந-4)



ஒன்பதாம் நாள் உள்வீதியுலா

# பத்தாம் திருவிழா

## விடிவு ஒன்று தந்திட மஞ்சத்தில் வருகின்றான்

அஞ்சேலென அபயம் தந்து நல்லூரான்
அழகான மஞ்சத்தில் வருகின்றான்
பஞ்சம், பிணியாவும் போக்கியருள
வள்ளி, தெய்வானை சகிதம் வருகின்றான்
வெஞ்சமரை நிறுத்தி நமக்கு விடிவு ஒன்று தந்திட
எட்டுத்திக்கும் புகழ் பரப்பி வருகின்றான்
தஞ்சமெனப் புகுந்த தம் அடியவரைக் காத்திட
அழகான திருமஞ்சத்தில் பவனி வருகின்றான்

- க.கனகசபை, சண்டிலிப்பாய்

## ஒளி மஞ்சந்தனிலே ஒளியாக வருவாய்

“ஒளி மஞ்சந்தனிலே ஒளியாக வருவாய்
உன்னருகில் இரு மாதர் புடை சூழ அருள்வாய்
தளிர்க்கரம் ஈராறால் தாயாக அணைத்தே
தங்க நல்லூர்க் கோட்டத்திலே தனியழகாய் நிற்பாய்
துளிதுளியாய்த் தேன் சிந்தும் தூய தமிழ்ப்பாடல்
தோகையனே! உன் பதத்தைத் திருப்புகழின் தேடல்
அளி மொய்க்கும் தாரானே! அலங்காரக் கந்தா!
அவனியிலே எம்மை நீயாள வேண்டும்!”

-தேவி.கணேஸ்.

## மஞ்சத்திலே பவனிவரும் மயூரன்

மலை ஆறு கூறுபட வேல் எறிந்தவன்
மலர்கள் ஆறிலே தவழ்ந்த சிவபாலன்
மலைமகள் பார்வதியின் அன்புமகன்
மாநிலத்தைக் காக்கும் மகாவிஷ்ணுவின் மருமகன்
மங்கையர்கள் இருவரின் மணவாளன்
மலைகள் ஆறிலே கோயில் கொண்டவன்
மஞ்சத்திலே பவனிவரும் மயூரன்
மாதப்பிறப்பு நாளிலே பூரணை
தினத்திலே மக்கள் மனம் குளிர
அருளை வாரி வழங்க
வருகிறார் வடிவேற்பெருமான்

- வ. ஸ்ரீலக்சுமி திருநெல்வேலி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தொடர்ந்தும் விரக்தி நிலைக்குத் தள்ளாதீர்!

● நாட்டின் அரசியல் தலைவர்கள், குறுகிய சுயநல அரசியல் இலாபங்களைத் தவிர்த்து, அனைத்து மக்களினதும் நலன்களில் அக்கறை செலுத்த வேண்டும்--

அப்போதுதான், நீதியான நல்லிணக்கமும், சமத்துவ, சகோதரத்துடனான உரிமைகள் இங்கு வாழும் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வழி பிறக்கும்--

● அத்தகைய நிலை தோற்றுவிக்கப்பட்டால் மட்டுமே, நாட்டில் இன, மத பேதங்களை உடைத்து எறிந்து, அனைத்து மக்களும் சமத்துவ நிலையில் வாழ்வதற்கு வழிபிறக்கும். அதனையே நாம் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம்--

மேற்கண்ட, அர்த்தமுள்ள, நாட்டுக்கு நன்மை நல்க வல்ல கருத்து--

மன்னார் மருதமடு மாதாவின் ஆவணி மாதப் பெருவிழாவில் எடுத்து இயம்பப்பட்டது.

அர்த்த புஷ்டி உள்ள மேற்கண்ட அரிய கருத்தை, மன்னார் மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர், யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை வெளிப்படுத்தினார் என்பதும் விசேடமாகத் தொட்டுக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

அத்தோடு--

நாட்டின் இப்போதைய நடைமுறைச் செயற்பாடுகளும், எழுந்துள்ள பிரச்சினைகளும், முரண்பாடான அறிக்கைகளும், நம்பிக்கை தருவனவாக இல்லை--

மாறாக, நல்லாட்சியும், நல்லிணக்கமும் மந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமையே வெளிச்சமாகத் தெரிகிறது--

அதன் பெறுபேறாக, நாம் (மக்கள்) விரக்தி அடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்--

இவை கோடிட்டுக் காட்டப்பட வேண்டும்--

இந்த நிலைமைகளுக்கு அப்பால்,

அரசியல் தலைவர்கள் குறுகிய, சுயநல, அரசியல் இலாப நோக்கங்களைக் கடந்து, அனைத்து மக்களினதும் நலன்களில் அக்கறை செலுத்துவது, இன்றியமையாதது--

அதனூடாகவே, நீதியும் நல்லிணக்கமும் கொண்ட நல்லாட்சியை நிறுவலாம்; நிறுவ முன்வர வேண்டும்-- என்றும் புத்திமதி கூறியுள்ளார், கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை.

ஒட்டுமொத்தத்தில்--

நல்லாட்சியும், நல்லிணக்கமும் மந்த நிலையில்தள்ளாடும்போக்கு அச்சொட்டாக விவரிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசும், அதன் தலைவரான ஜனாதிபதியும், ஏனைய பிரதானிகளும் மன்னார் ஆண்டகையின் கருத்துக்கு செவி மடுக்க வேண்டிய வேளை இது.

வெறுமனே மினுக்கம் காட்டுவதால், நாடும், மக்களும் முந்தைய நிலைக்குத் தள்ளப்படல் ஆகாது...



எம்.ஐ.முபாறக்

உலகின் அதி பயங்கரவாத அமைப்பாக இன்று அடையாளம் காணப்பட்டிருப்பது ஐ.எஸ்.அமைப்புத்தான். இந்த அமைப்பின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள்–மனிதக் கொலைகள் எந்தவொரு மனிதனாலும் சகிக்க முடியாத அளவுக்கு கொடூரமானவை.

தூய இஸ்லாத்தைப் பரப்புகின்றோம் என்றும், இஸ்லாமிய ஆட்சி முறையை நிறுவப்போகிறோம் என்றும் கூறிக்கொண்டு முழுக்க முழுக்க இவற்றுக்கெல்லாம் எதிராகத்தான் இந்த அமைப்பு செயற்படுகின்றது. இந்த அமைப்பின் உண்மையான நோக்கம்- இதன் பின்னணி தெரியாத ஐரோப்பாவைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் இதில் இணைந்து கொள்கின்றனர்.

2014ஆம் ஆண்டில் உருவான இந்த அமைப்பு சிரியாவின் ஒரு பகுதியையும் ஈராக்கின் ஒரு பகுதியையும், கைப்பற்றி கிலாபத் என்ற பெயரில் சுயாட்சியைபிரகடனப்படுத்தியது. அது தொடர்ந்து சில மாதங்களாக மேலும் பல இடங்களைக் கைப் பற்றி அதன் நிர்வாகத்தை விஸ்தரிக்கத் தொடங்கியது.

ஆரம்பத்தில் ஐ.எஸ். தாக்குதல்களை எதிர்கொள்ளமுடியாத இரு நாடுகளின் படையினரும், பின்வாங்கத் தொடங்கினர்.பின்பு சுதாகரித்துக் கொண்டு மீளத்தாக்கி இழந்த இடங்கள் பலவற்றைக் கைப்பற்றிக்கொண்டனர். இதன் மூலம் ஐ.எஸ்.இற்கு இழப்பு ஏற்பட்டபோதிலும், அது முழுமையான பலவீனத்தை அவர்களுக்கு கொடுக்கவில்லை.

> ஆரம்பத்தில் ஐ.எஸ். தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாத இரு நாடுகளின் படையினரும் பின்வாங்கத் தொடங்கினர்.பின்பு சுதாகரித்துக் கொண்டு மீளத் தாக்கி இழந்த இடங்கள் பலவற்றைக் கைப்பற்றிக்கொண்டனர். இதன் மூலம் ஐ.எஸ். இற்கு இழப்பு ஏற்பட்டபோதிலும், அது முழுமையான பலவீனத்தை அவர்களுக்கு கொடுக்கவில்லை.

### அமெரிக்காவும் இஸ்ரேலுமே ஐ.எஸ்ஸை உருவாக்கின

இந்த ஐ.எஸ்.அமைப்பினர் யார்? இதை உருவாக்கியவர்கள் யார்? போன்ற கேள்விகள் உலக அரங்கில் இன்னமும் முன்வைக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. அமெரிக்காவும் இஸ்ரேலுமே இந்த இயக்கத்தை உருவாக்கின என்பதே இதற்கான சரியான பதிலாகும்.

இதை அமெரிக்கா உருவாக்கியது என்றால் இதற்கு எதிராக அமெரிக்கா ஏன் போர் செய்யவேண்டும் என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது. இதுதான் அமெரிக்காவின் இராஜதந்திரம். பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் அமெரிக்காவின் கடந்த கால அரசியல் செயற்பாடுகளை நினைவுபடுத்திக்கொண்டால் இந்த விவகாரத்தை மிக இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

உலகம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அமெரிக்கா, அதற்காக பல யுக்திகளைக் கையாண்டு வருகின்றது. அவற்றுள் அந்தந்த நாடுகளில் பயங்கரவாதக் குழுக்களை உருவாக்கி அந்த நாடுகளின் ஸ்திரத் தன்மையைச் சீர்குலைத்தல், அந்தப் பயங்கரவாதக் கும்பலை ஒழித்தல் என்ற பெயரில் அந்த நாடுகளுக்குள் நுழைந்து அந்த நாடுகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல், தனக்கு அடிபணிய மறுக்கும் நாடுகளில் மக்கள் புரட்சியை ஏற்படுத்தி அரசுகளைக்கவிழ்த்துதனதுபொம்மை அரசுகளைநிறுவுதல்போன்றவற்றைக் குறிப்பிட இயலும். மத்திய கிழக்கில் அமெரிக்காவின் இத்தகைய செயற்பாடுகளுள் இடம் பெறுகின்றன.

அரபு வசந்தம் என்ற பெயரில் மேற்குறிப்பிட்ட விதத்தில் செயற்பட்டு இப்போது அந்த நாடுகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது அமெரிக்கா.அரபு வசந்தம்மூலம் ஆட்சி கவிழ்க்கப்பட்ட எகிப்து மற்றும் துனிசியா ஆகிய நாடுகளில் இப்போது இருப்பது அமெரிக்க சார்பு அரசுகள்தான். சிரியாவிலும் இதே நிலைமையைத்தான் அமெரிக்க ஏற்படுத்துகின்றது. சிரிய ஜனாதிபதிக்கு எதிராக ஆயுதக் குழுக்களை உருவாக்கி, அந்த நாட்டை இப்போது அழித்துக் கொண்டிருக்கின்றது. அந்த வரிசையில்தான் இந்த ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பும் உருவாக்கப்பட்டது.

### அகன்ற இஸ்ரேல் இலக்கு இஸ்ரேலால் முன்னெடுப்பு

ஐ.எஸ். அமைப்பு உருவாக்கப்பட்டமைக்கு இதைவிட மாறுபட்ட காரணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று, இஸ்ரேலின் நீண்ட இலக்கான அகன்ற இஸ்ரேல் எனும் திட்டமாகும்.பலஸ்தீனத்தை ஆக்கிரமித்து உருவாக்கப்பட்ட இஸ்ரேலை மேலும் விஸ்தரிப்பதே யூதர்களின் நீண்டகாலச் சதியாகும்.

இஸ்ரேலைச் சுற்றியுள்ள முஸ்லிம் நாடுகள் அனைத்தையும் பலமிழக்கச் செய்கின்றபோது, அந்த நாடுகள் அனைத்தையும் ஆக்கிரமித்து அகன்ற இஸ்ரேலை உருவாக்கமுடியும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

இப்போதைய இஸ்ரேல்கூட இவ்வாறுதான் உருவாக்கப்பட்டது. முஸ்லிம் நாடுகள் அனைத்தையும் ஒன்றிணைத்து துருக்கியைத் தளமாகக் கொண்டு ஆட்சி நடத்தி வந்த கிலாபதை, யூதர்கள் வீழ்த்தியதால் முஸ்லிம் நாடுகள் அனைத்தும் பிரிந்து தனித்தனி நாடாக ஆட்சி அமைத்துக்கொண்டன.

துருக்கியின் கீழ் இருந்த பலஸ்தீனமும், இவ்வாறே பிரிந்தது. பல மிழந்த பலஸ்தீனத்தைத் துண்டாடி அந்த நிலத்தில் யூதர்கள் இஸ்ரேலை அமைத்துக் கொண்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க இஸ்ரேல் வியூகமே ஐ.எஸ்.அமைப்பின் உருவாக்கம்

இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்கும் தைரியத்தை முஸ்லிம் நாடுகள் இழந்திருந்தன.

அந்த நாடுகளில் எல்லாம் யூதர்கள் தேசியவாதத்தை விதைத்திருந்ததாலும், இஸ்ரேல்,அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகளின் பொம்மை ஆட்சியாளர்களே அங்கு நியமிக்கப்பட்டிருந்ததாலுமே பலஸ்தீனத்துக்கு எதிரான சதியை–இஸ்ரேலின் உருவாக்கத்தை, அவர்களால் தடுக்க முடியவில்லை.

முஸ்லிம் நாடுகள் அனைத்தும் கிலாபத்தின் கீழ் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்து அது அமெரிக்காவின் வல்லாதிக்கத்துக்கு சவாலாக அமைந்துவிடக்கூடாது என்பதற்காகவே, இஸ்ரேல் என்றொரு நாட்டை அமெரிக்கா மத்திய கிழக்கு நாடுகளின் மத்தியில் உருவாக்கி, அதைப் பலப்படுத்திக் கொண்டு இருக்கின்றது.

அந்த மத்திய கிழக்கு நாடுகள் பலமடையாவண்ணம் – ஒற்றுமைப்படா வண்ணம் இஸ்ரேல் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அத்தோடு,மெல்ல மெல்ல அந்த நாடுகளை ஆக்கிரமித்து அகன்ற இஸ்ரேலை உருவாக்கும் திட்டத்தையும் முன்னெடுக்கின்றது.

1967இல் இடம்பெற்ற இஸ்ரேல் அரபு போரின்போது இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட சிரியாவின் கொலன் ஹெய்ட்ஸ், ஜோர்தானின் ஜோர்தான் பள்ளத்தாக்கு மற்றும் லெபனானின் சேபா பண்ணை நிலம் ஆகிய பகுதிகளைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டு, தனது திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறது இஸ்ரேல். அந்தத் திட்டத்துக்கு உறுதுணையாகத்தான் இந்த ஐ.எஸ். இயக்கத்தை உருவாக்கி இருக்கின்றது. இந்த இயக்கத்தை வைத்துக்கொண்டு மத்திய கிழக்கு நாடுகளை பலவீனப்படுத்தும்.சதித் திட்டத்தை அமெரிக்காவும் இஸ்ரேலும் அரங்கேற்றி வருகின்றன.

**தன்மீது சந்தேகம் எழாதவாறு திட்டத்தை முன்னெடுக்கும் அமெரிக்கா**

ஐ.எஸ். இயக்கத்தை உருவாக்கிவிட்டு, அதற்கு எதிராகப் போர் செய்யும் ஒரு இராஜதந்திரத்தை அமெரிக்கா கையாண்டு வருகின்றது. இதன் மூலம் ஏனைய நாடுகள் அமெரிக்காவைச் சந்தேகிப்பதைத் தடுப்பதும் தொடர்ச்சியான போர் நிலைமையின் ஊடாக மத்திய கிழக்கு நாடுகளை பலவீனப்படுத்துவதும் அமெரிக்கா வின் திட்டமாகும். யூதர்களுக்கு தேவை அகன்ற இஸ்ரேல், அமெரிக்காவுக்குத் தேவை இஸ்ரேலை வைத்து மத்திய கிழக்கு நாடு களைக் கட்டுப் படுத்துவது; கிலாபத்ஆட்சிமுறையைத் தடுப்பது. இதற்காகவே அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஐஎஸ்.இயக்கத்தை உருவாக்கினார். இந்த ரகசியத்தை அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் இப்போது போட்டுடைத்துள்ளார். ட்ரம்ப் கூறுவதற்கு முன்பே இந்த ரகசியம் கசிந்து விட்டது. ஆனால், அமெரிக்க ஜனாதிபதி வேட்பளரான, பிரபல்யமிக்கவரான ட்ரம்ப் இப்போது இதைக் கூறியதால், உலகத்தின் கவனம் அவரது கருத்தின் பக்கம் திரும்பியுள்ளது.

இது மாத்திரமன்றி ஐ.எஸ். தொடர்பான மேலும் பல ரகசியங்கள் கசியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

> முஸ்லிம் நாடுகள் அனைத்தும் கிலாபத்தின் கீழ் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்து, அது அமெரிக்காவின் வல்லாதிக்கத்துக்கு சவாலாக அமைந்துவிடக்கூடாது என்பதற்காகவே இஸ்ரேல் என்றொரு நாட்டை அமெரிக்கா மத்திய கிழக்கு நாடுகளின் மத்தியில் உருவாக்கி அதைப் பலப்படுத்திக்கொண்டு இருக்கின்றது.


பெஞ்சமின் நெருத்தனியாகு


பரக் ஒபாமா

# கல்லுண்டாய், திருவாவடுதுறை ஆதீன வீட்டுத் திட்டம்

யாழ்அராலிகாரைநகர் வீதி, கல்லுண்டாய் வெளியில் வைரவர் கோயிலுக்குச் சமீபமாக முன்னாள் அமைச்சர் அமரர் த.மகேஸ்வரனது திட்டமிடலுக்கு அமைய உருவாக்கப்பட்ட திருவாவடுதுறை ஆதீனத்தின் பெயர் தாங்கிய வீட்டுத்திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட வீடுகள் என்ன நிலையில் உள்ளன என்பதை அந்தப் பிரதேசத்தின் ஊடாகப் பயணிப்பவர்கள் கண்டுகொள்ளலாம். ஆதீனத்தின் பெயர் தாங்கிய பெயர்ப் பலகையையும் ஒன்பது வீடுகளையும் (ஒன்று, இரண்டு சேதமாகியுள்ளன) பார்ப்பவர்கள் இதற்கு ஏன் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சிந்திக்காமல் இருக்கமுடியாது.

திருவாவடுதுறை ஆதீனத்தின் அனுசரணையில் முந்நூறு வீடுகள் அமைப்பதற்கான திட்டம் இதுவென அறியமுடிகிறது. முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் அமரத்துவம் அடைந்தமையே வீடமைப்புப் பணிகள் நின்றுபோனமைக்குக் காரணமாக இருக்குமாயின் தற்போது அமைச்சுப் பதவியில் உள்ள அவரது துணைவியாரது அனுசரணையைப் பெறுவதன் மூலம் அவரது கணவரால் ஆரம்பிக்கப்பட்டு நின்று போயிருக்கும் இந்தத் திட்டத்தை தொடர்வதற்கு ஏன் முயற்சிக்கக்கூடாது.

அந்த வெட்டவெளியான இடத்தில் பாதுகாப்பு இல்லை. குறிப்பாக அங்கு குடிதண்ணீர் வசதி இல்லை. பஸ் போக்குவரத்தைத் தவிர வேறு எந்த வசதியும் கிடையாது. எப்படி அங்கு போய் குடியிருப்பது என்ற கேள்வியும் பெரிதாக எழுந்து நிற்கிறது. அதுவும் நியாயமானதுதான். அப்படியானால் அந்தப் பிரதேசத்தில் இப்படியான திட்டத்தை எப்படி? எதற்காக? ஆரம்பித்தனர் என்ற கேள்வியும் தொக்கி நிற்கிறதே. இந்தக் கேள்விகளுக்கு குறித்த வீடமைப்புத் திட்டம் உள்ளடங்கும் பிரதேசத்துக்குரிய உள்ளூராட்சி நிறுவனம் விடைகள் காண்பதற்கு முயலுமாயின் வீடமைப்புப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு முந்நூறு குடும்பங்களுக்கும் அத்தியாவசியத் தேவையான வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்து கொடுக்க முடியுமல்லவா? அதுமட்டுமல்ல, ஏற்கனவே கட்டப்பட்டு உபயோகப்படுத்தாது இருக்கும் ஒன்பது வீடுகளும் காலப்போக்கில் சேதமடையாது தவிர்க்க முடியும். இவ்வாறான ஒரு திட்டத்தை ஆரம்பிக்கும் முன்பாக அதற்கான ஒரு சாத்தியக்கூற்றறிக்கையும் பெறப்பட்டிருக்கும். அதை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் சிரமங்களைப் பகிரங்கப்படுத்தி உரிய பகுதியினருடன் தொடர்பு கொண்டு ஏன் நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளதோ தெரியவில்லை. சில காலங்களுக்கு முன்னர் இராணுவம் இங்குள்ள சில வீடுகளைப் பயன்படுத்தி வந்தது. இப்போது அங்கு அவர்களும் இல்லை. குறிப்பிட்ட வீடுகள் யார்? யாருக்குக் கையளிக்கப்பட்டனவோ அவர்கள் இதுவரை ஏன் இன்னும் அங்கு குடியேறவில்லை.

இந்தத் திட்டம் பூர்த்தியாக்கப்படுமானால் கல்லுண்டாய் வைரவர் கோயில் அமைந் துள்ள அந்தப் பகுதி ஒரு கிராமமாகி விடுவதுடன் அதனைச் சார்ந்து பல்வேறு தொழில் முயற்சிகளும் வர்த்தகச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டு சனசந்தடி மிக்கதாக அந்தப் பிரதேசம் மாறிவிடவும் வாய்ப்புக்கள் உள்ளன. ஏகாந்த வெட்டவெளியான இந்தப் பிரதேசத்தினூடு பயணம் செய்வோருக்கு குறிப்பாக சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போருக்கு அது மன ஆறு தலையும் பாதுகாப்பையும் ஏற்படுத்துவதாக இருக்கும்.

வரலாற்றுப் பெருமைமிக்க ஓர் ஆதீனத்தின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட இந்து கலாசார அமைச்சர் ஒருவரால் அடிகோலப்பட்ட இந்தக் குடியிருப்புத் திட்டம் எமது மக்களுக்குப் பயனளிக்கக்கூடியதான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். அன்றேல் கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிகொண்டதுபோல் காலப்போக்கில் பல சமூக விரோத, சட்டவிரோத செயற்பாடுகளின் புகலிடத்துக்குச் சாதகமான புறச்சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான தூண்டுகையாக இது அமைந்து விடலாம்.

சமூக நலன்புரி நிறுவனம் ஒன்றின் நிதி ஒருபோதும் வீணாகக் கூடாது என்பதுடன் வீடு, வாசல் இல்லாது அல்லற்படும் எம்மினத்தவர்களுக்குக் கிடைத்ததோர் வரப்பிரசாதமாக இதனைக் கொண்டு இந்தத் திட்டம் என்ன நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும். உடையவன் இல்லாவிட்டால் ஒருமுழம் கட்டை என்பது உண்மைதான் போலும்.

கி.வே.கிருஷ்ணானந்தன்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலப்பு இரட்டையர் ரென்னிஸில் பதக்கங்களை அள்ளியது அமெ.

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் ரென்னிஸ் ஆட்டத்தில் தங்கம், வெள்ளி என இரு பதக்கங்களை அள்ளியது அமெரிக்கா.
தங்கப் பதக்கத்துக்கான போட்டியில் களமிறங்கிய இரு இணைகளும் அமெரிக்க இணைகளே.
இதன்படி ஸ்ரொக், மற்றிக் ஸ்ரான்ட் இணையை எதிர்த்து வீனஸ் வில்லியம்ஸ், ரெவான் ராம் இணை மோதியது. முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வீனஸ் வில்லியம்ஸ், ராம் இணை கைப்பற்றிய போதிலும், அடுத்த இரு செற்களையும், 6:4, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஸ்ரொக், மற்றிக் ஸ்ரான்ட் இணை தங்கப் பதக்கத்தை வென்றது. வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் செக்குடியரசின் ஹார்டிக்காக, ஸ்ரீபன் இணையை எதிர்த்து, இந்தியாவின் சானியா மிர்சா, போபன்னா இணை மோதியது. முதலிரு செற்களையும் முறையே 6:4, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய செக்குடியரசின் இணை 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)





## கோலூன்றிப் பாய்தலில் தென்னாபிரிக்கா சாதனை

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தென்னாபிரிக்கா உலக சாதனை படைத்தது.
தென்னாபிரிக்காவின் சார்பாகக் களமிறங்கிய ரைங்கோ பிரீஸ் 6 மீற்றர் 03 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். இதற்கு முன்பு லண்டன் ஒலிம்பிக்கில் பிரான்ஸ் வீரர் ரெனாட் லிவில்லின் 5 மீற்றர் 97 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்ததே சாதனையாக இருந்தது.
பிரான்ஸ் வீரர் ரெனால்ட் 5 மீற்றர் 98 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதகத்தையும், அமெரிக்காவின் சாம் ஹென்றிக்ஸ் 5 மீற்றர் 85 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-ரி4)

## ஆண்களுக்கான 800 மீ. கென்யாவுக்குத் தங்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் கென்யாவுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.
கென்யா சார்பாகக் களமிறங்கிய டேவிட் ருடிஸா ஒரு நிமிடம், 42 செக்கன்கள், 15 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். அல்ஜீரியாவின் ரௌவ்பிக் ஒரு நிமிடம், 42 செக்கன்கள், 61 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், அமெரிக்காவின் கிளைற்ரன் ஒரு நிமிடம், 42 செக்கன்கள், 93 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-ரி4)



## சைக்கிளோட்டத்தில் சாதித்தது பிரிட்டன்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் (அரங்குக்குள்) பிரிட்டனுக்கு இரு பதக்கங்கள் கிடைத்தன.
பிரிட்டனின் சார்பாகக் களமிறங்கிய ஜேசன் கென்னி தங்கப் பதக்கத்தையும், கலும் கின்னர் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றனர். வெண்கலப் பதக்கத்தை ரஷ்யாவின் டெனிஸ் டிமிற்ரேவ் பெற்றார். (ம-ரி4)

## ஸ்பைடர் கமரா வீழ்ந்ததில் ஏழு பேருக்கு சிறு காயம்

ரியோ ஒலிம்பிக் தொடரை ஒளிபரப்புச் செய்து கொண்டிருந்த தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றின் ஸ்பைடர் கமரா (கேபிள் மூலம் இயங்கும் கமரா) அறுந்து விழுந்ததில் சிறுவர்கள் உட்பட ஏழுபேர் காயமடைந்தனர்.
கால்பந்தாட்ட மைதானமொன்றின் கமராவே அறுந்து விழுந்ததாக அறியவருகிறது. ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இந்த அசம்பாவிதம் நடைபெறாத காரணத்தினால் உயிர்ச் சேதங்கள், படுகாயங்கள் எவையும் ஏற்படவில்லை. (ம-ரி4)






## 400 மீ. சட்டவேலியில் ஜமைக்காவுக்கு வாய்ப்பு

ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலியில் ஜமைக்கா தங்கம் வெல்ல அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகிறது.
தெரிவுப் போட்டிகள் நேற்று நடைபெற்றன. ஆறாவது குழுவில் களமிறங்கிய ஜமைக்க வீரர் அன்சோட் வைட் 48 செக்கன்கள் 37 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்தார். குறித்த தெரிவுப் போட்டியில் இவரது அடைவே ஆகச் சிறந்ததாகக் காணப்படுகிறது. இவருக்கு அடுத்த இடத்தில் நோர்வேயின் கிறிஸ்டன் வக்ரோம் உள்ளார். இவர் அன்சோட் வைட்டைவிட 7 செக்கன்கள் [illegible] இது பெரியதொரு இடைவெளியாகக் கருதப்படும். எனவே தங்கப் பதக்கத்தை [illegible] வைட் கைப்பற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலிக்குண்டு எறிதலில் போலந்து உலக சாதனை

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான சங்கிலிக்குண்டு எறிதலில் போலந்து உலக சாதனை படைத்தது. போலந்தின் சார்பாக களமிறங்கிய கிறைக் 82 மீற்றர், 29 சென்ரிமீற்றர்களுக்கு எறிந்து உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். சீனா வீராங்கனை சான் வெங்சூ 76 மீற்றர் 75 சென்ரி மீற்றர்களுக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், பிரிட்டன் வீராங்கனை சஹ்பி கிட்சன் 74 மீற்றர் 54 சென்ரிமீற்றர்களுக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

ரியோ ஒலிம்பிக் தொடரில் போலந்து இதற்கு முதல் 4 பதக்கங்களைக் கைப்பற்றிய போதிலும் சாதனையுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றுவது இதுவே முதல் தடவை. (ம-ரி4)







# பகாமாஸ் வீராங்கனை நுட்பமான அணுகுமுறை

## இறுதி நொடியில் கிடைத்த தங்கம்

பகாமாஸைச் சேர்ந்த சவுனே மில்லர் என்ற வீராங்கனை மிக நுட்பமான முறையில் ஒலிம்பிக் ஓட்டப்போட்டியில் தங்கம் வென்றுள்ளார்.

ரியோ ஒலிம்பிக் தொடரின் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டி நேற்று நடைபெற்றது. உலகச் சம்பியனாக வலம்வந்து கொண்டிருக்கும் அமெரிக்காவின் அலெக்சன் பிலிக்ஸ், இந்தப் போட்டியில் தனது ஐந்தாவது ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை வெல்லும் முனைப்பில் களமிறங்கினார். இவரின் மீதே உலகின் எதிர்பார்ப்பும் குவிந்திருந்தது.

இதன்படி பிலிக்ஸும் ஆதிக்கம் செலுத்தி முதலிடத்தில் வந்துகொண்டிருந்தார். இரண்டாவது இடத்தில் வந்துகொண்டிருந்த பகாமாஸ் வீராங்கனை சவுனே மில்லர் இலக்கை நெருங்கியவுடன் இறுதிக் கணக்கில் பாய்ந்து இலக்கைத் தொட்டார்.

இதனால் 0.7 செக்கன்கள் வித்தியாசத்தில் சவுனே மில்லர் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். பன்னாட்டு அரங்கில் இதுபோன்ற அணுகுமுறை அரங்கேறுவது அரிதிலும் அரிது என்றபடியால், பன்னாட்டு ஊடகங்கள், விளையாட்டு வீரர்கள் என பலதரப்பினரிடமிருந்தும் மில்லருக்குப் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. வெண்கலப் பதக்கத்தை ஜமைக்க வீராங்கனை ஜக்சன் தனதாக்கினார். (ம-ரி4)

# கேத்லினுக்கு எதிராக பொங்கினர் ரசிகர்கள்

ரியோ ஒலிம்பிக்கில் ஜஸ்டின்கேத்லினுக்கு எதிராக ரசிகர்கள் குரல் கொடுத்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்களுக்கான 100 மீற்றர் குறுந்தூர ஓட்டப் பந்தயம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியில் உசைன் போல்ட்டுக்கு கடும் நெருக்கடி கொடுக்கக்கூடியவராக கேத்லின் கருதப்பட்டார். எனவே, போல்ட் மற்றும் கேத்லின் இருவருக்கும் இடையிலான போட்டியைக் காண அரங்கில் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் குவிந்திருந்தனர். அவர்கள் அனைவரும் ஜஸ்டின் கேத்லினுக்கு எதிராக, அவர் ஓட்டப்போட்டிக்கு தகுதியற்றவர் என்று ஒருமிக்க குரல் எழுப்பினர்.

ஜஸ்டின் கேத்லின் இருதடவைகள் ஊக்க மருந்தை எடுத்துக் கொண்டு தடை பெற்றவர். இதனாலேயே ரசிகர்கள் இவ்வாறு குரல் கொடுத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதில் கவனிக்கத் தக்க விடயம் என்னவென்றால் கேத்லினின் சொந்த நாடான அமெரிக்கர்களே அவருக்கு எதிராக குரல் கொடுத்தவர்களில் அதிகமானவர்கள் என்பதே.

குறித்த விடயம் தொடர்பாக கேத்லின் தெரிவிக்கையில், நாம் ஒவ்வொருவருக்கும் மரியாதை கொடுக்க வேண்டும். அதேபோல் ரசிகர்களும் ஒவ்வொருவருக்கும் மரியாதை கொடுப்பதை பார்க்க விரும்புகிறேன். நான் உசைன் போல்ட் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன். போட்டிக்கு வெளியேயும் அவர் ஒரு சிறந்த மனிதன். மிகவும் சாந்தமானவர். எங்கள் இருவருக்கும் இடையில் பகைமை கிடையாது. அங்கே கெட்ட குருதி ஏதும் கிடையாது. நான் ஒரு போட்டியாளர். அவரும் ஒரு போட்டியாளர். அவர் இன்று என்னை தோற்கடித்துள்ளார்.

இதேதான் அவரும் என்னைப் பற்றி சொல்வார் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (ம-ரி4)

## 10 கிலோ மீற்றர் நீச்சலில் நெதர்லாந்துக்குத் தங்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 10 கிலோ மீற்றர் நீச்சலில் நெதர்லாந்துக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

நெதர்லாந்து நாட்டிலிருந்து களமிறங்கிய சரோன் வான் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை ஒரு மணித்தியாலம், 56 நிமிடங்கள், 32 செக்கன்களில் அடைந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். இத்தாலி வீராங்கனை ராச்சி புரூனி ஒரு மணித்தியாலயம், 56 நிமிடங்கள், 49 செக்கன்களில் அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், பிரேஸிலின் பொலினா ஒரு மணித்தியாலம், 56 நிமிடங்கள், 51 செக்கன்களில் அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம -ரி4)





ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்களுக்கான 100 மீற்றர் பட்டர்பிளே நீச்சலில் உலக ஜாம்பவானான அமெரிக்காவின் பெல்ப்ஸை வீழ்த்தி தங்கம் வென்ற சிங்கப்பூர் வீரர் ஸ்கூலிங்குக்கு, அந்த நாட்டில் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக சிங்கப்பூர் ஜனாதிபதி பிரேஸிலுக்கு நேரடியாகச் சென்று ஸ்கூலிங்கை வாழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

# இஸ்ரேலியரைப் புறக்கணித்த விவகாரம்; வீட்டுக்கு அனுப்பப்பட்டார் எகிப்திய வீரர்

எகிப்திய ஜூடோ வீரர் இஸ்லாம் எல் சகாபை என்பவர் தன்னுடன் போட்டியிட்ட இஸ்ரேல் வீரருக்கு கை கொடுக்க மறுத்த விவகாரம், பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம் வரை எடுத்துச் செல்லப்பட்டதில் இஸ்லாம் சகாபை வீட்டுக்கு அனுப் பப்பட்டார். எகிப்திய, இஸ்ரேலிய அரசியல் உறவானது போரின் விளிம்பில் உள்ளது. இந்தியா, பாகிஸ்தான் அரசியல் குழப்பங்கள் இரு நாட்டின் நேரடிக் கிரிக்கெட்டைப் பாதித்ததைப் போல, எகிப்திய, இஸ்ரேலிய அரசியல் நிலவரங்கள் விளையாட்டின் மீதும் தமது ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன.

அண்மையில் இடம்பெற்ற ஜூடோப் போட்டியொன்றில் எகிப்திய, இஸ்ரேலிய வீரர்கள் மோதினர். இஸ்ரேல் வீரர் வெற்றி பெற்றார். போட்டியின் இறுதியில் வீரர்கள் கைகுலுக்கிக் கொள்வது, ஜப்பானிய தற்காப்பு கலைகளுக்கு மரியாதை செலுத்துவதாகக் கருதப்படுகிறது. இஸ்ரேல் வீரர் கைகுலுக்க முன்வந்த போதிலும், எகிப்திய வீரர் அதை உதாசீனம் செய்து சென்றுவிட்டார். ஆரம்பத்தில் இந்த விடயம் பன்னாட்டு ஜூடோ சம்மேளனம் வரை கொண்டு செல்லப்பட்டது. கைகொடுப்பதும் கொடுக்காமல் விடுவதும் வீரர்களின் தனிப்பட்ட விருப்பில் தங்கியுள்ளது எனத் தெரிவித்த ஜூடோ சம்மேளனம் குறித்த விவகாரத்தை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

ஆனால், எகிப்திய வீரர் கைகொடுக்காமல் சென்றமை ஒலிம்பிக் விதிகளுக்கு முரணானது. அவர் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்த பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம் அந்த வீரரை தகுதி நீக்கம் செய்து வீட்டுக்கு அனுப்பியது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புங்குடுதீவு ெ
# ஸ்ரீ முத்துப
# தேர்த்திருவிழ

## குருவின் ஆசிச் செய்தி
## ருத்திரகார சித்திரத்தேர் கானும் சித்தி தரும் நாயகி



சைவமும், தமிழும், தனித்துவமும் சேர்ந்த கடல் சூழ் தீபகற்பம் புங்குடுதீவு மத்திய பகுதியில் பெருங்காடு எனும் பெருமை பெற்ற கோயில் வயல் நாமம் கொண்ட சேஷ்த்திரத்தில் வீற்றிருந்து அருள் தருபவள் அன்னை முத்துமாரி அம்பாள்.

தாயாகிய முத்துமாரிஅம்மன் ஆலயம் எனது விருத்தெரிந்த காலம் முதல் மூர்த்தி தலம் விருட்ஷம் என்ற பெயர் பெற்று விளங்குவது பெருமைக்குரியது.

இதே காலத்திலும் மேலும் பொலிவுற்று மிகமிகச் சிறப்பாக நித்திய நைமித்தியங்கள். உற்சவங்கள் விழாக்கள் என்பன ஆலய நிர்வாக கைங்கரியம் பெற்றவர்கள் மூலமாக சிறப்புடன் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் அவளருள் மேன்மை அடைந்து பக்தர்கள் உள்ளம் கவர்ந்து தனக்கு நிகர் இல்லாத முத்துமாரி அம்மன் மிக அருமையான சித்திரத் தேரில் பவனி வரவேண்டும் என்ற உன்னதமான எண்ணத்தை கொடுத் தருள் பாலித்தாள்.

புலம்பெயர் அன்னையின் அடியார்களும் ஆலய அயல் சூழ் பக்தர்களும் மேலும் பல அன்பர்களும் நிர்வாகஸ்தர்களும் விடா முயற்சி கொண்டு பல லட்சம் ரூபா திருப்பணியில் சித்திரத்தேரும் தேர்ச்சாலையும் மிகப்பிரமாண்டமாக கம்பீரமாக காட்சி தர அமைந்துள்ள பெருமை எம் தாய்க்குரியது.

ஆவணி மாத பௌர்ணமி நன்நாளை தீர்த்தமாகக் கொண்டு நடைபெறுகின்ற மஹோற்சவ விழாவில் இன்று 17.08.2016 (ஆவணி 1) இவ் ஆண்டு காலை வெள்ளோட்டம் பகல் தேர்த்திருவிழாவும் காண்கின்றோர் பிறவியின் பெரும் பயன் அடைவதாக சொல்லப்படுகின்ற இந்த ருத்திரகார சித்திரத் தேர் பவனி மிக உன்னதமான மாபெரும் நிகழ்வு. எனவே தேர்ப்பவனி பார்த்து தேவியின் திருவருள் பெறுவோம்

வாரி வழங்கிய நன்கொடை திருப்பணியாளர்களுக்கு முத்து மாரியம்மன் மெய்யருள் கிடைக்க பிரார்த்தனை செய்கின் றேன்.

குறிப்பு: வேண்டுதல் யாவும் நிறைவேற்றும் சக்தி மிகுந்த அம்பாள் ஆலயம் வந்து பாருங்கள் தீராத பிணி தீரும் இது அனுபவ உண்மை. நான் கண்ட அதிசயம்



**ஆலய குருவும் மகோற்சவ குருவும்**
**சிவஸ்ரீ. சின்னத்துரைஐயர்**
**கணேசராஜக்குருக்கள்**
**சிவகுமாரன் குருக்கள்-புங்குடுதீவு.**

## வெள்ளோட்ட விழாவில் வடம் பிடிக்க வாரீர்



ஈழமணித் திருநாட்டின் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்து சப்த தீவுக ஒன்றான புங்குடுதீவிலே பெருங்காடு கோயில் வயல் எனும் அழகிய திரு ஊரிலே வீற்றிருந்து அ சராசரங்களை எல்லாம் அருளாட்சி செய்து கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பா திருவருள் துணை கொண்டு ஆலய பரிபாலன சபையினர்கள். திருவிழா உபயகாரர் தேர்த்திருப்பணி நன்கொடையாளர்கள் எல்லோரும் இணைந்து துர்முகி வருஷ மஹோற்சவ அம்பிகை சங்காரத் தொழிலை நிறைவேற்றி அழகிய புதிய ருத்திரகார சித்திரத்தேரினை அமை அம்பாளின் அருள் பெற்றிருக்கின்றார்கள்.

பரிபாலன சபையினராகிய எமது வேண்டுதலை ஏற்று திருத்தேர் உருவாக அம்பிகையின் திருவருளோடு எம பக்க பலமாக இணைந்து அளப்பரிய இத் திருப்பணியை நிறைவேற்றிய சகல அன்பர்களுக்கும் எ வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து மகிழ்வதோடு எல்லோரும் இன்று (17.08.2016) புதன்கிழ நடைபெறுகின்ற வெள்ளோட்ட பெருவிழாவில் வடம்பிடிக்க வாரீர் வாரீர் என அன்போடு அழைத்து வேண்டுகின்றே

**சிவத்திரு மா.ஜெயக்கு**
**தலைவர்- ஆலய பரிபாலனச**

## ஸ்ரீமுத்துமாரி அம்மனின் ருத்திரகார சித்திரத்தேர்



புங்குடுதீவு பெருங்காடு கோயில்வயல் திருவருள் தரும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு நிக மங்கலகரமான துர்முகி வருடத்தில் நடைபெறுகின்ற மஹோற்சவப் பெருவிழாவில் அம் திருப்பவனியாக எழுந்தருளி அருள்தர புதிய ருத்திரகார சித்திரத்தேரினை அமைக்க ஆலய பரிபா சபையினராகிய எமக்கு அன்னையின் திருவருட் கடாச்சம் கிடைத்திருக்கின்றது.

அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம்பெறலாம் என்பதற்கமைவாக தாங்கள் பிறந்து வள உயரவைத்த பொன் கொடுத்த தீவாக உலகில் மகிமைபெற்ற புங்குடுதீவினை தன் தூய் நிலத் பெருமை சேர்க்க இத்திருதேர் உருவாகி நன்கொடையாளர்கள் பலர் இத்திருப்பணியில் இணைந்துள்ளார்கள்.

இத் சித்திரத்தேரை உரிய வேளையில் சிறப்பாக வடிவமைத்துத் தந்தவர்கள் விஸ்வப் பிரம்மஸ்ரீ அமரசிங்க ஐங்கரநேசன். அமரசிங்கம் நர்த்தனன் குழுவினர்.

அனைத்து வழிகளிலும் ருத்திரகார சித்திரத்தேர் அமைந்து அதன் வெள்ளோட்டப்பெருவிழா மிகச் சிறப்பாக இ நிகழ உதவிய நெஞ்சங்களுக்கு அம்பிகையின் அருட்கடாச்சம் கிடைக்க அம்பாளின் பாதக்கமலங்கல பணிகின்றேன்.

**சிவத்திரு. கா.நித்தியானந்**
**பொருளாளர்- ஆலய பரிபாலன ச**

## சிற்பாசாரியார்களின் சிந்தனை

எமக்கு என்றும் வழிகாட்டி பேரும் பெரு வாழ்வும் அளித்த அராலி வடக்கு இலந்தை தாழ்வு ஸ்ரீ முருகன் துல நிற்க ஸ்ரீ காளிகா தேவியம்பாளின் அருளாசியுடன் புங்குடுதீவு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாளுக்கு அழகிய சித் தேரினை உருவாக்க எமது தந்தை விஸ்வப் பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்களின் ஆசீர்வாதத்த அவரின் புதல்வர்களான அமரசிங்கம் - ஐங்கரன், அமரசிங்கம் நர்த்தனன் ஆகிய இருவரும் ஆலய பரிபா சபையினரின் அன்பான வேண்டுகோளுக்கமைய இச்சித்திரத் தேரினை உரியவேளையில் சிறப் வடிவமைத்திருக்கின்றோம்.

இளவயதிலே எமது தந்தை எமக்கு கற்றுத்தந்த சிற்ப விதிகளுக்கமைய இந்த புதிய ருத்திரகார சித்திரத் அம்பாளின் பூரணமான அனுக்கிரகத்தோடு அமைந்திருப்பதை நினைக்கின்றபொழுது எமது தந்தையே இதற் லாம் காரணகர்த்தா. அவரையும் இந்த நேரத்தில் மனதில் கொலுவிருத்தி வணங்கி முத்துமாரியம்பாளின் ஆலய பரிபாலன சபையினரின் பூரணமான ஒத்துழைப்பினையும் என் எல்லாம் வல்ல அம்பாள் என்றும் துணையிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.



**விஸ்வப் பிரம்மஸ்ரீ**
**சின்னத்தம்பி அமரசிங்கம்.**

**சிற்பாசாரி**
**அமரசிங்கம் - ஐங்க**
**அமரசிங்கம் - நர்த்த**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருங்காடு கோயில்வயல்
# மாரியம்பாள் ஆலய
# ழா சிறப்பிதழ் 17.08.2016



## அருளாசியுரை



அம்பிகை அடியார்களுக்கு, புங்குடுதீவு பெருங்காடு, கோயில்வயல் திருவருள் மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய அன்பர்களின் அளப்பரிய ஆன்மீக கைங்கரியத்தினால் அழகிய சித்திரத் தேரொன்று அமைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பல் வகைச் சிறப்புக்களைக் கொண்ட புங்குடுதீவு பெருங்காடு, கோயில்வயல் ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் அருளாட்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆலயத்திருப்பணிகளை அம்பிகை அடியவர்கள், நன்கொடையாளர்கள் எல்லோரும் இணைந்து நிறைவேற்றி வருவது பாராட்டத்தக்கவிடயம். அந்த வகையில் இந்த துர்முகி வருஷத்தில் அம்பிகை எழுந்தருளி அருள்பாலிக்க அழகிய திருத்தேரினை அமைத்து கொடுத்திருக்கின்றார்கள். இப்பணியினைச் சிறப்பாக செய்த அனைத்து அன்புள்ளங்களையும் வாழ்த்திப் பாராட்டி அவர்கள் அம்பிகையின் திருவருள்பெற அருளாசி வழங்குகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள்**

## புலம்பெயர்ந்து வாழும் மக்கள் எல்லாம் மனம் குளிர, நிலம் தழைக்க இருக்கின்றாள் எங்கள் முத்து மாரியம்மன்



நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப துன்னை!
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும் பொருளே !அருளே! உமையே! இமையத்து
அன்றும் பிறந்தவளே ! அழியாமுத்தி ஆனந்தமே!

-அபிராமிப்பட்டர்-

புங்குடுதீவின் மத்தியில் ,பெருங்காடு என்னும் பெரும் பதியில், கோயில் வயல் நாயகியாகத் கோலோச்சும் அன்னையாக, வினைகள் அகற்றும் வேதவல்லியாக, அன்னை முத்துமாரியம்பாள் வீற்றிருக்கின்றாள். கிழக்கே கண்ணகை அம்மனும் ,மேற்கே பேச்சி அம்மனும், வடக்கே காளி அம்மனும் துர்க்கை அம்மனும் காவல் நிற்க ,எம் தீவின் நடுநாயகியாக அன்னை மகாமாரி வீற்றிருக்கின்றாள். ஆடிமாதம் பிறந்துவிட்டால், அன்னைக்குப் பெருவிழா! அதாவது பெரும் மஹோற்சவம் சிறப்போடு நடந்தேறும். அவ்வாறே இவ்வாண்டும் பெருவிழாத் தொடங்கி விட்டது. இடையில் ஏற் பட்ட அழிவின் விளிம்பில் இருந்து, எமது ஊர் துளிர்விட்டுத் தழைக்கத் தொடங்கி விட்டது. மிக விரைவில் சோலையாக மாறும் சூழல் மனதை மகிழ்ச்சிக் கடலின் மீது மிதக்கவைக்கின்றது. இவையெல்லாவற்றுக்கும் மூலமே எமது சைவத்திருத்தலங்களும் அதனைப் போற்றும் அன்பர்களின் விடா முயற்சியுமாகும். ஊர் வாழவேண்டு மென்றால், எமது ஊரெல்லாம் ஆலயம் அமையவேண்டும். அப்போது மக்கள் வெள்ளம் பெருக்கெடுத்தோடும். பெருங்காட்டுச் சூழலின் பெருமை பாரீர்! வானுயர்ந்த வண்ணமிகு கோபுரங்கள் ,எமது ஊரின் அழகு காட்டும் கொடியேற்றத் திருவிழாத் தொடங்கி, இன்று புதிய சித்திரத்தேர் ஓடும் நாள் வரையும், மக்கள் பக்தியோடு திரண்டார்கள். வேத பாராயணத்துடன் மேன்மை கொள் சைவத் தமிழ் விளங்க உரைகளையும்.எமது மஹோற்சவக் குருக்கள் ஆற்றிடும் போது அடியார்கள் மெய் சிலிர்த்துப் போனார்கள் அப்பரும் சம்மந்தரும் சுந்தரரும் அருள்மணிவாசகரும்.தந்த தெய்வத்தமிழ் எங்கள் மாரி அம்மன் கோயிலிலே, கோலோச்சி நிற்பதைக்கண்டு மெய் சிலிர்த்தோம், உவகை கொண்டோம், பழைய தேர் ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் பழைமையடைந்து விட்டதால், அன்பர்கள் புதிய சித்திரத்தேரை வடிவமைத்தார்கள்.எத்தனை விமர்சனங்கள்! வேண்டாக் கதைகள்! அத்தனையும் தாண்டி வேண்டத்தக்கது எதுவோ! அதனை புலம்பெயர் அன்பர்களும், உள்ளூரில் வாழும் தற்கொடையாளர்களும் உருவாக்கி விட்டார்கள். இன்று அந்த இனிய தேரிலே, எம் தாய் வருகை தர பிணிதீர்க்கும் வடம் பிடித்து பெருமையுடன் இழுத்துவர, அட்டதிக்குப் பாலர்களும் அருங்காவல் புரிந்துவர, வானவரும் மண்ணவரும் மலர்களைச் சொரிந்துவர, வருகின்றாள் எம் அன்னை! மாரியம்மன் வீதியிலே !பார்த்து மகிழ்ந்திடுவோம்! பரவசமே அடைந்திடுவோம்! நம்மை வழிநடத்திய முன்னோர்கள் பாதையிலே முழு மூச்சுடனே நடந்திடுவோம்.

உலகம் ஈன்ற பெருந்தேவி !
ஒளி சேர் ஞானக்கலையரசி !
இலகும் துயருக்கொரு சூலம்!
ஏந்தும் கருணைக் கருமாரி!
திலகக் குங்குமம் துணையாகும்!
திருவும் அருளும் உருவாகும்!
குலமும் குடியும் தழைவாகும்!
கோடி நலங்கள் விளைவாகும்!



சுப்பிரமணியம்

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்



## சிந்தனைக்குரிய சிற்பத்தேரின் வெள்ளோட்டம் சிறக்க நல் வாழ்த்துக்கள்



இறைவனே கலை வடிவமாகவும், கலைகளின் மிகச்சிறந்த ஆசானாகவும், விளங்குகின்றான். இவ்வகையில் இறைவன் பவனிவரும் தேரும் சைவ ஆன்மீகம் மட்டுமன்றி கவின் கலைகளைப் பிரதிபலிக்கும் கலை ஆக்கமாகவும் இலங்குகின்றது.

இத் திருத்தேரானது சுவாலை விட்டெரியும் அக்கினியின் தோற்றத்திற்கு ஒப்பாக அமைந்திருக்கின்றது. இறைவன் முப்புரம் எரித்த செய்தியையும் முப்புரங்களும் மும்மலங்களாகவும் பாவனை செய்யப்பட்டு மும்மலங்களும் கெடுவதற்காக நிகழ்த்தப்படுவது தேர்த்திருவிழாவாகும்.

இத்தேர் வடிவினை நோக்கும் பொழுது இந்த உடம்பு ஒப்பற்றதொரு தேர். உயிரானது உடம்பை இயக்கிக் கொண்டிருக்கின்றது. உடல்வெறும் சடம். உடலாகிய தேர் தன்னை இயக்கி கொண்டிருப்பது உயிர் என்பதை பூமியாகிய தேரில் இறைவன் எழுந்தருள் புரியும் உண்மையை உணர்பவர்களுக்கு இவ்வுலகில் யாது மோர் குறைவில்லை.

வர்ணனைக்கலாநிதி
**மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் J.P**
ஓம் T.V. நேர்முக வர்ணனையாளர்
(பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை)

## ஓம் T.V இல் வெள்ளோட்டப் பெருவிழா நேரடி அஞ்சல்

இன்று காலை 9.02 மணிமுதல் நடைபெறவுள்ள புதிய ருத்திரகார சித்திரத்தேர் வெள்ளோட்டப் பெருவிழா ஓம் T.V யில் நேரலையாக அஞ்சல் செய்யப்படவுள்ளது. இவ் நேரலை நேரடி அஞ்சல் தெய்வீக நேர்முக வர்ணனையை ஓம் T.V வர்ணனையாளர், தெய்வீக ஞானத்தமிழருவி, வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார்.

# ஆலய பரிபாலனசபை.

த தீவுகளில்
ந்து அண்ட
அம்பாளின்
யகாரர்கள்,
றாற்சவத்தில்
ன அமைத்து

ாடு எமக்குப்
க்கும் எமது
புதன்கிழமை
டுகின்றோம்.
**ஜயக்குமார்**
**ாலனசபை.**

க்கு நிகழும்
ல் அம்பாள்
ய பரிபாலன

ந்து வளர்ந்து
ய நிலத்திற்கு
கள்.
மரசிங்கம் -

ப்பாக இன்று
மலங்களைப்

**ியானந்தன்**
**ாலன சபை.**

கன் துணை
ழகிய சித்திரத்
ர்வாதத்துடன்
ய பரிபாலன
ல் சிறப்பாக

சித்திரத்தேர்
ய இதற்கெல்
ணங்கி ஸ்ரீ
ும் எண்ணி

**ர்பாசாரிகள்**
**- ஐங்கரன்**
**- நர்த்தனன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களைகட்டத் தொடங்கிவிட்டது நல்லூர் நாடகத் திருவிழா

சி.ப.வேந்தன்

நல்லூரில் நடப்பது வெறும் கோயில் திருவிழா அல்ல. அது தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழா. திரு என்கிற கடவுளின் விழா என்ற தமிழ ரின் பாரம் பரியத்தை இன்னும் தன்னகத்தே தக்க வைத்துக்கொண்டிருப்பது. அண்மைக் காலங்களாக அந்த பண்பாட்டுச் சொச்சம் வியாபார ஆதிக்கத்தில் சிக் கித் திணறிவந்தாலும், பண்பாட்டின் எச்சத்தையும் திரு வின் விழாவின் பொலிவையும் இன்னும்மெருகேற்றும்பலதும்நல்லூரைச்சுற்றி ஆங்காங்கே நடந்தேறி வரத் தான் செய்கின்றன. இசை நிகழ்ச்சிகள், கதாப்பிரசங்கங்கள், கலை நிகழ்வுகள் என்பன அவற்றுள் சிலவென்றால், செயல்திறன் அரங்க இயக்கத்தினின் நாடகத் திருவிழா நல்லூர் திருவிழாவின் மணி மகுடம். நாடகம் இல்லாமல் என்ன விழா? முத்தமிழில் மூன்றாம் தமிழ் இல்லாமல் ஒரு விழாவா? அதுவும் தமிழனின் விழா என்றால் அதில்என்ன சிறப்பு? அதுதான் நாடகத்திருவிழாவின் இன்சுவை.
கடந்த இரண்டாண்டுகளைப் போன்றே இம்முறையும் நல்லூர் நாடகத் திருவிழா களைகட்டியிருக்கிறது. கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழா ஆரம்பித்தது. கடந்த இரண்டு ஆண்டுகளைவிடவும் இந்த ஆண்டு மேலும் ஒரு பரிணாமத்தைப் பெற்றிருக்கிறது விழா.
செயல்திறன் அரங்க இயக்கத்தின் சிறுவர் நாடகம், நவீன நாடகம், மோடிமை நாடகம், வேடமுக நாடகங்கள் மற்றும் பாரம்பரியக் கலைக் கழகங்களின் கூத்துக்களும் இசை நாடகங்களும் என இந்த முறையும் 10 நாள்களுக் கும் மேலாகக் கொண்டாட்டத்திற்குக் குறைவில்லை. அவற்றோடு இம்முறை சிறப்பு நிகழ்ச்சியாக இந்தியாவிலிருந்து வருகை தந்த தென்னிந்தியாவின் பாரம்பரிய இசைக் கலைஞர் ஆடலரசு வேணுவின் நெறியாள்கையில் தமிழரின் பாரம்பரிய ஆதி இசைக் கருவியான பறையிசையுடன் கூடிய குச்சியாட்டம், ஒயி லாட்டம், கரகாட்டம், கும்மியாட்டம் போன்றனவும் சேர்ந்துகொண்டு அணிசெய்கின்றன.
இவையெல்லாம் எம்மிடையேயும் புழக்கத்தில் இருந்த ஆட்ட வடிவங்கள்தான். காலத்தால் மறக்கடிக்கப்பட்டு வேறு விடயங்களால் வெள்ளையடிக்கப்பட்டு கொள்ளை யிடப் பட்டுவிட்டோம். இப்போது அவற்றை மீட்டுருவாக்கம் செய்வதில் நாடகத் திருவிழா நல்லூர் பண்பாட்டுத் திரு விழாவுடன் இணைந்திருப்பது காலப்பொருத்தமும் சாலப்பொருத்தமும் என்பதில் ஐயமில்லை.
அதனால்தான் நாடகக் கலைகளின் அத்தனை வகைகளையும் ஒரே மேடையில் காணக்கிடைப்பது அழகானதும் அரிதானதுமான ஒன்று. இதனை நாம் திருவிழாவாகக் கொண்டாடுவது மகத்தானது என்று தெரிவித்தார் நாடகத் திருவிழாவை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய விருந்தினர்களில் ஒருவரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மூத்த ஆங்கில விரிவுரையாளரும் நாடகவிய லாளருமான கந்தையா சிறிகணேசன். ஆடல், பாடல், நாடகம், சித்திரம், கலைகள் மனிதனை வளப்படுத்துகின்றன. மனவலிமையைத் தருகின்றன. ஆளுமையைத் தருகின்றன. உலகிலே மிகப்பெரிய சாதனையாளர்கள் எல்லோரும் கலைகளினாலே வளம் பெற்றவர்கள்தான். இந்தக் கலைகள் அவசியம் தேவை யானவை. ஆராதிக்கப்படவும் அனுபவிக்கப் படவும் வேண்டியவை என்றார் நாடகத் திருவிழாவின் இரண்டாம் நாளில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக முன் னாள் தமிழ்த் துறைத் தலைவரும் பேராசிரியருமான எஸ்.சிவலிங்கராஜா.அவர் சொன்ன தன் உண்மைப் பொருளைத் தொடர்ந்து வந்த ஆற்றுகைகளின்போது கண் முன்னே நேரில் காணமுடிந்தது.
நாட்டார் கலைகளின் சங்கமத்தில் பார்வையாளராய் வந்திருந்த அத்தனை குழந்தைகளும் சிறுவர்களும் பெரியவர்களும் கலை மேடையில் சங்கமமாகி யிருந்தனர். அது பார்ப்பதற்கு அத்தனை அழகு.
முதல் நாளில் அரங்கேறிய, ஈழத்து நவீன நாடக உலகின் தாய் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் முயலார் முயல்கிறார் சிறுவர் நாடகத்தை ஐந்து வயதிலிருந்து 15 வயது வரையான குழந்தைகளே நடித்திருந்தனர். குழந்தைகளின் படைப்புலகம் எவ்வளவு விரிவானது; மட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டது என்பதை எடுத்துக்காட்டியது.
விட்டுவிடுதலையான உணர்வோ அந்தச் சிறுசுகளின் நடிப்பு அப்பப்பா! நாடகத் திருவிழா என்பது வெறும் கேளிக்கைக்கும் கொண்டாட்டத்துக்குமான ஒன்றுமட்டுமல்ல என்பது செயல்திறன் அரங்க இயக்கத்தினைத் தெரிந்தவர்கள் அறிந்ததே. எமது போரின் வலியும் அதன் பின்னரான வாழ்வியல் துயரும் நோவும்கூட நவீன நாட கங்களாக பாணன் குளத்தடியில் இருளின் துயில் கலைக்கின்றன. இந்த முறை அதனை, வலிகளைச் சொந்தமாக அனுபவித்த முல்லைத்தீவு மாவட்டக் கலைகஞர்களே நேரடியாக நிகழ்த்துகிறார்கள்.
அவர்களுடைய கதைகளைப் பேசும் படைப்புக்களான தூவானம்மற்றும் உருமறைப்பு போன்ற நாடகங்களைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் தவறவிடாமல் கட்டாயம் பார்க்கவேண்டும். பல பேசப்படாத பக்கங்களைப் பேசிய அந்த நாடகங்கள் அரங்க வெளியில் பொதுவாழ்வியலில் உள்ள பொறுப்புணர்வுக்கும் நம்பிக்கைக்கும் பெரும் எடுத்துக்காட்டு.
இணுவில் மாருதப்புரவீகவல்லி நாடகக் குழுவினரின் பக்த நந்தனார் இசைநாடகமும் பெரியவர்களை மாத்திரமின்றி வந்திருந்த சிறுவர்களையும் மேடையின் முன்பு கட்டிப்போட்டிருந்தது சிறப்பு. எங்கே எம் அடுத்த தலைமுறைக்கு எமது பாரம்பரியக் கலைகள் பற்றிய புரிதலும் பிடிப்பும் இல்லாது போய்விடுமோ என்று ஆதங்கப்பட்டுக்கொண்டிருக்கும் மூத்த கலைஞர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் இப்படியான மாற்றங்கள் நம்பிக்கையையும் சந்தோசத்தையும் கொடுத்திருக்கிறது.
செயல் திறன் அரங்க இயக்கம் இப்படியான முன்னெடுப்புக்களை செயற்படுத்துவதன் மூலம் புதிய புதிய இளைய கலைஞர்களை உருவாக்குவதோடு பார்வையாளர்களையும் உருவாக்கி வருவது பெறுமதிகளுக்கு அப்பாற்பட்டது. தொடர்ந்து 25ஆம் திகதிவரை நாடகத் திருவிழாவை நடத்துகிறார்கள். தவறாமல் ஒருநாளேனும் போய்ப் பார்த்துவிடுங்கள். மொத்தமும் பார்க்கக் கிடைத்தால் அது நல்லூர்க் கந்தனின் கலை அருள்தான்.

## இது திருவிழாவில் நடக்கின்ற திருவிழா

**நல்லூர் நாடகத் திருவிழா பற்றி செயல்திறன் அரங்க இயக்கத்தின் இயக்குநர் தே. தேவானந்துடன் ஒரு நேர்முகம்**

வருடா வருடம் தொடர்ச்சியாக ஒரு நாடக விழா நடைபெறுவது என்பது கல்லில் நாருரிப்பதைப் போன்றது. செயல்திறன் அரங்க இயக்கம் நான்கு ஆண்டுகளாக அதனை நல்லூர் திருவிழாவையொட்டிய காலத்தில் சாத்தியமாகியிருக்கிறது. இதற்கு முன்னரும் எப்போதாவது இருந்துவிட்டு இவ்வாறான விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன.
ஆனால்தொடர்ச்சியாகநாலாவது ஆண்டாகஇந்தநாடகவிழா நடைபெறுவது ஈழத் தமிழ் நாடாக வரலாற்றின் இன்றைய செல்நெறிப் போக் கில் சாதனைதான். அதைச் சாத்தியமாக்கியவரான செயல்திறன் அரங்க இயக்கத்தின் இயக்குநர் தே.தேவானந்தைச் சந்தித்து இது பற்றி உரையாடுவது என முடிவெடுக்கப்பட்டது. புதன் பொய்கைக்கான பேட்டி என்றதும் அவருக்கேயுரிய அட்டகாசமானசிரிப்புடன்வரவேற்றார்.நட்போடுபேசினார்.

19

நாட்டார் கலைகளின் சங்க மத்தில் பார்வையாள ராய் வந்திருந்த அத்தனை குழந் தைகளும் சிறுவர் களும் பெரியவர்களும் கலை மேடையில் சங்கமமாகியிருந்தனர். அது பார்ப்ப தற்கு அத்தனை அழகு. முதல் நாளில் அரங் கேறிய, ஈழத்து நவீன நாடக உலகின் தாய் குழந்தை ம.சண்முகலிங் கத்தின் முயலார் முயல்கிறார் சிறுவர் நாடகத்தை ஐந்து வயதிலிருந்து 15 வயது வரையான குழந் தைகளே நடித்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது திருவிழாவில் .....

கேள்வியுடனே ஆரம்பித்தோம். எல்லோரும் நாடகங்கள் போடுவதிலிருந்தே ஒதுங்கிப் போய்விடலாம் என்ற நிலையில் இருக்கும் போது எப்படி இந்த முயற்சியை ஆரம்பித்தீர்கள்? எங்கிருந்து அந்தத் துணிவு கிடைத்தது?

*2013ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 100 இளைஞர்களை 5 கிராமங்களிலிருந்து தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அரங்க நுட்பங்களைப் பயிற்றுவித்து அவர்களுடைய கதைகளை நாடகங்களாகத் தயாரித்து நல்லூருக்கு அண்மையில் அமைந்துள்ள கிட்டுப் பூங்காவில் (இன்று சங்கிலியன் பூங்கா என்கிறார்கள்) 9 நாடகங்கள் போட்டோம். 'வி' வடிவிலான புதுவித அரங்கை அப்போதுதான் அறிமுகம் செய்தோம். கூத்தின் அடிப்படையான வட்டத்தையும் நவீனத்தையும் இணைத்து அந்த அரங்கைக் கட்டமைத்தோம். பாரம்பரியத்திலிருந்து நவீனத்தை நோக்கிய குறியீடாகவும் அதனைப் பார்க்கலாம். செயல்திறன் அரங்க இயக்கத்தின் நாடக வரலாறு என்பதே அரங்கினூடாக மக்களுடைய கதைகளைப் பேசுவதுதான். மக்கள் கதைகளைப் பேசுகின்ற அதேவேளை அரங்கை மக்களுடைய கருவியாகப் பயன் படுத்துவதற்கும் முயன்றுகொண்டே இருக்கின்றோம்.*

*போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள் மத்தியில் அரங்கை இயக்கி அவர்களுடைய மன இறுக்கத்தை விடுவித்து அவர்களை ஒரு தளர்வான நிலையில் கொண்டு வந்து அவர்கள் தங்களை உணர்ந்து கொள்ள இடமளிக்கின்றோம். அதனூடாக அவர்கள் தங்கள் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான துணிவைப் பெற்றுக்கொள்ளும் வேலையை செயல்திறன் அரங்க இயக்கம் செய்திருக்கிறது; செய்கிறது.*

*செயல்திறன் அரங்க இயக்கம் அந்தப் பணியுடனேயேதான் ஆரம்பித்தது. 2002ஆம் ஆண்டு முக்கியமாக பெரும் போரின் பின்னரான இடைக்கால அமைதியின்போது நாம் பணியை ஆரம்பித்தோம். மிதிவெடிகள் புதைக்கப்பட்டு பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருந்த யாழ்ப்பாணத்தில் சிறுவர்களுக்கான விழிப்புணர்வை வழங்குவதுடன் அந்தப் பணி ஆரம்பித்தது. பின்னர் படிப்படியாக கிடைத்த சிறு நூலிழை வெளிகளில் நுழைந்து நுழைந்து அரசியல் பேசினோம். பாடுகளைப் பேசினோம். எமக்கு நாமே தைரியமூட்டும் விதத்தில் பேசப்படா பொருள்களைப் பேசுவதற்கான துணிவை அரங்கிற்கூடாகப் பெற முயன்றோம். அந்தத் துணிச்சல்தான் இன்று இந்தச் சூழலில் இன்னும் உத்வேகத்துடன் இயங்குவதற்கு சக்தியளித்திருக்கிறது.*

2002ஆம் ஆண்டிலேதான் நீங்கள் நாடகத்துக்குள் வந்தீர்களா?

*இல்லை அதற்கு முன்பிருந்தே, பல்கலைக் கழகக் காலத்திலிருந்தே நான் நாடகங்களுடன் இணைந்திருக்கிறேன். எனது நாடகங்கள் ஊடாகவே அரசியல்-சார்ந்து பல விடயங்களையும் பேசியிருந்தோம். அப்போது அவை பேசக்கூடாத பொருள்களாகவே இருந்தன. 2000ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திலே மேடையேற்றப்பட்ட "அக்னிப்பெருமூச்சு" என்ற நாடகம் காணாமற்போனவர்களுடைய பிரச்சினையைப் பற்றி அப்போதே பேசியது. இன்று அது ஒரு பெரும் அரசியலாக வளர்ந்து நிற்கின்ற நிலையில், யாழ்ப்பாணத்தில் 1996இல் காணாமற்போனவர்களின் குரல்களை நாம் மேடைக்குக் கொண்டு வந்திருந்தோம். அதேபோல "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" நாடகம் போர் சப்பித் துப்பிய பெண்களின் துயரங்களையும், அவள் மீது இந்தச் சமூகம் திணிக்கின்ற சுமைகளையும் பேசினோம்.*

*ஆனால், 2008 முதல் 2013 வரையான காலப்பகுதி இருண்டகாலமாகியது. நாடகங்களைப் போடுவதென்பதோ நாடக நடிகர்களை ஓரிடத்தில் ஒன்று சேர்ப்பதென்பதோ முடியாத செயலாய் இருந்தது. அத்தனை அடக்குமுறைக்குள் சிக்கிகொண்டிருந்தது இந்த மண். எங்களுக்கு மட்டுமல்ல எல்லாக் கலைஞர்களினதும் நிலையும் அதுதான். அரசியல் நாடகங்களைப் போட முடியவில்லை என்றாலும் அரங்கு சார்ந்து தொடர்ந்தும் மூச்சிழுத்துக்கொண்டேதான் இருந்தோம். இருப்பின் முக்கியத்துவம் துளிர்ப்புக்கு எவ்வளவு அவசியம் என்பதை எப்போதும் உணர்ந்தே இருந்தோம்.*

*ஆனாலும் அரங்கு சார்ந்த இந்தச் சூழ்நிலை தொடர்ந்து உறுத்திக்கொண்டே இருந்தது. இதிலிருந்து எங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும். அதற்கு முடிவு கட்டவேண்டும் என்ற துடிப்பு உந்திக்கொண்டே இருந்தது. சோம்பிக் கிடப்பதைவிடுத்து மீண்டும் வீறுகொள்ளும் எண்ணத்துடன் 2013ஆம் ஆண்டு திரும்பவும் நாடகங்களின் தயாரிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கினோம். அப்போதும் களநிலமைகளில் முன்னேற்றம் ஏதுமிருக்கவில்லை.*

*நாடகங்கள் போடுவதென்பதே அரசியல் அணிதிரட்டல் என்று நோக்கப்பட்ட காலம் தொடர்ந்துகொண்டிருந்தது. ஆள்களைத் தருவிப்பது சிக்கலானதாக இருந்தது. எனவே கிராமங்களில் உள்ள இளைஞர்களைத் தேடி நாங்களே போவது என்று முடிவெடுத்தோம். பன்னாட்டு அரசசார்பற்ற நிறுவனத்தினுடைய நிதியுதவியோடு 5 கிராமங்களிலே இருந்து 100 இளைஞர்களைத் திரட்டி அவர்கள் பகுதிகளிலேயே அவர்களுக்கு நாடகப் பயிற்சிகளை வழங்கி அவர்களை வலுப்படுத்தினோம். அவர்களின் கதைகளையே நாடகமாக்கி மேடையேற்றினோம். அவை அன்றிருந்த எல்லா அரசியலையும் நேரடியாகப் பேசின. பலத்த அச்சத்துடனும் பின்விளைவுகளுக்கான எதிர்பார்க்கைகளுடனும் அவற்றை மேடையேற்றினோம். அவ்வாறு மேடையேற்றிய கதைகளில் முக்கியமானது "கருப்பைத் தருக்கணிப்பு" என்ற நாடகம். எங்கள் சொந்த மண்ணில் உள்ள வளமான எல்லாமும் இடம்மாறிச் செல்கின்றன அல்லது திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன; நுண் நகர்வுகளுடன் இந்த மண் தருக்கணிக்க வைக்கப்படுகிறது என்பதை அந்த நாடகம் பேசியது. அதில் அரசியல்வாதிகளின் பங்கைப் பற்றியும் அது வெளிப்படையாகவே பேசியது.*

*அதேபோல "வீடுபேறு" நாடகம் 25 வருடங்களாக தமது சொந்த இடங்களுக்குத் திரும்பக் காத்திருந்த வலி.வடக்கு மக்களின் ஏக்கத்தையும் உணர்வையும் பேசியது. இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னர் தன்னுடைய சொந்த வீட்டுக்குப் போன ஒருவர் " மீளக்குடியமர்ந்தவர் " அந்த வீடு தன்னை ஏற்றுக்கொள்ளவில்லை என்று உணர்வதாகக் கதை நீண்டிருக்கும். வீடுகளுடனான யாழ்ப்பாணத்தவரின் மிக நுண் உணர்வுகளைப் பேசிய நாடகம் அது. அத்தகைய இறுக்கமான சூழலிலும் பார்வையாளர்கள் காட்டிய ஆர்வம் வியக்கவைத்தது. சிந்திக்க வைத்தது. சுற்றிவர கண்காணிப்பாளர்கள் உள்ளனர் என்று உணர்ந்துகொண்டே அந்த நாடகங்களை அவர்கள் ரசித்த தன்மை உற்சாகமூட்டியது. அந்த முயற்சியில் கிடைத்த நம்பிக்கையை மூலதனமாக்கிக்கொண்டுதான் அடுத்த ஆண்டில் ஒரு நாடகத் திருவிழாவை நடத்தத் திட்டமிட்டோம். இன்று அதுவேதான் வளர்ந்து நிற்கின்றது.*

இதையெல்லாம் எதற்காகச் செய்கிறீர்கள்? நல்லூர் திருவிழாவின் கொண்டாட்ட கேளிக்கையின் பகுதியாகவா?

*எங்களுடைய இலக்கு நாடகங்களை வெறுமனே மகிழ்வளிப்புக்கானவையல்ல. மட்டுமல்லாமல் நல்ல விடயங்களை காத்திரமான கதைகளைச் சொல்லுவதான முறையில் மேடையைப் பயன்படுத்துவது என்பதுதான் அடிப்படை. நல்லூர்ச் சூழலிலே பல்வேறுபட்ட கலைநிகழ்வுகள் நடைபெற்று வந்தாலும் அங்கெல்லாம் மக்கள் கூட்டத்தைக் காண்பதென்பது இன்று அரிதாகி வருகிறது. ஆனால் இங்கே மாலை 6 மணி என்றவுடனேயே சுமார் 300 பேர்வரையிலே கூடிவிடுகிறார்கள். பின்னிரவில் அது மேலும் கூடும். இதற்கு முக்கிய காரணம் சிறுவர்கள். எங்களுக்கு ஒரு நிரந்தரமான சிறுவர் பார்வையாளர் கூட்டமே இங்கே இருக்கிறது. அவர்களுக்காகவாவது எப்பாடுபட்டென்றாலும் இந்த நாடக விழாவைத் தொடரவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு நாடகங்களைப் போட்டுக்காட்டாமல் விட்டுவிட்டு, அவர்கள் வளர்ந்ததும் நாடகங்கள் பார்க்க வருகிறார்கள் இல்லை என்று குறைப்படுவதில் என்ன அர்த்தம் இருக்கமுடியும்? எனவேதான் எந்தத் துன்பங்களுக்கும் மத்தியில் இந்த விழாவைத் தொடர்கிறோம். இது திருவிழாவிலே நடக்கின்ற திருவிழாதான் அதற்காக வெற்றுக் கேளிக்கைக் கொண்டாட்டமல்ல.*

கடந்த ஆண்டு போடப்பட்ட நாடகங்கள்தான் இந்த ஆண்டும் போடுகிறீர்களா?

*2016இல் முக்கியமாக முல்லைத்தீவிலிருந்து இளைஞர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கதைகளை யாழ்ப்பாண மக்களுடன் பகிர்ந்துகொள்கிறார்கள். தெரிவுசெய்யப்பட்ட 15 இளைஞர்கள் தங்கள் நாடகங்களை இங்கே ஆற்றுகை செய்கிறார்கள்.*

*"தூவானம்" என்பது போர் முடிந்த பின்னரும் தொடரும் அவலங்களைப் பேசுகிறது. குறியீட்டுப் பாங்கான நடன அரங்க வடிவில் அது அளிக்கை செய்யப்படுகிறது. புதையுண்ட சடங்குகள் பல உயிரிழப்புக்கள் நடைபெற்றாலும் அதற்குச் சடங்குகள் நடைபெறவில்லை என்பதில் உள்ள துயரத்தைப் பேசும். அதேபோன்று "உருமறைப்பு" உயிர்களைப் பாதுகாப்பதற்காக தங்களை உருமறைப்புச் செய்த கதைகளைப் பேசும். "இரகசியப் படுகொலைகள்" எனும் நாடகம் இனப்படுகொலை பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கும் போதே திட்டமிட்டுப் படுகொலைகள் நடந்துகொண்டுதான் இருக்கிறன என்பதைச் சொல்கிறது. போரால் எல்லாவற்றையும் இழந்த மக்களிடம் இருப்பவற்றையும் சுரண்டும் பொருளாதார நிறுவனங்களின் கதைகளும் இங்கு பேசப்படுகின்றன.*

*இவற்றோடு செயல்திறன் அரங்க இயக்கத்தின் இளம் ரசிகர் பட்டாளத்துக்கான குழந்தை ம.சண்முகலிங்கத்தின் சிறுவர் நாடகங்களும் உள்ளன.*

*இந்த வருடம் மொத்தமாக நாங்கள் 20 நாடகங்களை 12 நாள்களில் 40 தடவைகள் மேடையேற்றவுள்ளோம்.*

*இம்முறை உள்ள மற்றொரு பெரும் சிறப்பு, நாம் தொலைத்த நாட்டார் கலைகளின் ஆற்றுகைகளையும் இந்த விழாவில் சேர்த்துக் கொண்டிருப்பதுதான். சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய 'முற்றம்' கலைக் குழுவும் செயல்திறன் அரங்க இயக்கமும் இணைந்து தென்னிந்திய நாட்டார் கலைகளினுடைய ஆற்றுகையை வழங்கி வருகின்றது. இதற்காக தமிழகத்தில் இருந்து ஆதி தமிழர் கலைக் குழுவின் சார்பாக ஆடலரசு வேணு வந்திருக்கிறார். அவர் இங்குள்ள இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி அவர்களுடன் கூடவே மேடையிலே ஆற்றுகையை நிகழ்த்துகிறார்.*

*இது ஓர் அற்புதமான அனுபவம். வெறுமனே நாடக விழாவாக மட்டுமல்லாமல் இன்னொரு பரிமாணத்தை ஆற்றுகைக் கலைகளின் மையத்தை இது எட்டியிருக்கிறது. தென்னிந்திய கலையும் எங்களுடைய கலைகளும் இணையும் ஒரு சங்கமமாக இது அமையும்.* ०

## உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? துலாம்



குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை சுவுடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை-தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள் வரை

யார் மனதையும் புண்படுத் தாத துலாம் ராசி அன்பர்களே! நீதியின் சின்னமான தராசு உங்கள் ராசியின் சின்னமாக விளங்குவதால், நீங்கள் நியாயத்தைப் பேசவேண்டுமென்றும், நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் சொல்வீர்கள். அநியாயத்தைக் கண்டால் அதிக தூரம் சென்று விடுவீர்கள். தனியாக இருக்க விரும்பமாட் டீர்கள். வாதாடிவெற்றிபெறும் குணம்கொண்ட நீங்கள், வருங்காலம் எப்படியிருந்தாலும் வாழ்ந்து காட்ட வேண்டுமென்று நினைப்பவர். மதிக்காத வர்களுக்கு நீங்களும் மதிப்புக் கொடுக்க மாட்டீர்கள்.

உங்கள் ராசிக்கு 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குருபகவான். அவர் ஆடி 18ஆம் திகதி (2.8.2016) விரயஸ்தானம் எனப்படும் பன்னிரண் டாம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே விரயங்கள் கூடுதலாக வந்தாலும், அதனை வீண் விரயமாக இல்லாமல் சுபவிரயமாக மாற்றிக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

6க்கு அதிபதி 12இல் சஞ்சரிக்கப்போவதால் விபரீத ராஜ யோக அடிப்படையில் பலன் தரும் என்பதால் நீங்கள் திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திரவிய லாபம் உண்டு. வரவு வந்து செலவழியுமே தவிர, வரவு இல்லாமல் செலவு இருக்காது. ஏதாவது ஒரு வழியில் பணம் வந்து கொண்டே இருக்கும்.

உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, விரயத்தை ஏற்படுத்தி விடுவாரோ என்று நீங்கள் பயப்படலாம். ஆனால் சுபவிரயமாக மாற்றி வீடு கட்டுவது, மனை வாங்குவது, கட்டிய வீட்டைப் பராமரிப்பது, பிள்ளைகளுக்கு திருமணம் நடத்து வது, ஆடை, ஆபரணங்கள் வாங்குவது போன்ற வற்றைச் செய்யலாம். கூட்டாளிகள் விலக நேரிடும். புதிய கூட்டாளிகள் வந்திணைவர். உங்கள் கருத்துக்கு ஒத்துவராத பணியாளர்களையும் மாற்ற முன்வருவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர் களுக்கு உயர் பதவிகள் கிடைக்கலாம். உயர் அதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பார்கள். இதுபோன்ற காலங்களில் கடன் வாங்கியும் சில காரியங்களைச் செய்ய நேரிடும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா? என்று சிந்திப்பீர்கள். *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவாலி சென்.பீற்றேஸ் பாடசாலை வெளியிடும்

# 'அருணன்'




தேவிபரமலிங்கம்

ஐந்தாறு தசாப்தங்களுக்கு முன்பாக பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், இளைஞர் மன்றங்கள் என்பன எழுத்து வாண்மையை வளர்த்துக் கொள்ளவும் வாசிப்புத் தேவைகளை முழுமை செய்யவும் இந்திய தமிழக வெளியீடுகளை நம்பியதைத் தவிர கையெழுத்துப் பிரதிகளைத் தொடர்ந்து கல்லச்சுப் பிரதிகளை வெளியிட்டும் வந்தனர்.

அச்சுவெளியீடுகளைக்கொணர முழுந்த இந்தக் காலங்களிலும் அவற்றை நிறைவேற்ற நிதி வலுக்குறைவாலும் இதழ்களை விற்பனை செய்வதில் இருக்கக்கூடிய பின்னடைவுகளாலும் இந்நாள்களில்கூட ஆங்காங்கே கையெழுத்துப் பிரதிகளையும் கல்லச்சுப் பிரதிகளையும் வெளியிட வேண்டிய கட்டாயம் நிலவி வருகிறது.

பாடசாலை மாணவப் பராயங்களில் கையெழுத்துப் பிரதிகளில் எழுதிப் பின்னாளில் பிரபல எழுத்தாளர்களாக வளர்ந்தவர்களில் இரசிகமணி கனக செந்தில்நாதன் சிற்பி சிவசரவணபவன் மற்றும் அன்னலஷ்மி இராசதுரை (யாழ்நங்கை) கவிஞர் வி.கந்தவனம் மதுரகவி இ.நாகராஜன் மற்றும் இன்னும் பலரையும் நினைவு கூரலாம்.

இந்நிலையில் நவாலி என்னும் கிராம மட்டத்தில் இன்னமும் 135 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் ஐந்தாம் வகுப்புக்கு மேலே போகாத பாடசாலையாகத் திகழும் சென்.பீற்றேஸ் பாடசாலை 2015 ஆம் ஆண்டில் இருந்து அருணன் என்னும் சஞ்சிகையை வெளியிட்டு வருவதைப்பாராட்டாமல் இருக்க முடியாது.

இத்தகைய வெளிப்பாடுகள் அதிபர், ஆசிரியர்களின் அயராத உழைப்பை உணர்த்தி நிற்கின்றது. அதிபர்.க.ஶ்ரீநந்தகோபன், உப அதிபர் திருமதி செந்தினி தர்மசீலன் மற்றும் சஞ்சிகை ஆசிரியர் குழுவில் பங்கெடுத்துள்ள ஆசிரியர்கள் தொண்டர் ஆசிரியர்களான திருமதி கோ. சிவராசா, திருமதி கௌ. திருவரங்கன், திருமதி ஜே.பரமகுலராஜா, திருமதி டி.அனுசான், திருமதி தி.நிரூபன் மற்றும் அ.அரசகுலசேகரன், திருமதி ம.நிரோசினி, செல்விகள் எ.பத்மகோபதி, எஸ்.சிந்துசா போன்றோர் கவனிப்புக்கு உரியவராகின்றனர்.

மொத்தமாக 155 மாணவர்கள் அடங்கிய பாடசாலையில் இருந்து 91 மாணவமணிகள் இச்சஞ்சிகையில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் என்பது அலாதியானது.

முன்பக்கம் நூல் விவரம் இந்த இதழில்... அதிபரின் செய்தி, பிரதி அதிபரின் செய்தி, பாடசாலை இலச்சினை, மகுடவாசகம் இலக்கு, தூரநோக்கு பாடசாலை கீதம் சமர்ப்பணம் மற்றும் சஞ்சிகை வெளியீடு அறிவித்தல் என தனியான 08 பக்கங்களுடன் மொத்தம் 42 பக்கங்களில் அருணன் மலர்ந்துள்ளான்.

இக்காலங்களில் மாணவ மணிகளின் படைப்பாற்றல்களை தினசரி செய்திப் பத்திரிகைகள் தினம் வார இதழ்களில் அதிலும் உதயன் பத்திரிகை ஒவ்வொரு நாளிலும் சிறுவர் பகுதி வெளியிட்டு வளர்த்தும் வருவது சுட்டிக் காட்டலாம்.

இவ்வாண்டு 2016இல் வெளியிடப்பட்டிருக்கும் அருணன் இதழ் 2இல் பக்கம் 01இல் இருந்து 18 பக்கங்களில் மாணவர்களின் படைப்புக்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருப்பது நல்லதொரு வாய்ப்பாகவே கருதலாம்.

அவை 20 கட்டுரைகள், 24 கவிதைகள், 49 துணுக்குகள், 07 சித்திரங்கள், 04 ஒட்டுச்சித்திரங்கள், 05 உறுப்பெழுத்துக்கள், 04 ஆங்கில விடயங்களாக அமைந்துள்ளன.

இரண்டு பக்கங்களில் மாணவர் பல்வேறு இடங்களில் பங்கெடுத்து சித்திரம், சிறுவர் அரங்கு, பேச்சு, பரீட்சைவினாடி வினா துரித கணிதச் செய்கை ஆங்கிலம் செயற்பட்டு மகிழ்வோம் ஆகியவற்றில் தேர்வான பெறுபேறுகளின் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

11 பக்கங்களில் 21.07.2015 தொடக்கம் 20.07.2016 வரையில் பாடசாலையில் நடந்தேறிய நினைவுகளின் நிழல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரியும் பழைய மாணவர்களின் புகைப்படங்கள் மற்றும் புலமைப் பரீட்சையில் தோற்றிய தேறிய மாணவ மாணவிகள் உப அதிபருடன் காணப்படும் புகைப்படம் என்பன சரங்களாகத் திகழ்கின்றன.

அருணன் இதழ் 2 இன் முன் அட்டையை 2015 ஆம் ஆண்டு வெளியிட்டு வைக்கப்பட்ட இதழ் ஒன்றின் வெளியீடு மற்றும் அவ்வாண்டு நடைபெற்ற கற்றல்-கற்பித்தல் உபகரணக் காட்சிக்கூடம் திறந்து வைத்தல் ஆகியவற்றின் நிழற்படங்கள் அலங்கரிக்கின்றன.

இவ்விதழ் மிகத்தரமான தாள்களில் நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது. விலை குறிப்பிடவில்லை. எமது வடபிரதேச ஏனைய பாடசாலைகளும் இதுபோன்ற சஞ்சிகைகளை வெளியிட முன்வந்தால் கல்வியொடு மாணவரிடையே படைப்பாற்றலையும் வளர்த்தெடுக்க உதவும்.





## கரவெட்டியிலோர் கவிதை நூல் வெளியீடு

கடந்த 6 ஆம் திகதி கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் கண்ணன் கண்ணராசனின் 'கிறுக்கிப்போட்ட காகிதங்கள்' கவிதை நூல் வெளியீடு செய்யப்பட்டது. முதன்மை விருந்தினராக செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் கலந்துகொண்டார். நூலாசிரியர் அறிமுகத்தை கனடாவிலிருந்து வருகை தந்த இலக்கிவாதியாகிய மணிமேகலை கைலைவாசன் வழங்கியிருந்தார். நிகழ்வின் தலைமையை ஒளிஅரசி சஞ்சிகைகளின் இணையாசிரியர் திருமதி பா.ஜெயிலா பொறுப்பேற்றிருந்தார்.

நிகழ்வுகள் அனைத்தையும் கவிஞர் யோ.புரட்சி தொகுத்துக்கொடுத்திருந்தார். நூலின் முதற்பிரதியை நூலாசிரியரின் பெற்றோர் வெளியிட்டுவைக்க, முதன்மை விருந்தினர் லலீசன் முன்னிலையில் திருமதி மணிமேகலை கைலைவாசன் பெற்றுக்கொண்டார். நூலின் திறனாய்வுரையை வே.முல்லைத்தீபன் வழங்கியிருந்தார். நிகழ்வுக்கு வருகை தந்த விருந்தினர்களுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். விசேடமாக இளவல்கள் ஒன்றிணைந்த நகைச்சுவைக் கவியரங்கமும் இடம்பெற்றது. உண்மையில் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட ஆர்வலர்கள் நிகழ்வுகள் முடியும் வரை சோர்வின்றி அமர்ந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரியில் அரங்கேறிய
# தென்மராட்சி விழா 2016

தென்னவன்

பயிற்சிகள் தருகின்ற அனுபவங்களே ஒருவரை வெற்றி வீரராகவும் சாதனையாளராகவும் மாற்றும் என்பதில் ஐயமில்லை. தொடர்ந்து பெறும் பயிற்சிகளால் உடல்வளம் பெறவதுடன், மனிதர்களுக்கு ஏற்படும் தடுமாற்றங்களும் நிவர்த்தி பெறும். தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்த வருடம் மாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட மாகாண நிலை விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களைப்பெற்றுவந்த மாணவர்களைக் கௌரவித்து, ஊக்குவிக்க வும் பிரதேசத்தில் வளர்ந்து வரும் விளையாட்டுத்துறையில் ஆர்வ முள்ளவர்களை ஊக்குவிக்கவுமென தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக புலம்பெயர் நாடுகளில் உள்ள தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் கிளைகளின் பங்களிப்புடன் நடத்தப்பட்ட நிகழ்வே தென்மராட்சி விழாவாகும்..





விழாவின் நோக்கத்தை நோக்கும் போது பல்வேறு விடயங்களைக் கணிக்க முடிந்தது. பிரதேசத்தில் மேலோங்கிக் காணப்பட்ட கலைகள் தற்போது குறைவடைந்து வரும் நிலை காணப்படுகிறது. இந்தக் கலைகள் தற்போது பாடசாலை மாணவர்களால் மட்டுமே அரங்கேற்றப்படும் நிலையில், கலைத்தறையில் அளப்பரிய சேவைகளை மேற்கொண்ட பல கலைஞர்களை ஊக்குவிக்கவும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. விளையாட்டுக்கும் கல்விக்கும் வயது கிடையாது என்பார்கள். பிரதேசத்தில் பல்வேறு பாரம்பரிய விளையாட்டுக்கள் உள்ள போதிலும் அவற்றை முன்னெடுத்துச் செயற்படுத்த கழகங்கள் தவிர வேறொருவரும் முன்வருவதில்லை. பிரதேசத்தில் மங்கிவரும் கலைகளையும் விளையாட்டுக்களையும் மேம்படுத்தவென தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் தமது ஆதங்கத்தைப் புலம்பெயர் நாடுகளில் உள்ள கழகத்தின் கிளைகளுக்குத் தெரிவித்ததையடுத்து, அவர்களால் இவர்களது கோரிக்கை முன்னெடுக்கப்பட்டு, பிரதேசத்தில் கலைகள் மற்றும் விளையாட்டுக்கள் அழிவடையக் கூடாது. அவற்றை வருடா வருடம் நடத்தி மாணவர்கள் மட்டுமல்ல இளைஞர், யுவதிகளுடன் வயதுவேறுபாடின்றிகலைகளையும் விளையாட்டுக்களையும் நடத்துமாறும் கேட்டிருந்தனர்.

அதன் பிரகாரம் ஒழுங்கமைக்கப்பட்டு விண்ணப்பங்கள் பிரதேச கழகங்கள் பாடசாலைகளி டமிருந்து கோரப்பட்டிருந்தன.



பாரம்பரிய கலைகளை உள்ளடக்கிய இயல், இசை நாடகங்கள் போன்ற நிகழ்வுகளுக்கு கலைமன்றங்கள் எவையும் விண்ணப்பிக்கவில்லை. அத்துடன் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற பாடசாலைகளும் விளையாட்டுக் கழகங்களும் இளைஞர் கழகங்களும் குழுநிலைப் போட்டிகளுக் கும் தனிநபர் போட்டிகளுக்கும் விண்ணப்பித்திருந்தன.

கலைப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கிடைக்காத நிலையில், விளையாட்டுப் போட்டிகளுக்கு விண்ணப்பித்தவர்களிடையே போட்டிகள் நடத்த முடிவு செய்யப்பட்டு, பிரதேசத்தில் நல்லதொரு விளையாட்டு மைதானம் இல்லாத காரணத்தினால் மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்திலும் பாடசாலைகளிலும் போட்டிகள் நடத்தப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இளைஞர்கள் கலாசாரப் பிறழ்வுகளுக்கு உள்ளாவதற்கு ஏனைய பிரதேசங்களைப் போன்று இங்கு மைதானம் இல்லாதமை ஒரு காரணமாக இருக்கிறது என முதியவர்கள் தெரிவித்தனர். முன்னைய காலங்களில் இளைஞர்கள் மாலை 4 மணியானதும் தத்தமது பிரிவில் உள்ள மைதானங்களில் பயிற்சிகளைப் பெற்று வந்தனர். இதனால் மைதானத்தில் பயிற்சிகளைப் பெற்றதுடன் கிராம ஒற்றுமைகளையும் வளர்த்த வந்தனர். மைதான வசதிகள் இல்லாததால் இளைஞர்கள் வீதிகளுக்கு வருகை தந்து, கலாசார சீர்கேடுகளுக்கு உள்ளாகின்றனர். சாவகச்சேரி நகரத்தைப் பொறுத்தவரையில், முன்னர் கோவிற்குடியிருப்புப் பகுதியில் மகிழங்கேணி மைதானம் இருந்தது .அங்கு தினமும் பெருமளவு இளைஞர்கள் பயிற்சிகளை மேற்கொண்டு வந்தனர். பயிற்சிகளைப் பார்வையிடப் பலர் மைதானத்துக்கு வந்து, வெளியே இருந்து, ஊக்குவித்து வந்தனர். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இந்த மைதானத்தைப் பயன்படுத்தி வந்தது. இந்த மைதானத்தில் பிரதேச விளையாட்டுக்களும் பயிற்சிகளும் நடத்தப்பட்டு வந்தன. 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மைதானம் அமைந்திருந்த பகுதி, அதியுயர் பாதுகாப்பு வலயமாக அமைந்ததால், 2010 ஆம் ஆண்டு வரை மைதானமாகப் பயன்படுத்தப்படவில்லை. இதனால் மைதானம் இல்லாததால் நகரப் பகுதியில் இயங்கிய பல விளையாட்டுக்கழகங்கள் செயலிழந்து போயின. டிறிபேக் கல்லூரி தனது வளாகத்தினுள் சிறிய மைதானம் அமைத்து போட்டிகளை நடத்தி வருகிறது.

சாவகச்சேரி நகரசபையினர் நகர்ப்பகுதியில் தனங்களப்பு வீதியில் உள்ள ஏழு ஏக்கர் காணியை சுவீகரித்து, மைதானத்தை உரு வாக்கியபோது, அங்கு தினமும் விளையாட்டுக்களும் நடைபெற்று வந்தன. அங்கு பார்வையாளர்களுக்கென மண்டபமும் நகர சபையினால் அமைக் கப்பட்டுள்ளது.

இந்த மைதானத்தைப் புனரமைத்துத் தருவதாக விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்தபோதிலும், அது இன்ன மும் நிறைவேற்றப்படவில்லை.

2014 ஆம் ஆண்டு பொதுச் சந்தை வளாகத்தில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வந்ததால், இங்கு இயங்கிய சந்தையின் விற்பனைப் பிரிவுகள் கொட்டில்கள் அமைத்து இயங்கி, மீண்டும் சொந்த இடத்துக்குத் திரும்பியுள்ளன.

கடந்த மூன்று வரு டங்களாக மைதானம் பயன்படுத்தப் படாததால் அங்கு புற்களும் பற்றைகளும், நிறைந்து பயன்படுத்த முடியாத நிலைகாணப்படுகின்றது.அதனைத் துப்புரவு செய்ய நகரசபையும் முன் வரவில்லை. விளையாட்டுக் கழகங்களும் முன்வரவில்லை.

இதன் காரணமாக தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட குழுநிலைப் போட்டிகள் மற்றும் தடகளப் போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றன.

மறுநாள் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் பரிசில் வழங்கல் கௌரவிப்பு கலை நிகழ்வுகள் போன்றவை இடம்பெற்றன.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக



(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பக் கலையை ஆலயங்கள் வாழ வைக்க வேண்டும்

மு.மேகநாதன் ஸ்தபதி

எமது சிற்பக்கலை என்பது எம்முன்னோர்களால் கட்டிக்காப்பாற்றி வரப்பட்ட ஓர் அபூர்வமான அற்புதக்கலை. அவர்கள் காட்டிய வழியில் தற்போது குறிப்பிடத்தக்க கலைஞர்களால் காப்பற்றி வரப்படுகின்றது. (தனித்தனியாக பெயர்கள் குறிப்பிடவில்லை)

ஒரு காலத்தில் இந்தியாவைச் சேர்ந்த சிற்பிகள்தான் இங்கு வந்து தேர்கள் செய்தனர். அவை அனைத்தும் இன்றும் அழியாக் கலையாக உள்ளன. பின்பு அவர்களுடன் இணைந்து பணியாற்றிய எமது முன்னோர்கள், அவர்களிடமிருந்து சிற்பக்கலை நுணுக்கங்களைக் கற்று, அவர்களுக்கே சவால் விடுமளவுக்கு தொழில் புரிந்தனர். அதன் எடுத்துக் காட்டாகவே திருநெல்வேலியைச் சேர்ந்த எமது மூத்த சிற்பாசாரியார் தலைமையில் வண்ணை வீர காளியம்மன் ஆலயத்துக்கு யாழ்ப்பாணச் சிற்பிகளினால் ஒரு புதுமை ஏற்படுத்தி-புது வரலாறு ஏற்படுத்தப்பட்டது.

அதுவரை தேர் வேலைகளுக்கு இந்திய சிற்பிகளை நம்பியிருந்த ஆலயங்கள் எமது சிற்பாசாரியார்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்தனர். தரமான சிற்பாசாரியார்கள் உருவாகினர். தரமான வேலைகளைச் செய்தனர். எமது சிற்பிகளின் பெருமை உலகெங்கும் பரவியது.

இவை அனைத்தும் முன்பு எமது ஆலயங்கள் சரியான, திறமையான எல்லாம் தெரிந்த சிற்பிகளைத் தெரிவுசெய்து, வேலைகள் கொடுத்ததனால் ஏற்பட்டவையே. இன்று சிற்பிகள் அருகி விட்டனர். தேர் வேலைகாரர் கூடிவிட்டனர். சிற்பாசாரியார்கள் தான் குறைந்து விட்டனர். இந்த நிலை தொடர்ந்தால் மீண்டும் நாம் இந்திய சிற்பிகளிடம் கையேந்தும் நிலையை எமது ஆலயங்கள் ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சம் என் போன்ற கலைஞர்களுக்கு ஏற்படுகின்றது.

ஒரு தேர் வேலையோ? வாகன வேலையோ? மற்றும் வேலைகள் எல்லாம் கற்றுணர்ந்த சிற்பிகளினால்தான் செய்யமுடியும் என்றிருக்கும் நிலை மாறுகின்றதோ என்ற அச்சத்தை ஆலயங்கள் ஏற்படுத்துகின்றன. இதற்கு முக்கிய காரணம், தற்போதுள்ள ஆலய நிர்வாகத்தினருக்கு இந்த வேலைகள் பற்றிய போதிய அறிவோ அவை பற்றிய சயான புரிதலோ இல்லாமையே எதற்காக ஆலய நிர்வாகங்கள் சரியான சிற்பாசாரியார்களைத் தெரிவுசெய்து வேலைகளை ஒப்படைப்பதற்கு தயங்குகின்றன? தேர் செய்வதென்பது ஒரு கலை. அது வெறும் வேலை அல்ல. அதனை முறையான கலைஞர்களைக் கொண்டே செய்யவேண்டும். இன்று பல இடங்களில் அப்படி நடப்பதில்லை. இதனால் இந்தக் கலையே முற்றாக அழிந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுகின்றது.

தேர் செய்யவேண்டும், வாகனம் செய்யவேண்டும் என்று ஆசைப்படும் ஆசாரிமார் தங்களால் முடியாதவிடத்து அவரவர்களின் மக்களை நல்லதொரு சிற்பியிடம் விட்டுத் தங்களால் முடியாமல் போனதை அவர்களின் பிள்ளைகள் மூலம் நிறைவேற்றிக் கொள்ளாலாம்தானே. ஆலய நிர்வாகத்தினருக்கும் ஓர் தெளிவான நிலை இல்லை. இதற்கு அறியாமையாதான் விருப்பமா? அல்லது தாங்கள் விரும்புவோரைத் தேர் வேலைக்காரணாக்கி தேர்க்கலையை அழிப்பது தான் விருப்பமா? இவைகளை ஏன் ஏற்க மறுக்கின்றனர். ஆலயங்கள் தங்கள் தங்கள் சுயலாபத்துக்காகவும் இலாபத்துக்காகவும் ஆசைப்படாமல் கலைகளை வளர்க்க முன்னவரவேண்டும். நம் முன்னோர்கள் செய்த கலைப் பொக்கிசங்களை இன் றுள்ள நாம் பார்த்து அதிசயப்படுவதைப்போல் இனிவரும் சந்ததியினருக்கும் இன்றுள்ள சிற்பாசாரியார்கள் ஊருவாக்கி வைத்துவிட்டுச் செல்ல வேண்டும். சிற் பக்கலை என்பது பணம் சம்பாதிக்கும் ஒரு கலையில்லை. சிற்பக்கலைஞனின் ஆத்மதிருப்தியே அவனது இலட்சியம். இதனை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த வேலையை மட்டும் செய்யவேண்டும். முடியாதவிடத்து அதற்குத் தகுதியானவர்களைச் செய்ய விடுங்கள்-வீணே பேராசைப்பட்டு-பட்டுக் கும்ப்கட்டுக்கும் ஆசைப்பட்டு உங்களையே நீங்கள் இழந்து விடாதீர்கள்.

ஆலய நிர்வாகங்களே சரியான சிற்பியைத் தெரிவுசெய்து, உங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை விட்டு தரமான வேலைகளைச் செய்துகொள்ளுங்கள். ஆலயங்கள் தான் கலைகளின் இருப்பிடம், கலைகளின் பொக்கிசம். அதனை வளர்க்கவேண்டிய ஆலயங்களே அதனை அழிக்கலாமா? ஆசாரிமார்களே! உங்களால் முடியாத வேலைகளைத் தயவுசெய்து செய்யவேண்டாம். ஆலய வேலைக்கென்றே ஒரு பகுதியினராக என் போன்ற சிற்பிகள் இருக்கின்றனர்.

பட்டம்-பதவிக்கு ஆசைப்பட்டு என் போன்றவர்களால் மிகவும் ஆசைப்பட்டு-செய்யப்பட்டு வரும் அரியதொரு கலை அழிந்துபோக இடமளிக்காதீர்கள். ஒதுங்கிக்கொள்ளுங்கள். தயவு செய்து கலையை வாழவையுங்கள். ஆலய நிர்வாகங்களே! தயவு செய்து கலையை வாழவிடுங்கள் அழிந்துபோக இடமளியாதீர்கள்.

> தங்கள் சுயலாபத்துக்காகவும் -இலாபத்துக்காகவும் ஆசைப் படாமல் கலைகளை வளர்க்க முன்னவர வேண் டும். நம் முன்னோர்கள் செய்த கலைப் பொக்கிசங் களை இன்றுள்ள நாம் பார்த்து அதிசயப்படுவதைப் போல். இனிவரும் சந்ததி யினருக்கும் இன்றுள்ள சிற்பாசாரியார்கள் ஊரு வாக்கி வைத்துவிட்டுச் செல்ல வேண்டும்.





# சாவகச்சேரியில் அரங்கேறிய தென்மராட்சி விழா 2016

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக கழகத்தின் பிரித்தானியாக் கிளைத் தலைவர் மருத்துவர் ஆ.புவிநாதனும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் பிரிட்டிஷ் கவுன்சில் யாழ்.மாவட்ட முகாமையாளர் றொபேக்கா ஜோன்சன், தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் செல்வப் பெருந்தகை ஆகியோரும், கலந்து கொண்டனர்.

தென்மராட்சி கல்வி வலயத்திலிருந்து மாகாண நிலை தமிழ் மொழித்தினப் போட்டிகளில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவனின் நடனமும், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவிகளின் கோலாட்டமும், மிருசுவில் அ.த.க. பாடசாலை மாணவிகளின் கிராமிய நடனமும், கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலய மாணவிகளின் மயில் நடனமும் அரங்கேறின. ஒவ்வொரு கலை நிகழ்வும் அனைவரையும் கவரக்கூடிய வகையில் இருந்தன.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாகாண நிலைப் போட்டிகளில் கலந்து கொண்டு, முதல் மூன்று இடங்களைப் பெற்று தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்களை தமதாக்கிக் கொண்ட மாணவர்கள் நிகழ்வில் பதக்கம் அணிவித்தும், ஊக்குவிப்புத் தொகை வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். அடுத்து விழாவையொட்டி நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் (தனி நபர் போட்டிகள் குழு நிலைப் போட்டிகள்) போன்றவற்றுக்கான பணப்பரிசில்களும் வெற்றிக் கிண்ணங்களும் விருந்தினர்களால் வழங்கப்பட்டன.

நிகழ்வில் உரையாற்றிய விருந்தினர்கள், விழாவை முன்னெடுத்தமைக்கு குழுவினரைப் பாராட்டியதுடன் விளையாட்டின் மேம்பாடு கருதி மைதானத்தின் அவசியம் பற்றியும் எடுத்தியம்பினர். இதேவேளை-தென்மராட்சிப் பிரதேசத்தில் அழிந்துபோகும் நிலையில் காணப் படும் பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் கலை நிகழ்வுகளை மேம்படுத்த வருடா வருடம் இவ்வாறான நிகழ்வுகளை தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் நடத்தி, இலைமறை காய்களாக உள்ள கலைஞர்களையும், கலைகளையும், விளையாட்டுக்களையும் வீர, வீராங்கனைகளையும் ஊக்குவிக்க வேண்டுமெனவும் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளை மனம் கொண்ட ஒரு பல்கலைக்கழகம்
## மயிலங்கூடலூர் நடராஜன்

கே.எஸ்.சிவஞானராஜா



*பிள்ளைமனங் கொண்ட*
*பேறுடையான்*
*பெருந்தமிழ் இலக்கிய*
*வளமுடையான்*
*கொள்ளை இன்பம் தரு*
*கவியுடையான்*
*குலவு தமிழ் ஊறும்*
*பேச்சுடையான்*
*வெள்ளை*
*மனங்கொண்டு*
*வரவேற்பான்*
*விரும்பியது கிடைக்க நூல்*
*தருவான்*
*வள்ளலிவன் என்ற*
*வரமுடையான்*
*வாழும் பல்கலைக்கழகம்*
*இவனன்றோ!*

தமிழிலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் தமிழன்னையை அலங்கரிக்கும் போது இளவாலை மயிலங்கூடலூர் நடராஜனின் இலக்கியப் படைப்புக்களின் பட்டியலை அன்னையின் கழுத்தில் ஒரு அட்டியலாக அணிவித்து அழகு பார்த்தால் புரியும், அவர் ஒரு பல்கலைக்கழகம் என்று. அவரிடம் பயன்பெற்ற பல ஆசான்கள் இருந்தும், பலநூல்களை உறிஞ்சி எடுத்தவர்கள் பலர் இருந்தும், அவருக்காக ஒரு வார்ததைகூட உரிய இடத்தில் உரியவேளையில் உரியவர்களால் முன்வைக்க முடியாமல் போனதையிட்டு வரலாறு நிச்சயம் தீண்டிப் பார்க்கும்.

கம்ப வாரிதியின் வித்தகம்
யாழ்.மண்ணில் அடிக்கடி
நிகழ வேண்டும். எதிலும்
ஒரு தலைவனைத் தேடிக்
கண்டுபிடிக்க வேண்டிய
பாலைவனங்களை இந்த
மண் பிரசவித்துவிட்டதோ!

**பிறப்பு**

இளமை கொலுவிருந்து அழகு செய்த இடம் இளவாலை என்ற கிராமம். கலைகள் கவினுறப் புலமை பெற்ற இடம் இளவாலை. பண்டிதர்கள், அந்தணர்கள், உபாத்தியாயர்கள், சட்டம்பிமார்கள், விவசாயிகள், வைத்தியர்கள், நாடகக் கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பல தரப்பினரும் பெருமை சேர்த்த இவ்வூரில் மயிலங்கூடலூர், மஞ்சவனப்பதி போல மயில்களின் சஞ்சாரம் மிக்க நெஞ்சார்ந்த ஊராகும். இவ்வழகிய ஊரில் பிள்ளையினார் நடராஜன் 1939.08.14 ஆம் திகதி பிறந்தார். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகப் பிள்ளை வளர்ந்தது.

**கல்வி**

பன்மொழிப்புலவர், தம்புகனகரத்தினம், பண்டிதர் ஸ்ரீரங்கம், அப்புத்துரை, புலவர் மகாலிங்கசிவம், பார்வதிநாதசிவம், சைவப்புலவர் சுப்பிரமணியம், செல்லத்துரை, அருட்டிரு கலாநிதி நீக்கிலாப்பிள்ளை, மரிய சேவியர் அடிகளார் ஆகிய பேராசான்களின் மண்வாசனையால் போலும் உரிய காலத்தில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியில் உயர்கல்வியையும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சியையும் பெற்று நல்லாசிரியராகவும் பல இடங்களிலும் கடமையாற்றினார். மகாஜனக் கல்லூரி, இந்துக்கல்லூரி, ஸ்ரான்லிக் கல்லூரி, தொண்டமானாறு வெளிக்கள நிலையம் என பொறுப்பு வாய்ந்த ஆசிரியப்பணியில் பிரகாசித்தார்.

**சாதனை**

1960 ஆம் ஆண்டிலிருந்து கட்டுரை, கவிதை, குழந்தைக்கவி, தமிழிலக்கியம், வரலாறு, சிறுகதை, பத்திரிகைத்துறை எனப்பல வியூகங்களில் புதியன படைத்தார்.

1. சுதந்திரமாய்ப் பாடுவேன்
2. கைலாசபதியின் ஆளுமையும் ஆக்கமும்
3. மரணத்துள் வாழ்வோம்.
4. ஆடலிறை குழந்தைப்பாடல்கள்
5. கைலாயமாலை
6. கோணேசர் கல்வெட்டு
7. இலங்கைத்தமிழர் வரலாறு
8. இலக்கியத்தில் யாழ்ப்பாண அரசர்
9. பண்டிதன்
10. சுடர்
11. தமிழியற் கட்டுரைகள்
12. சிறுவர் இலக்கியம்

13 குழந்தைக் கவிதைகள் போன்ற பல சொந்தப்படைப்புக்கள் தமிழன்னைக்குப் புகழ் சேர்த்தன. இதைவிட தமிழுக்கு என்னதான் செய்ய வேண்டும்? மிகவும் பணிவாக இருப்பவர்களை அடக்கி வாசிப்பது, கலியுகத்தில் நாகரிகம் என்று சில விளம்பரதாரர்கள் கருதிவிட்டார்கள் போலும். தேடிச் சென்று பட்டம் வழங்கவேண்டிய ஒரு புனிதர். இலக்கம் 314 நாயன் மார்கட்டில் இப்போதும் ஒரு குழந்தையாக ஒரு பல்கலைக்கழகமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனோஜா பஞ்சலிங்கம்

கோசல ராச்சியத்தையும் ஆண்ட பலம் பொருந்திய ஆரிய குலத்தைச் சேர்ந்த மன்னர்களில் தசரதச்சக்கரவர்த்தியும் ஒருவராவார். அவர்பக்தி பொருந்தியவராகவும் செங்கோல் ஆட்சி நடத்துபவராகவும் இருந்தார்.

தசம் என்றால் பத்து, ரதம் என்றால் தேர். தசரதன் என்னும் சொல் பத்துத் தேர்களை ஒருகாலத்தில் செலுத்துவதற்கு வல்லவன் என்று பொருள்படுகிறது.

ஒரு மன்னனுக்கு இருக்கவேண்டிய சகல பண்புகளையும் கொண்ட தசரத மன்னனுக்கு மகனாகப் பிறந்த மூத்த புதல்வனே இராமன்.

சிறிய தாயார் கேட்ட வரத்தினால் பதின்னான்கு ஆண்டுகள் வனவாசம் சென்றான்.

வனவாசம் சென்றபோது சீதையின் அழகில் இராவணன் மயங்கினான்.

மனைவி சீதையை இலங்காபுரி மன்னர் இராவணன் கடத்திச் சென்றதனால் அவனை வதம் செய்து சீதையை மீட்பதற்காகவே இராம, இராவண போர் நடைபெற்றது.

இப்போரை மையமாகக் கொண்டதே இராமாயணம் ஆகும். இதையே மூலக் கருத்தாகக் கொண்டு இராமாயணத்தை வால்மீகி ரிஷி வடமொழியிலும் கம்பர் தமிழிலும் எழுதியுள்ளனர். இது ஏழு காண்டங்களைக் கொண்டது. அவையாவன பாலகாண்டம், அயோத்திய காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம், உத்தரகாண்டம் என்பவையே அவையாகும்.

இவ்வேழு காண்டங்களில் உத்தர காண்டத்தைத் தவிர ஏனைய காண்டங்கள் அனைத்தும் கவிச்சக்கரவர்த்தி கம்பரால் எழுதப்பட்டவை. ஆனால் உத்தரகாண்டத்தை ஒட்டக்கூத்தர் எழுதினார். இதில் பாலகாண்டம் தசரதனின் ஆட்சியையும் இராமனுடைய பிறப்பையும் கொண்டது.

அயோத்தியா காண்டமானது வனவாசம் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது. ஆரண்ய காண்டத்தில் இராவணன் சீதையைக் கடத்திச் செல்லுதல் மற்றும் இராமன் சீதை பிரிவு அடங்கியுள்ளது.

கிஷ்கிந்தா காண்டத்தில் சீதையைத் தேடிக் கண்டுபிடித்தல் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது. சுந்தரகாண்டத்தில் லங்காபுரியின் அழகு, சீதையும் அனுமனும் உரையாடியமை தொடர்பாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. யுத்த காண்டமே இராமாயணத்தின் முக்கியமான காண்டமாகும். இராமனும், இராவணனும் போர் புரிந்து இராவணனை இராமன் வதம்செய்து சீதையை மீட்டமை தொடர்பாக எடுத்தியம்பப்பட்டுள்ளது. இவ்வாறு இராமாயணத்தை முக்கிய காண்டங்களாகப் பிரித்து அதை வாசித்து விளங்கக் கூடிய வகையில் எழுதியிருப்பது கம்பர் பெருமானின் வல்லமையையும் தமிழ் மீதான பற்றையும் பறைசாற்றுகின்றது.

இராமாயணத்தில் இருந்து இன்றைய இளம் சமுதாயம் ஆனது பல்வேறு நல்லொழுக்கங்களை விருத்தி செய்து கடைப்பிடிக்க முடியும். அவையாவன: தந்தை தாய் சொல்லைத் தட்டாத பண்பு இராம இலக்குவனின் சகோதர பாசம், இராமனின் பொதுநலம், பெரியோரை மதித்தல் சரியானதைத் துணிந்து செய்யும் வல்லமை, விட்டுக் கொடுக்கும் தியாகப் பண்பு போன்ற எண்ணற்றவையாகும். எனவே, இராமாயணம் போன்ற இதிகாச புராணங்களைப் பேணிப்பாதுகாக்க அனைவரும் முன் வரவேண்டும்.





# வரையறைகளுக்குள் முடங்காத ஒப்பற்ற பெண்மணி இராஜநாயகி



நாம் சந்திக்கின்ற மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒரேவிதமாக இருப்பதில்லை என்பதுடன் சட்டென்று நினைவில் நிற்கும்விதமானவர்கள் மிகவும் குறைவு என்பதும் உண்மை. நினைவில் பதியும் விதமாய் பழகக் கிடைத்தவர்களின் இயங்குநிலையும் அவர்கள் எம்முள் செலுத்தும் அதிக்கமும் வெவ்வேறு அளவு நிலைகளினைக் கொண்டவை.

அப்படியான ஆளுமைகளுள் அதிகமதிகம் பாதிப்பை ஏற்படுத்த வல்லவர்கள் மிகச் சிலரே. அந்தச் சிலருள் நிச்சயமாய் இருக்க கூடியவர் இராஜநாயகி திருச்செந்திநாதன். யார் இவர்? இவர் இன்னாருக்கும் இன்னாருக்கும் இத்தனையாமாண்டில் பிறந்தார். இன்னாரின்னாருக்கு சகோதரியாய் இன்னாருக்குத் துணைவியாய் என்று வழமையான நான் விரும்பும் பெரியார் கட்டுரை ஒன்றை எழுதுகின்ற ஐந்தாம் வகுப்பு மாணவத்தனமாய் எழுத முடியாதவர்.

கட்டுக்கோப்பு மிக்க குடும்பப் பின்னணி, பொருளாதார நெருக்கடிகளையே எப்போதும் கொண்ட சூழல், கடமையில் தெளிவும் உறுதியும் கொள்கைப்பற்றுறுதி, அனைவரையும் அன்புகாட்டும் இயல்பு, மிக உயர்ந்த பொறுமை, நிதானம் என அரிய குணங்களைத் தன்னகத்தே கொண்டு தன்னைச் சூழவிருந்தவர்களுக்கு பிரகாசம் தந்த பெண்மணி என்பதுகூட சொல்வறுமையுடன் விபரிக்க முடிந்த ஒருவர் என்பது வெளிப்படை.

இராஜநாயகியின் இயல்புகள், ஆளுமைகள் என்பது வரையறுத்துப் பேச முடியாதவை. இதுதான் இப்படித்தான் எனக் கோடு போட்டுப் பிரித்தும் இப்படித்தானென வகைப்படுத்திக் கொள்ளவும் முடியாதவை. தாய்-தந்தை உள்ள போதே அவர்களைக் கொண்டு தன்னைச் சீராட்ட முனையாது தங்கைகளையும் சேர்த்தே சுமந்தபோது இவரது வயது வெறும் இருபத்தொன்று. பிறரைச் சுமப்பதில் சலிப்படைவதே கிடையாது என்பதற்கு கணவரை, பிள்ளைகளை, உறவினர்களை என்பதற்கும் அப்பால் கண்டிப்பான நிர்வாக உத்தியோகத்தராக இருந்து கொண்டே தனிப்பட்ட நலன் தொடர்பில் உத்தியோகத்தர்களுடன் இவர் நடந்து கொண்ட விதத்தையும் குறிப்பிடலாம். தனிப்பட ஒவ்வொரு உத்தியோகத்தருடனும் நெருங்கி அவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளைக் கூட தன்தலையில் சுமந்து அவர்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுத்தவர்.

குடும்ப உறுப்பினர்களின் அத்தனை வேலைகளையும் முடித்து பணிமனை வேலைகளிலும் மூழ்கிவிடும் இவர், ஒருபோதும் இவ்விரு விடயங்களையும் போட்டுக் குழப்பிக் கொண்டதில்லை. வீட்டு நெருக்கடி அலுவலகத்துக்கும், அலுவலகச் சுமை வீட்டுக்கும் தெரியாதபடி தனது இயங்குநிலையை கொண்டிருந்தவர். இதனால்தான் இரு இடங்களிலும் சிறப்பாக இயங்கிப் பாராட்டுப் பெறமுடிந்திருக்கலாமோ தெரியாது.

இவ்வாறேதான் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற இவரையே அணுகுவதையும் பார்க்கவேண்டும். ஒருவர் கதையை இன்னொருவருடன் பகிர்ந்து கொள்வதே கிடையாது. இது அவரை நம்பகரமான ஒருவராக மாற்றியிருந்தது. இதனால் இவரிடம் தமது தனிப்பட்ட அலுவலகப் பிரச்சினைகளைச் சொல்லி தீர்வு பெற்றவர்கள் அனேகர்.

இத்தனை இயல்புகள் கொண்டவர் உபசரிப்பு என்று வந்தால் அதிலும் தனியிடம் தான். கணவரிடமோ தன்னிடமோ வீட்டுக்கு வரும் அனைவருக்கும் தனது உபசரிப்பால் வரவேற்றவர். இவர் வன்னியில் வாழ்ந்த காலத்தில் வீட்டு உறவுகளைப் பிரிந்திருந்த எத்தனையோ பேரை அரவனைத்தவர். அவர்கள் நோய் நிலமைகளில் பத்தியம் பார்த்து உணவூட்டி அவர்களின் துயரைப் போக்கியவர்.

தம்மைச் சார்ந்த அனைவரதும் அத்தனை நிகழ்வுகளிலும் இன்பமாயிருப்பின் மாலையிலும் துன்பமாயிருப்பின் காலையிலும் பணிமனைப் பணி குழம்பாமல் கலந்துகொள்ள ஒருபோதும் தவறியதில்லை. நண்பர்களின் திருமணங்கள், பிரசவங்கள் என அத்தனையிலும் சபைக்கு என்ன கறி? எவ்வளவு கறி? என்பது தொடக்கம் கதிரையா? பாயா? பந்தலா? என்பது வரையாக நிகழ்வை ஒப்பேற்றுவதில் முழுமூச்சாய் நின்று இயங்கியவர்.

இத்தனைக்கும் அப்பால் தனது கணவரின் இலக்கிப் பணிக்கு உயிர் கொடுத்தவர் என்பது பலருக்குத் தெரியாது. இலக்கியகாரர் பலருக்கு திருச்செந்திநாதனது கையெழுத்துத் தெரியாது. திருச்செந்திநாதனது அத்தனை எழுத்துக்களும் கிறுக்கல்கள். யாருக்கும் புரியாத வடிவம். அவர் எழுதுகின்ற அத்தனையையும் பிறர் படிக்க எதுவாக மொழிபெயர்த்த உறுப்பாக எழுதும் பணியும் இவரதுதான். நாள் முழுவதும் உழைத்த உழைப்புக்கு அப்பால் இரவில் பொறுமையாக இருந்து பிரதி செய்வது என்பது இயலாத காரியம். ஆனால் அதையும் மிக நேர்த்தியாய்ச் செய்தவர்.

பிள்ளைகளின் ஆரோக்கியம், கல்வி என இவரது கவனிப்பும் உச்சமே என்பது அவர்களது இன்றைய உயர்விலிருந்து கண்கூடு.

மொத்தத்தில் இப்படித்தான் இவ்வளவு தானென வரையறுக்க முடியாத ஒருவராய் வாழ்ந்தவர். தன்னுள் இருந்த நோயையும் அறியவில்லையோ மறைத்தாரோ? தெரியாது. கோர போரின் இறுதி வெடிச் சிதறுகைக்குள் இருந்து தன்னையும் குடும்பத்தையும் கீறல்கூட இன்றி காப்பாற்றிய அவரை, இன்றைய நவீன மருத்துவம் காப்பாற்றத் தவறிவிட்டது. ஓரிடத்தில் வைத்தியம் நடக்க இன்னோரிடத்தில் குடியிருந்த நோய் அனைவர் கண்ணிலும் மண்ணைத் தூவியதாகவே இவரது முடிவை நோக்க வேண்டியுள்ளது.

மொத்தத்தில் வரையறைகளுக்குள் முடங்க முடியாத ஒப்பற்ற பெண்மணி இராஜநாயகி என்பதை மட்டும் இலகுவாகக் கூறலாம். அவரது இழப்பு ஏற்படுத்தி விட்டிருக்க வெறுமையை எப்படி நிரப்பமுடியுமென எண்ணவே முடியாதுள்ள நிலையில், அவர்போல் வாழ்ந்து பயன் விளைக்க மட்டுமே முடியும்; முயல்வோம்.

லக்.சரவணன்

## தமிழ்ச் சங்கம் நடத்தும் புத்தகத் திருவிழா

நல்லூர்ப் பெருந்திருவிழாவையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் புத்தகத்திருவிழா இன்று புதன்கிழமை மஞ்சத் திருவிழா நாளில் ஆரம்பமாகி செப்ரெம்பர் மாதம் 03ஆம் திகதி வரை நல்லூர் வடக்கு வீதியில் உள்ள கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது. ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் மாத்திரம் காட்சிப்படுத்தப்படுவதற்கும் விற்பனை செய்யப்படுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவிருப்பதால், ஆர்வமுடையோர் தங்கள் நூல்கள் மற்றும் விலை விவரங்களை பொதுச் செயலாளர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், இல.90, ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்ற முகவரிக்கு (பேராசிரியர் அ.சண்முகதாஸ் இல்லம்) அனுப்பி வைக்குமாறு அல்லது 021 222 3457 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளுமாறு தமிழ்ச்சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.







முல்லைத்தீவு மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் முல்லைதாசன் எழுதிய 'கனவுவீதிகள்' என்னும் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

'கனவுவீதி' கவிதைத் தொகுப்பின் முதற் பிரதியை முல்லைத்தீவு மாவட்ட அரச செயலர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் வெளியீட்டு வைக்க, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ். குணபாலன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து விசேட பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் சி.குணபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அறிமுக உரையை புரட்சியும், வாழ்த்துரையை கவிஞர் புதுக்குடியிருப்பு ஜெயம் ஜெகனும், வெளியீட்டு உரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை மூத்த விரிவுரையாளர் அருந்தாகரனும், ஆய்வுரையை முல்லை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞானஆதவனும், ஏற்புரையை கவிஞர் முல்லைத் தாசனும் நிகழ்த்தினர். இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட அதிதிகள் பலர் கலந்துகொண்டனர்.



வலி. தென்மேற்கு பிரதேச செயலகமும்- கலாசார அலுவலகமும் ஒன்றிணைந்து நடத்திய அரச இலக்கிய பெருவிழாவில் திறந்த போட்டியில் பத்மாவதி சரிதம் நாவல் விவரணப் போட்டியில், கலாபூசணம் கவிஞர் க.தெய்வேந்திரம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். கவிஞர் க.தெய்வேந்திரத்துக்கான விருதையும் சான்றிதழையும் வலி. தென்மேற்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி நிறைஞ்சனா கிருஷ்ணேந்திரன் வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது புதுசு



பெண்களுக்கான கற்கள் பதித்த பூட்டுக்காப்புகள் அறிமுகமாகியுள்ளன. வெண்கற்கள் பதித்த காப்புகள், தங்கம் மற்றும் வெள்ளி நிறங்களில் கிடைக்கின்றன. இவை, 300 ரூபாவில் இருந்துவிற்பனை செய்யப்படுகின்றன.

## நாளை

**ஆவணி-02**

வியாழக்கிழமை -18.08.2016
திதி: பூரணை பி.ப.03.53
நட்சத்திரம்: அவிட்டம் பி.இ.01.11
ராகுகாலம்: 01.35-03.05 வரை
சுபநேரம்:07.35-09.05 வரை

# செய்யக் கூடாதவை



**புகைப் பிடிக்கக் கூடாது**

உணவு எடுத்தவுடன் பிடிக்கும் ஒரு சிகரெட், 10 சிகரெட்டுகள் பிடிப்பதற்கு சமமான விளைவை ஏற்படுத்தும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால் புற்றுநோய் வரும் வாய்ப்பும் அதிகரிக்கிறது.

**தேநீர் குடிக்கக் கூடாது**

தேயிலை அதிக அளவு அமிலங்களை உள்ளடக்கியது. இது உணவில் உள்ள புரத மூலக் கூறுகளுடன் சேர்ந்து உணவு செரிப்பதை சிக்கலாக்கி விடும்.





**உடனே பழங்கள் சாப்பிடக் கூடாது**

வயிற்றில் வாயுவை உருவாக்கி உப்பச் செய்து விடும். இரண்டு மணி நேரத்துக்குப் பிறகோ அல்லது உணவு எடுத்துக்கொள்ளும் ஒருமணி நேரத்துக்கு முன்போ பழங்களைச் சாப்பிடுவது நல்லது.

# பால் வடை



**தேவையான பொருள்கள்**

பச்சரிசி - 2 கப்
பசும்பால் - 3 கப்
உப்பு - ஒரு தேக்கரண்டி
நெய் - பொரிக்க.

**செய்முறை:**

பச்சரிசியை கழுவி வைக்கவும். பாலைக் காய்ச்சி, அதில் களைந்த அரிசியைப் போட்டு அரை வேக்காடாக வேக வைக்கவும். பிறகு அதை கெட்டியாக வடைமாப் பதத்தில் அரைத்து உப்புச் சேர்க்கவும்.

சட்டியில் நெய் ஊற்றி, காய்ந்ததும் மாவை சின்னச்சின்ன வடைகளாகத் தட்டிப் போட்டு, பொரித்து எடுக்கவும்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 50 | 120 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 90 | 60 | 100 | 70 | 40 | 60 | 90 | 40 |
| கரட் | 120 | 120 | 200 | 120 | 100 | 120 | 110 | 120 |
| மரவள்ளி | 100 | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 40 | 60 | 40 | 40 | 40 | 40 | 100 | 40 |
| பாகல் | 120 | 120 | 180 | 120 | 100 | 80 | 240 | 100 |
| கருணைக்கிழங்கு | 150 | 100 | 140 | – | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 90 | 90 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 70 | 80 | 70 | 80 | 90 | 60 |
| பூசணி | 60 | 60 | 60 | 50 | 60 | 80 | 70 | 80 |
| தக்காளி | 40 | 80 | 60 | 50 | 40 | 60 | 120 | 50 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 | 80 | 40 | 70 | 40 |
| கீரை | 15 | 20 | 30 | 10 | 20 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 200 | 300 | 240 | 240 | 200 | 400 | 160 |
| புடோல் | 40 | 50 | 50 | 50 | 60 | 40 | 70 | 50 |
| கோவா | 100 | 100 | 160 | 120 | 120 | 160 | 90 | 80 |
| வெண்டி | 40 | 50 | 50 | 60 | 40 | 80 | 70 | 50 |
| போஞ்சி | 150 | 160 | 180 | 180 | 180–200 | 200 | 130 | 180 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 100–120 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 30 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 150 | 120 | 150 | 120 | 120 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 150 | 200 | 160 | 180 | 240 | 200 | 130 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 70 | 150 | 120 | 60 | 100 | 120 | 200 | 80 |



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 800 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 700 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 600 | 450 |
| சுறா | 500 | 800 | 600 | 800 | 1000 | – | 650 |
| சீலா | 300 | 500 | 400 | 600 | 400 | 600 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 500 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | 600 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 500 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 300 | 300 | – |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 370 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 150 | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 400 | 170 |
| மதனம் | 150 | 250 | 180 | 400 | 350 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 600 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 400 | – | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நபர்1: முடி சின்னதா வெட்டி விடுங்க.
நபர்2: எவ்வளவு சின்னதா?
நபர்1: பொண்டாட்டி கையில பிடிக்க முடியாத அளவுக்கு






# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | | | | | 8 |
| | 6 | | | 8 | | | 3 | |
| 5 | | | 6 | | | 4 | | |
| | | 9 | | | 1 | | | |
| | 3 | | | | | | 1 | |
| | | | 4 | | | 2 | | |
| | | 3 | | | 8 | | | 1 |
| | 8 | | | 5 | | | 6 | |
| 4 | | | | | | 5 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 7 | 1 | 5 | 8 | 2 | 6 | 9 |
| 5 | 6 | 1 | 2 | 9 | 3 | 7 | 8 | 4 |
| 9 | 2 | 8 | 4 | 7 | 6 | 5 | 3 | 1 |
| 6 | 9 | 3 | 7 | 4 | 5 | 1 | 2 | 8 |
| 4 | 1 | 2 | 8 | 3 | 9 | 6 | 7 | 5 |
| 8 | 7 | 5 | 6 | 1 | 2 | 4 | 9 | 3 |
| 7 | 3 | 9 | 5 | 6 | 4 | 8 | 1 | 2 |
| 2 | 5 | 6 | 9 | 8 | 1 | 3 | 4 | 7 |
| 1 | 8 | 4 | 3 | 2 | 7 | 9 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நண்பர் மூலம் மகிழ்ச்சியான அனுபவம் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். சமூகத்தில் மதிப்புக் கூடும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். பெண்களுக்கு, தாய்வீட்டு உதவி கிடைக்கும்.

**இடபம்:** செயல்களில் தாமதம் ஏற்படலாம். நல்லோரின் ஆலோசனை, மனதில் நம்பிக்கையளிக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் மிதமாக இருக்கும். அதிக விலையுள்ள பொருள்களை, கவனமுடன் பாதுகாக்கவும்.

**மிதுனம்:** சிலரது பேச்சு சங்கடத்தை உருவாக்கும். தொழிலில் எதிர்பார்ப்பு நிறைவேறு வதில் தாமதமாகலாம். இலாபம் சுமாராக இருக் கும். உடல்நலனில் கவனம் தேவை. தாயின் அன்பு நிறைந்த வார்த்தை நம்பிக்கையளிக்கும்.

**கடகம்:** வசீகரப் பேச்சால் எதையும் சாதிப்பீர்கள். நண்பரால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் வாக்குறுதியை நிறைவேற்ற பணி புரிவீர்கள். பெற்றோரின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கூடும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கன்னி:** முக்கிய செயல் நிறைவேற தாமதம் ஏற்படலாம். சக தொழில், வியாபாரம் சார்ந்தவர்களிடம் சச்சரவு பேசக்கூடாது. இலாபம் சுமார். பெண்களுக்கு செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ணவேண்டாம்.

**துலாம்:** தொடர்பில்லாத பணியால் சிரமம் ஏற்படலாம். குடும்பத்தினரின் ஆதரவு கைகொடுக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு தேவை. மிதமான இலாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது.

**விருச்சிகம்:** உறவினரின் ஆதரவு கண்டு பெருமை கொள்வீர்கள். மனதில் உற்சாகமும், செயலில் சுறுசுறுப்பும் உண்டாகும். தொழிலில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். எதிரியும் வியக்கும் விதத்தில் வளர்ச்சியடைவீர்கள்.

**தனுசு:** குழப்பம் உருவாகி விலகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற சீர்திருத்தப் பணிகளில் ஈடுபடுவீர்கள். இலாபம் சுமார். பெண்களுக்கு தாய் வீட்டினரின் உதவி கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மகரம்:** பேச்சில் சமயோசிதம் நிறைந்திருக்கும். உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** வீண்பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. நிலுவைப் பணியை நிறைவேற்றினால், நிம்மதிக்கு வழி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**மீனம்:** உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறையும். நிலுவைப் பணம் வசூலாகும். நண்பரால் இனிய அனுபவம் உண்டாகும்.

பொலிஸ்: ஏன் பா அந்த அம்மா வீட்டில டீ.வி ய மட்டும் திருடினே

திருடன்: அந்த அம்மா வீட்டுக்காரர் தாங்க திருடச் சொன்னார். சீரியல் பார்த்துக்கிட்டு சோறே போடுறதில்லையாம்.

ஜே ஜே @srinileaks

கூரையின் இடுக்கில் வழியும் மழை நீரைப்போல கவலைகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்போது முடிந்ததெல்லாம் மழை நீரை பிடிக்கப் பாத்திரங்கள் வைப்பதுதான்.

4 5

# நாளை சென்னையில் விஜய் - 60 படப்பிடிப்பு!



பரதன் இயக்கத்தில் விஜய் நடித்து வரும் 60ஆவது படத்தின் படப்பிடிப்பு பல மாதங்களாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. கீர்த்தி சுரேஷ், அபர்ணா வினோத் நாயகிகளாக நடித்து வரும் இந்தப் படத்தில் விஜய் இரண்டு ரோல்களில் நடிப்பதால் அவர் கிராமத்து வேடத்தில் நடிக்கும் பெருவாரியான காட்சிகளை படமாக்கி விட்ட நிலையில், அடுத்த படியாக நகரத்து வேடத்தில் விஜய் நடிக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறார். இந்த வேடத்துக்காக வித்தியாசமான தலையலங்காரங்களுக்கு மாறிக்கொண்டிருக்கிறார் விஜய்.

மேலும், இந்த நகரத்து வேடத்துக்கான பாடல் காட்சிகள் ஏற்கனவே படமாக்கப்பட்டு விட்ட நிலையில், அடுத்தக்கட்ட காட்சிகள் படமாக்கப்பட உள்ளது. நாளை முதல் விஜயின் 60ஆவது படத்தின் படப்பிடிப்பு மீண்டும் சென்னையில் தொடங்குகிறது. அப்போது விஜய்யுடன் வில்லன்கள் ஜெகபதி பாபு, டேனியல் பாலாஜி, ஹரிஷ் உத்தமன் உள்ளிட்டோர் நடிக்கும் காட்சிகளும் படமாகிறதாம். தொடர்ந்து இரண்டு வாரங்களாக சென்னையில் படப்பிடிப்பு நடக்கும் என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர்களை....

சர்களை மாத்திரம் விசாரிக்கக் கோரும் பிரேரணையைக் கடந்த 9 ஆம் திகதி அமர்வில் முன்வைத்தார். இதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

முதலமைச்சரும் அமைச்சர்களுள் ஒருவர் என்ற அடிப்படையில் இந்தப் பிரேரணையை முன்வைக்க முடியாது. அமைச்சர்களும் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில், அவர்களை வெளிநபர்கள் விசாரணை செய்ய முடியாது. முதலமைச்சர் அமைச்சர்களை நியமித்தவர் என்ற அடிப்படையில், அவர்கள் மீதான நட வடிக்கை எடுப்பதற்கு ஆலோசனைக் குழுவை அவர் நியமிக்கலாம். சபைக்குக் கொண்டு வந்தால், சபை உறுப்பினர்களைக் கொண்டுதான் விசாரணை செய்ய வேண்டும். எனவே ஆலோசனைக் குழுவை நியமித்து அது தொடர்பில் முதலமைச்சர் சபைக்கு அறிவிக்கலாம் என்ற கருத்துக்கள் சபையில் முன்வைக்கப் பட்டன. அன்றைய தினம் முழுமையாக விவாதம் நடத்தி முடிக்கப்படவில்லை.

இதனால் நேற்றைய தினமும் தொடர் விவாதம் நடைபெற்றது. 5 மணி நேரம் நீடித்த விவாதத்தின் பின்னரும், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தனது பிரேரணையில் மாற்றம் செய்ய மறுத்திருந்தார். முதலமைச்சர் முன்வைத்த பிரேரணையை அதே வடிவில் நிறைவேற்றுவதற்கு உறுப்பினர்களில் ஒரு தொகுதியினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதனைத் தொடர்ந்து அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், இந்தப் பிரச்சினையைச் சுமுகமாக முடிப்பதற்குக் கோரினார். சுமார் அரை மணி நேரத்துக்கு மேலாக சுமுகமாக முடிப்பதற்காகப் பிரேரணையில் பல்வேறு திருத்தங்கள் முன்வைக்கப்படுவதும், அவை முதலமைச்சரால் நிராகரிக்கப்படுவதும், சபை உறுப்பினர்களால் நிராகரிக்கப்படுவதுமாக இருந்தன. வாக்கெடுப்புக்கு விடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன்போது அவைத் தலைவர், இதுவரை நடந்த 58 அமர்வுகளில் எந்தவொரு விடயமும் வாக்கெடுப்புக்கு விடவில்லை. இப்போதும் வாக்கெடுப்புக்கு விடமாட்டேன். இதனைச் சுமுகமாக முடிக்கலாம்-என்றார்.

இந்த இழுபறி தொடர்ந்த நிலையில் முதலமைச்சர் தான் முன்வைத்த பிரேரணையில் திருத்தம் செய்வதற்கு இணங்கினார். 'வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் பற்றிப் பல முறைப்பாடுகள் பொதுமக்கள், அமைப்புக்கள், சபை உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கின்றன. இவை தொடர்பாக ஆராய்ந்து விசாரித்து அவற்றின் உண்மைத் தன்மையைக் கண்டறிவதற்கும் அது தொடர்பில் எடுக்கக் கூடிய மேல் நடவடிக்கைகள் பற்றி விதந்துரைப்பதற்கும், இரண்டு ஓய்வு பெற்ற நீதிபதிகளையும், ஓய்வு பெற்ற இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த மூத்த உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கும் அவர்களின் விசாரணைகளின்படி கண்டறியப்பட்டு அறிக்கையிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் மேல் நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த விசாரணைக் குழு சம்பந்தமான தேவையான நிதி, நிர்வாக நடவடிக்கைகள் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதைச் சபைக்கு தெரியப்படுத்துகின்றேன் என்று பிரேரணை திருத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. (உ-வ-த-5)

## முன்னாள்....

**நேற்று வடக்கு மாகாண சபையில் அறிவித்தார் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.**

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்ப்பாணம் வந்துள்ள அமெரிக்கப் படையின் மருத்துவக் குழு ஊடாக முன்னாள் போராளிகளுக்கு ஊசி ஏற்றப்பட்டமை தொடர்பான மருத்துவப் பரிசோதனைகளை முன்னெடுத்திருக்கலாமே என்று கேள்வி எழுப்பினார்.

'அமெரிக்கத் தூதுவர் கெசாப்பிடம் இது தொடர்பில் கேட்டேன். அமெரிக்க மருத்துவக் குழு ஊடாக மருத்துவப் பரிசோதனை செய்வதற்கு 4 அல்லது 5 முன்னாள் போராளிகளை அனுப்புமாறு கேட்டுக் கொண்டார்' என்று முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பதிலளித்தார்.

இதேவேளை, மாகாண சபையின் அமர்வில் பிறிதொரு சந்தர்ப்பத்தில் உரையாற்றிய வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், முன்னாள் போராளிகள் மீது இது நாள் வரையில் இல்லாத அக்கறை இப்போது ஏன் சிலருக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பது புரியவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னாள் போராளிகள் எத்தனை பேர் இருக்கின்றனர் என்பது உள்ளிட்ட முழு விடயங்களும் எனது அமைச்சில் உள்ளன. எனது அமைச்சின் ஊடாக அவர்களுக்கான உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரு சிலர் ஊசி ஏற்றியதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களை வைத்துக் கொண்டு மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குக் களங்கம் ஏற்படுத்தப் போகின்றீர்கள். மருத்துவப் பரிசோதனையின் முடிவில், விச ஊசி ஏற்றப்படவில்லை என்றுதான் முடிவு கிடைக்கப்பெறும். இதன் பின்னர் பன்னாட்டுச் சமூகம் எம்மைப் பொய்யர்கள் என்று சொல்லும் - என்றார். (த-5)

## கிராம....

நாட்டிலிருந்து அண்மையில் நாடு திரும்பியிருந்தார். இதனை அவதானித்தே இந்தக் கொள்ளை இடம்பெற்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

வீட்டில் இருந்த 15 பவுண் நகைகளும், 2 லட்சத்து 54 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றதும் காயமடைந்தவர்கள் மல்லாவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சையின் பின்னர் அவர்கள் வீடு திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொள்ளை தொடர்பில் மல்லாவிப் பொலிஸில் முறையிடப்பட்டது. ஆயினும் எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4-101)

## வடக்கு....

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், அமைச்சர்களை விசாரணை செய்யக் கோரும் முதலமைச்சரின் பிரேரணை மீது விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது: வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக, ஊழல் குற்றச்சாட்டு, நிதி நிர்வாக சட்ட விடயங்களில் திறனற்ற செயற்பாடு என்பவற்றைக் கடந்த காலங்களில் நான் முன்வைத்தபோது, இங்குள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இன்று அதே விடயங்கள் கணக்காய்வு திணைக்கள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வடக்கு மாகாண சபையின் 5 அமைச்சுக்களுக்கு உட்பட்ட 28 திணைக்களங்களின் 2 ஆயிரத்து 162 கொடுப்பனவுகளுக்கான 67 கோடியே 45 ஆயிரம் ரூபா பணத்துக்கு உரிய ஆவணங்கள் முன்வைக்கப் படவில்லை. வடக்கு மாகாண சபையின் அலுவலகங்கள் 2011ஆம் ஆண்டிலிருந்து வாடகை இடங்களில் இயங்கி வருகின்றன. இதற்குரிய ஒழுங்குமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று கணக்காய்வு திணைக்களம் கண்டறிந்துள்ளது.**

நெல்சிப் திட்டத்தின் திட்டப் பொறியியலாளரின் தந்தையின் பெயரில் உள்ள நிறுவனத்திற்கே ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனையும் கணக்காய்வு திணைக்களம் அடையாளப்படுத்தியுள்ளது.

2014ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 784 மில்லியன் ரூபா நிதி, உரிய நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படவில்லை என்று கணக்காய்வு திணைக்களம் கண்டறிந்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை கடந்த காலங்களில் நான் முன்வைத்தபோது, ஆளும் கட்சியினர் எதிர்த்தனர். இப்போது அவர்களே குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர் - என்றார். (வ-5)

## கூட்டமைப்பை....

யாது. உங்கள் ஒவ்வொருவரதும் சுய விபரக் கோவையைப் பெற்றுக் கொண்டேன். அதிலிருந்து சிறப்பானவர்களை, மாவட்ட கட்சி அடிப்படையில் அமைச்சர்களாக நியமித்தேன்.

நான் இதுவரையில் எந்தவொரு விடயத்திலும் தான்தோன்றித்தனமாக நடக்கவில்லை. ஜனநாயக முறைமையில் நடவடிக்கை எடுக்க முற்பட்டால் அதில் தாமதம் ஏற்படும். ஆனால் அது தரித்து நிற்கும்.

இந்த விசாரணையை மாகாணசபை உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் குழுவை நியமித்து செய்யுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் உறுப்பினர்கள்தான் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்கள். எனவே அவர்களைத் தெரிவுக்குழுவில் நியமிப்பது பொருத்தமாகாது.

நான் இந்த விசாரணைகளை மேற்கொண்டால் என்னால் வேறு பணிகள் ஆற்ற முடியாது. அதனாலேயே வெளியில் இருப்பவர்களை எனது பணிப்பில் விசாரணை மேற்கொள்ள அனுமதி கோருகின்றேன்.

இதனூடாகதமிழ்தேசியக்கூட்டமைப்புக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிப்பதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. நான் கனவிலும் அவ்வாறு நினைப்பவன் அல்ல என்றார். (வ-5)

## நான்காவது....

**சான் பகுதிக்கு சென்ற மக்கள், தமது காணிகளில் உள்ள இராணுவத்தை உடனடியாக** வெளியேறுமாறும், தமது மீள்குடியேற்றத்தை உறுதிப்படுத்துமாறும் கோரி போராட்டத்தில் குதித்தனர். இந்தப் போராட்டம் இரவு பகலாக இடம்பெறுகிறது. இராணுவ முகாமிற்கு முன்னால் போராட்டத்தை நடத்துபவர்களை, அங்கிருந்து வெளியேற்றுவதற்காக இராணுவத்தினர் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தியதாக மக்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியிலுள்ள மின் விளக்குகளை ஒளிரவிடாது அணைத்தனர். அத்தோடு வாகனங்களை வேகமாக செலுத்தி புழுதிகளையும் எழுப்பினர் என அவர்கள் குற்றஞ்சாட்டினர். எனினும் மக்கள் தங்களுடைய கோரிக்கைகளை அடைவதற்காகநான்காவதுநாளாக நேற்றும் போராட்டத்தை தொடர்ந்தனர்.

மக்களுடைய போராட்டத்தில் குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை பங்கு கொள்வதால், அவர்களுக்கான உணவுகளை இராணுவ முகாம் முன்பாக சமைத்து உண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். **கடந்த மாதமும் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி சுழற்சி முறையிலான கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்ட பரவிப்பாஞ்சான் மக்கள், கிளிநொச்சி மாவட்டச் செயலாளருடைய உறுதி மொழியை அடுத்து போராட்டத்தைக் கைவிட்டனர்.**

எமது காணிகளை அபகரித்துள்ள இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறுவதாக பல தடவைகள் எமக்கு தெரிவித்தனர். ஆனால் அவர்கள் இங்கிருந்து வெளியேறவில்லை. பலரும் பல உறுதி மொழிகளை கூறி எம்மை ஏமாற்றத்திட்டம்போடுகின்றார்கள். இம்முறையும் உறுதி மொழிகளை நம்பி ஏமாறுவதற்கு நாம் தயாராக இல்லை. செயல் வடிவில் எமது கண்களூடாக காணும்போதே நம்புவோம். இதற்குப் பாதுகாப்பு அமைச்சர் அல்லது மீள்குடியேற்ற அமைச்சர் பரவிப்பாஞ்சானுக்கு வருகை தந்து எமது காணிகளில் உள்ள இராணுவத்தினரை எமது கண் முன்னே வெளியேற்றி எம்மை காணிகளுக்குள் செல்ல அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் இந்தப் போராட்டத்தை கைவிடுவோம். இல்லையேல் எத்தனை நாள்களானாலும் இராணுவ முகாம் முன்பாகவே தங்கியிருப்போம் என நேற்று நான்காவது நாளாக போராட்டத்தை மேற்கொண்ட பரவிப்பாஞ்சானைச் சேர்ந்த திருமதி சயம்புநாதன் வதனி தெரிவித்தார்.

மக்களுடையபோராட்டத்திற்குஆதரவளித்து வருகைதரும் பிரதிநிதிகள் உட்பட அவர்களது உறவினர்களுடைய வாகன இலக்கங்கள் நேற்றயதினம் இராணுவத்தினரால் பதிவுசெய்வதாகத் தெரிவிக்கப்பட்டது. குடிநீர் வழங்குவதற்காக வந்த கரைச்சி பிரதேச சபையின் வாகனத்தின் இலக்கத்தையும் அங்கிருந்த இராணுவத்தினர் இரகசியமாகப் பதிவு செய்தமை அவதானிக்கப்பட்டது எனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, பரவிப்பாஞ்சானில் 5 ஏக்கர் காணி நேற்று இராணுவத்தால் விடுவிக்கப்பட்டது. அவை நாளைமறுதினம் மக்களிடம் கையளிக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

பரவிப்பாஞ்சானில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளில் 5 ஏக்கர் காணி நேற்று என்னிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது. அவற்றின் உரிமையாளர்களை இனம் காணும் நடவடிக்கை இடம்பெறுகிறது.

விடுவிக்கப்பட்ட காணிகளின் எல்லை நிர்ணயத்துடன் நாளை மறுதினம் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும்.

இராணுவத்தினர் விடுத்த காணிகளில் 9 பேரின் காணிகள் உள்ளன. அவர்களில் 8 பேர் தமது ஆவணங்களை முன்வைத்தனர். உடனடியாகவே அவர்கள் தமது நிலத்தில் குடியமரும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என்றார் கிளிநொச்சி மாவட்டச் செயலர். (வ-21,ரி3,10)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை தெய்வேந்திரம்

மலர்வு 22 . 02 . 1940



உதிர்வு 15 . 08 . 2016

யாழ். மணியகாரன் வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை தெய்வேந்திரம் 15.08.2016 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தெய்வேந்திரத்தின் பாசமிகு மனைவியும் தர்மராசா (நோர்வே), கேதீஸ்வரன்(நோர்வே), தர்மராணி, கமலராணி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குகாராணி, இராஜேஸ்(வவா), குமரகுருபரர் (குரு), காலஞ்சென்ற றவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுசாந், தர்சினி, டிலுக்சிகா, திசாந், அரவிந்தன்,அருள்ராஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2016) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
மணியகாரன் வீதி,
புன்னாலைக் கட்டுவன் தெற்கு.

(12.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஓக. 17
நா.யோகேந்திரநாதனின் "நீந்திக் கடந்த நெருப்பாறு" நூல் அறிமுக விழா எதிர்வரும் சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ற - 5)

ST.PATRICK'S COLLEGE O.B.A
A.G.M 2016

Please be informed that the A.G.M of O.B.A ST.Patrick's College will be held on 28th Aug at college. Time 10.30 Am. your participation is very much appreciated. Please confirm your coming on or before 25th Aug to G.Secy or S.Secy on below M.NO'S Life members please update your correct address and M.NO'S (if there are any changes) to S.Secy.

077 360 8642, 077 618 3102
G.Secretary
(J/3625) (11,17)

பதவி வெற்றிடம்

கொழும்பு 13 இல் இயங்கிவரும் எமது சற்லைட் கேபிள் டி வி உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் உண்டு. தொடர்பு கொள்ளவும்.

1) களஞ்சிய காப்பாளர்
2) கணக்குப்பிள்ளை
3) டிஸ் அன்ரனா பொருத்துநர்கள்
4) எலற்றோனிக் றிப்பேர் செய்யக்கூடிய Teachnicians
5) எலக்றோனிக் பொருள்கள் விற்பனை செய்யக் கூடிய விற்பனையாளர்கள்
6) வான் சாரதி, ஆட்டோ சாரதி

திறமைக்கு ஏற்ப சம்பளம் ரூபாய் 20,000/- இல் இருந்து 50,000/- வரை கிடைக்கும். தேவையாயின் உணவு, தங்குமிடம் கிடைக்கும். வயது வரம்பு கிடையாது. முன் அனுபவம், மொழியறிவு, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன மேலதிக திறமையாகக் கணிக்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்.

SATS-TECH ENGINEERS (pvt) LTD
51/102, WOLFENDHAL STREET, COLOMBO-13
CONTACT-077 7710785

விற்பனைக்கு

நல்நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும்
குடிநீர் வியாபாரம் அதன்
வாகனங்கள் மற்றும்
அசையும்
சொத்துக்களுடன் விற்பனைக்கு
மாதாந்தம் 200 000/= இலாபம் தரக்கூடியது.
தொ.பே. 077 858 5348

காணி விற்பனைக்கும்
வீடு வாடகைக்கும் உண்டு
2 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூரில் ¾ பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு.
நல்லூரில் வீடு வாடகைக்கு உண்டு.
தொ.பே.077 604 4227

காணி விற்பனைக்கு

A9 வீதியில் நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதி, ஆரம்பத்தில் காணி விற்பனைக்குண்டு. பிரித்து கொடுக்கப்படும்.
தொடர்பு:- 077 8730129

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செபஸ்டியன் மகாதேவன்



உரும்பிராய் மேற்கு, பலாலி வீதியைப் பிறப்பிடமாகவும் இளவாலை, கோவிந்த புலத்தை வசிப்பிமாகவும் கொண்ட சின்னத்தம்பி செபஸ்டியன் மகாதேவன் 15.08.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மேரி பிலோமினாவின் அன்புக் கணவரும் யோசெப் யூட்லங்காதரனின் (பொறியியலாளர்- அமெரிக்கா) பாசமிகு தந்தையும் ஜோஸ்மிலாவின் அன்பு மாமனும் அமேயரன், ஸ்ஷோட்ரா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் குழந்தைவேலு (கனடா) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சபாரத்தினம்(உரும்பிராய்), லில்லிமலர்(கனடா), ஜோசெப்லில்லி (இளவாலை), மரிய நாயகம் (கொழும்பு), சந்தானசாமி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆன்புனிதம் (கொழும்பு), சந்திரா(லண்டன்) ஆகி யோரின் உடன்பிறவாச்சகோதரரும் சொலமன் ஜெயகுமாரின் சகலனும் Dr.அனோமிலன், பியோமிலன்(Q.Sகட்டார்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.08.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சொலமன் ஜெயகுமார்
(சகலன்)
075 043 7368

## சஜின் வாஸுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஓக 17
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய நண்பரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜின்வாஸ் குணவர்த்தனவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலுமொரு வழக்கை நேற்று கொழும்பு நீதிவான் மன்றத்தில் தாக்கல் செய்தது.
மிஹின் லங்கா நிறுவனத்துக்காக 883 மில்லியன் ரூபாவுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்ததில் நட்டம் ஏற்பட்டதாகக் கூறப்படும் விடயம் தொடர்பில் விசாரணை செய்யும் முகமாகவே இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
இதற்கமைய, சஜின்வாஸ் குணவர்த்தனவை எதிர்வரும் 20ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிவான் மன்றினால் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.
(வ-21)

## தேசிய கலை இலக்கிய பேரவையின் உரையாடல்கள்

சம்பூர் மக்கள் போராட்டம்: விளைவுகளும் எதிர்பார்ப்புக்களும் என்ற தலைப்பில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஹம்டன் லேன், வெள்ளவத்தையில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் கருத்துரை இடம்பெறும்.
தமிழ்ச் சூழலில் காத்திரமான கலந்துரையாடலுக்கும் அறிவுப்பகிர்வுக்குமான களமாக தேசிய கலை இலக்கியப் பேரவை பௌர்ணமி தோறும் நிகழ்த்தும் உரையாடல்கள் நிகழ்வின் இம்மாத நிகழ்வு சம்பூர் மக்கள் போராட்டம்: விளைவுகளும் எதிர்பார்ப்புக்களும் என்ற தலைப்பில் நிகழவிருக்கிறது. (வ-4)

## மணி விழா

ஓய்வு பெற்ற வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிபாளர் திருமதி செபஸ்ரியம்மா அன்ரன் சோமராஜாவின் பணி நிறைவின் மணிவிழா வவுனியா நகரசபை மண்டபத்தில் இன்று முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும்.
வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியதைக் கௌரவித்து சிறப்பு நூல் ஒன்றும் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-402)

# பொருளாதார வலயம் அமைவிடத்துக்கு வாக்களித்தவர்கள் வெங்காயங்களா?

### *வடக்குப் பிரதி அவைத் தலைவர் கேள்வி*

யாழ்ப்பாணம், ஓக. 17
பொருளாதார வலயம் ஓமந்தையில் அமைக்கப்பட வேண்டும் என்று வாக்களித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 21 பேரும் 'வெங்காயங்களா' என்று பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன் சபையில் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.
'அது வாக்களிக்கும் போதே தெரியாதா ?' என்று 'கவுண்டர்' கேள்வி எழுப்பினார் ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன்.
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், அமைச்சர்களை விசாரிக்கக் கோரும் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
கடந்த காலங்களில் இடம்பெற்ற முறையற்ற பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் தொடர்பான குழுவின் தலைவராக என்னை நியமித்திருந்தீர்கள். அதிலிருந்து நான் விலகியதற்கு காரணம், கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற அதே தவறுகள், தற்போது எங்களுடைய ஆட்சியிலும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.
ஆளும் கட்சியின் 16 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அமைச்சர்களை மாற்றம் செய்யுமாறு கோரி முதலமைச்சரிடம் மனுக் கொடுத்தோம். இன்றுடன் நான்கு மாதங்கள். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன் பின்னரும் அமைச்சர்கள் தங்கள் பதவியை விட்டுப் போவதாக இல்லை.
நாங்கள் ஓமந்தையா ? தாண்டிக்குளமா? என்று பிரிந்து வாக்கெடுப்பு நடத்தினோம். இன்று இந்த இரண்டு இடங்களிலும் இல்லாமல் மதகுவைத்தகுளத்திலும், மாங்குளத்திலும் அமைச்சர்கள் வந்து பார்த்துப் போயிருக்கின்றார்கள். அப்படியானால் பொருளாதார வலயம் ஓமந்தையில் அமைய வேண்டும் என்று வாக்களித்த 21 பேரும் வெங்காயங்களா? என்று கேள்வி எழுப்பினார்.
(வ-5)

## ஆஸியிலிருந்து....

'மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 6 கடற்றொழிலாளர்கள் கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதி வாழைச்சேனை கடற்பகுதியிலிருந்து படகொன்றின் மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றனர். அவர்கள் தொடர்ந்து 12 நாள்கள் படகில் பயணித்து ஆஸ்திரேலிய கடற்பரப்புக்குள் சென்ற நிலையில், படகு பழுதடைந்து 4 நாள்கள் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.
இந்நிலையில், குறித்த பகுதிக்குச் சென்ற விமானமொன்று சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்தவர்களை அவதானித்து வழங்கிய தகவலின் அடிப்படையில் ஆஸ்திரேலியக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்து விசாரணையின் பின்னர் அங்கிருந்து உடனடியாக சிறப்பு விமானம் மூலம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பினர். குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறி ஆஸ்திரேலியா சென்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட அவர்களிடம், பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணையின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.' என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(வ-21)

## காணாமற்....

என்பதை வலியுறுத்தியும் நாளை முல்லைத்தீவில் மாபெரும் போராட்டம் இடம்பெற உள்ளது.
இந்த போராட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக இடம்பெறும் என முல்லைத்தீவைச் சேர்ந்த காணாமற்போனோரின் உறவினர்கள் அறிவித்தனர்.
போரினால் வடக்கு, கிழக்கு மக்களே பாதிக்கப்பட்டனர். அதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவைச் சேர்ந்த மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டனர். இந்த நிலையில், காணாமற்போனோர் அலுவலகம் கிளிநொச்சி, முல்லைத்தீவில் அமைக்கப்படாது, எதற்காக கொழும்பில் அமைக்கப்படவேண்டும். காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கும் சட்டவரைவு நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் இந்த விடயம் தொடர்பாக வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற மக்கள் கருத்தறியும் செயலணியிடம் பாதிக்கப்பட்ட மக்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவிலேயே இந்த அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்தனர். ஆனால் மக்களின் கருத்துக்கு முன்னுரிமை வழங்காத அரசு, அந்த அலுவலகத்தைகொழும்பில் அமைப்பதாகத் தீர்மானித்தது. பின்னர் எதற்காக இந்தச் செயலணியினரை புதிய அரசு நிறுவி மக்களுடைய கருத்துக்களை கேட்டது. இது ஏமாற்று நாடகம்.
எனவே அரசினுடைய திட்டத்தைக் கண்டித்தே, இந்தப் போராட்டம் இடம்பெற உள்ளது. இதில் அரசியல் தலைவர்கள், பொது அமைப்புக்கள், மதத்தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு கடும் எதிப்பைத் தெரிவிக்க வேண்டும்' என்று முல்லைத்தீவைச் சேர்ந்த காணாமற் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். (வ-21,ரி7)

## 9 மணித்தியாலம்....

டப்படவில்லை. அடுத்த அமர்வில் தொடர் விவாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
விவாதம் நேற்றைய அமர்விலும் தொடர்ந்தது. நேற்றுக் காலையிலிருந்து சபை அமர்வு நிறைவுக்குக் கொண்டுவரும் நேரம் வரை, ஐந்தரை மணி நேரம் இந்தப் பிரேரணை மீதான விவாதமே நடைபெற்றது.
இந்த இரு நாள் அமர்வுக்காக மாகாண சபையினால் 5 லட்சம் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது.
'சுமுகமான முடிவுக்கு வர வேணும். இரு நாள் அமர்வுக்குமாக 5 லட்சம் ரூபா பணம் செலவிடப்பட்டிருக்கின்றது' என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சபை நடவடிக்கையின்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.
(க-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைத்தாள் திருத்தும் பணி; ஆறு பாடசாலைகள் முற்றாக மூடப்படும்

கொழும்பு, ஓக. 17

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 11 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் 6 பாடசாலைகள் முற்றாக மூடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரி, நாலந்தாக் கல்லூரி, கண்டி விஹாரமஹாதேவி, ஸ்வர்ணமாலி, மற்றும் சீதாதேவி மகளிர் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆகியன்வே இவ்வாறு மூடப்படவுள்ளன.

மீண்டும் செப்ரெம்பர் 13 ஆம் திகதி இந்தப் பாடசலைகள் திறக்கப்படும்.

கொழும்பு விகா கல்லூரி, கம்பஹா பண்டார நாயக்க கல்லூரி, குருநாகல் மலியதேவ கல்லூரி, கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி, மாத்தறை சுஜாதா கல்லூரி ஆகியனவும் விடைத்தாள்கள் திருத்தும் பணிக்காகப் பகுதியளவில் மூடப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

# உரத்தால் சூழல் மாசடைவு; ஆராய வந்துள்ளது வெளிநாட்டுக் குழு

கொழும்பு, ஓக. 17

வட மத்திய மாகாணத்தில் இரசாயன உரத்தைப் பயன்படுத்தியமையால் ஏற்பட்ட சுழல் மாசடைவு தொடர்பில் ஆராய வெளிநாட்டு நிபுணர்கள் குழு இலங்கைக்கு வருகை தந்துள்ளது.

குறித்த ஆராய்ச்சிக்காக இந்தக் குழுவைச் சேர்ந்த 12 பேர் நாட்டுக்கு வந்துள்ளனர் எனவும், இவர்கள் இன்று இது குறித்த விசேட மாநாடு ஒன்றை நடத்தவுள்ளதாகவும் ராஜரட்ட மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.

குறித்த மாநாடு ராஜரட்ட மருத்துவ பீடத்தின் அனுசரணையுடனேயே இடம்பெறுவதாகவும் அவர் கூறினார். (த-4)

# பிணையில் விடப்பட்டவர் மீண்டும் கைதானார்

யாழ்ப்பாணம், ஓக.17

மதுபோதையில் தந்தையின் விரலைக் கடித்துத் துண்டாடிய குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டவர் பிணையில் சென்று தந்தையைத் தாக்கிய குற்றச்சாட்டில் மீண்டும் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஆசிரியர் ஒருவர் கடந்த மாதம் போதையில் வீட்டுக்குச் சென்று தந்தையுடன் சண்டையிட்டு தந்தையின் கைவிரலைக் கடித்துத் துண்டாடினார் என்று பொலிஸில் முறையிடப்பட்டது. காயமடைந்த தந்தை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். மகன் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்க மறியலில் வைத்த நீதிவான், அண்மையில் அவருக்குப் பிணை வழங்கினார்.

பிணையில் வெளியே சென்றவர் மீண்டும் தந்தையைத் தாக்கினார் என்ற குற்றச் சாட்டில் மீண்டும் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(உ- 4,107)

# பசில் மீண்டும் கைதாவாரா?

கொழும்பு, ஓக. 17

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி, பெரியளவிலான நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முற்படுமாறு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரச கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் திவிநெகும திணைக்களத்துக்குச் சொந்தமான சுமார் 36 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட நிதியை அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு இறுதியாக கடந்த மாதம் கைது செய்யப்பட்ட பசில் ராஜபக்ச, கடந்த 8ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தையடுத்து ஜனவரி 10ஆம் திகதி நாட்டைவிட்டு வெளியேறிய பசில் ராஜபக்ச மீண்டும் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி நாடு திரும்பியிருந்தார். இதனையடுத்து மறுநாளான ஏப்ரல் 22ஆம் திகதி திவிநெகும நிதியத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் நிதியத்தின் ஆணையாளர் உட்பட மூவருடன் பசில் கைதுசெய்யப்பட்டார். இதுவரை நான்கு முறை கைதுசெய்யப்பட்ட பசில் ராஜபக்ச, பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்தபோது உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் மேற்கொண்ட மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவே எதிர்வரும் செப்ரெம்பர் 2ஆம் திகதி மீண்டும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார். (வ-21)

## மரண அறிவித்தல்கள்

### இராசதுரை தேவராசா



டேவிற்றோட் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அச்சகவீதி, சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை தேவராசா நேற்று (16.08.2016) செவ்வாய்க்கிழமை கரலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - மேரி அக்னஸ் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான ஞானமுத்து கிறிஸ்றீனா தம்பதியரின் அன்பு மருமகனும், றெஜினாவின் பாசமிகு கணவரும், ஜெயராசா, மேரிமாக்கிரேட் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமிர்தலிங்கம், அனோசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுபோதினி, வில்சன், ஜெயந்தினி, சிறிசாந்தினி, காலஞ் சென்ற ஜேசுநேசன், தேவராணி, மெசியா, தமிழ்ச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும், யூலியன், கல்யாணசுந்தரம், ஒஸ்ரின், புருனோ, ஜெயசோபனா, நிலான்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனும், ஜெபிலின், அன்ருஜன், அனுஜன், கெவில்ரன், கொலின்றா, பிறைனி, டிரோன், காருண்யா, கரோலின், சஞ்சீவ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.08.2016) புதன்கிழமை பி.ப. 3.30 மணியளவில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 32/21, அச்சக ஒழுங்கை,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி பத்மநாதன்



காரைநகர் இராசாந் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், விளானை, களபூமி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பத்மநாதன் அவர்கள் 15.08.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ச்தாசிவம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பத்மநாதனின் (பரமசாமி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற உருத்திரசிங்கம், சற்குணராஜா (லண்டன்), காலஞ்சென்றவர்களான பத்மலோஜினி, புஸ்பராணி மற்றும் செல்வராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், கனகசபை, சரஸ்வதி மற்றும் நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சித்திரா (லண்டன்), பத்மசீலன், சிவனேஸ்வரன் (சிவா - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், 'கம்சா, தர்சன், மனோரூபன், சர்மிராஜ், பகீரதன், ராகுலன், விதுசன், பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, கந்தசாமி, ஆறுமுகம் மற்றும் மகேஸ்வரி, இரத்தினபூபதி, வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2016) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9 மணியளவில் களபூமி தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளானை,
களபூமி, காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 853 1721** (J/3821) (11,17,18)

### சின்னத்தம்பி அருள்பிரகாசம்

(முன்னாள் சாமுவேல் அன்சன்ஸ் எழுதுவினைஞர்)



கட்டைவேலி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருள்பிரகாசம் கடந்த (15.08.2016) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான K.V சின்னத்தம்பி (ஆசிரியர்) - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான M.A. கந்தப்பு (ஆசிரியர்) - அனா சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கிருபாநிதியின் அன்புக் கணவரும், பிரியதர்ஷினி (கனடா), அருள்நேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேந்திரராஜா, அனுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்ஷிதா அகிலன் (லண்டன்), சலுஜா யாலேந்திரன் (கனடா), பிரசன்னா மகேந்திரராஜா (கனடா), டினோகா ஷோன் (கனடா), பென்ஜோ, ரோதா ஆகியோரின் அன்புப் பேரனும், பராநிதி (கொழும்பு), Dr. பரமோதயன் (லண்டன்), ஞானோதயன், Dr. தயாநிதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தற்போது இவரது மகனின் இல்லத்தில் (கோப்பாய்) வைக்கப்பட்டுள்ளது. இவரது நல்லடக்க ஆராதனை 22.08.2016 திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
கோப்பாய்.

(J/3826) (11,17)

தகவல்:
அ.அருள்நேசன்
(மகன்)
021 223 0133

### திருமதி உதயகுமாரி உதயகுமார்



டச் வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உதயகுமாரி உதயகுமார் 14.08.2016 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் புவனேந்திரன் (சாமியண்ணை) - மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் ராமசாமி - மல்லிகாதேவி தம்பதியரின் பாசமிகு மருமகளும் உதயகுமாரின் பாசமிகு மனைவியும் பிரிஷா, பிரஜித் ஆகியோரின் அன்புத்தாயும் உதயகுமார் (கனடா), தயாழினி (ஆசிரியர் - யா/உடுவில் மான்ஸ் ம.வி), தர்ஷிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் கல்யாணி, நவதாசன் (பிரதேச செயலகம் - காரைநகர்), மயூந்தன் (பிரான்ஸ்), சிவகுமார் (அமெரிக்கா), தர்சினி (ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சுதாகரன் (யா/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்), தனுசா ஆகியோரின் சகலியும் ஷஜீவன், அக்ஷனா, மபிஷன் ஆகியோரின் பெரியதாயும் சங்கவியின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2016) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச் வீதி, உடுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான் டெஸ்ட் அணி முதலிடத்துக்குத் தகுதியானது

### மிஸ்பா தெரிவித்தார்

பாகிஸ்தான் டெஸ்ட் அணி, டெஸ்ட் ஆட்டங்களுக்குரிய பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்துக்கு வரத் தகுதியானது எனத் தெரிவித்தார் அந்த அணியின் தலைவரான மிஸ்பா உல் ஹக்.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் அண்மையில் நடைபெற்றது. இங்கிலாந்தில் தொடர் நடைபெற்றதால் அந்த அணி தொடரைக் கைப்பற்ற வாய்ப்பு அதிகம் என்று கருதப்பட்ட நிலையில் பாகிஸ்தான் அணி அபாரமாகச் செயற்பட்டு 2:2 என்று சமன் செய்தது. பாகிஸ்தான் அணி தொடரை இழக்காததால் இலங்கை - ஆஸ்திரேலியா, இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான தொடரைப் பொறுத்து பாகிஸ்தான் அணி டெஸ்ட் தர வரிசையில் முதல் இடம்பிடிக்க வாய்ப்புள்ளது. இந்த நிலையிலேயே மிஸ்பா இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் முதல் இடத்துக்குத் தகுதியானவர்கள். ஏனென்றால், நாங்கள் கடந்த 6 ஆண்டுகளாக எங்களுடைய சொந்த நாட்டில் விளையாடியது இல்லை. எனவே வெளிநாட்டுத் தொடர்கள் எங்களுக்கு எழுதப்பட்ட விதியாயிற்று. என்னால் எனது அம்மாவை வருடத்துக்கு ஒருமுறைதான் பார்க்க முடியும்.

அதேபோல் எனது சகோதரியையும் வருடத்துக்கு ஒருமுறைதான் பார்க்க முடிகிறது. சில நண்பர்களை மூன்று முதல் நான்கு வருடங்களாகப் பார்க்க முடியவில்லை. ஏனென்றால் அந்த அளவுக்கு வெளிநாட்டு மண்ணில் தொடர்கள் இருக்கின்றன. சொந்த மண்ணின் பலம் என்ற ஒன்றில்லாமல் முதலிடத்துக்குரிய போட்டியில் இருப்பது பெருமை தருகிறது. நாம் முதலிடத்துக்குப் பொருத்தமானவர்கள் என்றே கருதுகிறேன் என மிஸ்பா தெரிவித்தார். (ம)





## கௌசால் சில்வா அசத்தல் சதம்; இரு அணிகளும் சீரான ஆதிக்கம்

இலங்கை - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில்நடைபெற்றுவரும் மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய நான்காம் நாள் முடிவுவரை இரு அணிகளும் சீரான ஆதிக்கத்தைப் பேணி வருகின்றன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 355 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக சந்திமல் 132 ஓட்டங்களையும், சில்வா 129 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலியாவின் சார்பாக ஸ்ராக் 5 இலக்குகளையும், லையன் 3 இலக்குகளையும், ஹேஸலண்ட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா 379 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக சோன் மார்ஸ் 130 ஓட்டங்களையும், ஸ்ரீவ் சிமித் 119 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஸ் 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கையின் சார்பாக கேரத் 6 இலக்குகளையும், பெரேரா 2 இலக்குகளையும், சில்வா, லக்மல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை, நான்காம் நாள் முடிவில் 22-1 என்றிருந்தது. கருணாரத்ன 8 ஓட்டங்களுடனும், கௌசால் சில்வா 6 ஓட்டங்களுடனும் இரண்டாவது நாளுக்காகக் களமிறங்கினர். சில்வா ஒரு முனையில் நிலைத்து நிற்க, மறுமுனையில் சீரான இடைவெளியில் இலக்குகள் சரிந்தன. கருணாரத்னவை 22 ஓட்டங்களுடனும், மத்தியூஸை 26 ஓட்டங்களுடனும் வீழ்த்தினார் லையன். குசல் பெரேராவை வெளியேற்றினார் ஹேஸலண்ட். இலங்கை 146 ஓட்டங்களில் 5 இலக்குகளை இழந்தது. சில்வா, சந்திமல் இணை ஆஸியின் பந்துப்பரிமாற்றங்களை எதிர்த்துத் தாக்கத்தை ஏற்படுத்தியது. பிறிதொரு இலக்கை இழக்காமல் 200 ஓட்டங்களை எட்டியது இலங்கை. சதம் கடந்தார் கௌசால் சில்வா. 7 ஓட்டங்களுடன் அரைச்சதத்தைத் தவறவிட்டார் சந்திமல். 115 ஓட்டங்களுடன் சில்வாவை வீழ்த்தினார் ஹேஸலண்ட். தனஞ்சய சில்வா 75 க்கும் அதிகமான சராசரியில் வந்தவேகத்தில் அடித்தாடினார். நாள் முடிவில் இலங்கை 312-8 என்றுள்ளது. தனஞ்சய சில்வா 44 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)



## கால் பந்தாட்டத்தில் தவறியது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஒக. 17

இலங்கை விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் விளையாட்டு உத்தியோகத் தர்களுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறிய வடக்கு மாகாணம் கிண்ணத்தைத் தவறவிட்டது.

எம்பிலிப்பிட்டிய மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து கிழக்கு மாகாண அணி மோதியது. இதில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது கிழக்கு மாகாண அணி. (ம-23)



## தெ.ஆபிரிக்காவுக்கு ஆலோசனை வழங்க வருகிறார் மார்க் பவுச்சர்

நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்காவின் ஆலோசகராக மார்க் பவுச்சர் நியமிக்கப்பட்டார். நியூசிலாந்து அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் நாளைமறுதினம் ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்காக நியூசிலாந்து அணி ஒரு வாரத்துக்கு முன்பாகவே தென்னாபிரிக்காவுக்குச் சென்று தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில், தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை, குறித்த தொடருக்காக ஆலோசகராக பவுச்சரை நியமித்தது. (ம)



## உலகின் அனைத்து அணிகளுக்கும் சவால் கொடுக்கவல்லதாம் இந்தியா

தற்போது உள்ள இந்திய அணி உலகின் அனைத்து அணிகளுக்கும் சவால் கொடுக்கவல்லது எனத் தெரிவித்தார் ஆஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான மெக்ராத்.

இந்தியாவிலுள்ள கிரிக்கெட் அக்கடமி ஒன்றுக்கு வந்துள்ள மெக்ராத் அங்கு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இந்திய அணி அண்மைக்காலமாக அபாரமான போர்மில் உள்ளது. துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு மூன்றிலும் சீரான திறமையை வெளிப்படுத்துகிறது.

குறிப்பாக அந்த அணியின் பந்துவீச்சு வரிசை சீர்செய்யப்பட்டுள்ளது. தற்போதிருக்கும் போர்மில் இந்திய அணி உலகின் எந்த நாட்டுக்குச் சென்றாலும் எதிரணிக்குச் சவால் காத்திருக்கும் என மெக்ராத் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

கரணவாய் ஓக 17

**பாரதியின் தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் அணியும், பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டதில் கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணியும் மோதவுள்ளன.

**நவசக்தியின் தொடர்**

நவசக்தி விளையாட்டு கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் நவசக்தி அணியை எதிர்த்து ஆதிசக்தி அணி மோதவுள்ளது.

**இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடர்**

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டமொன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவுள்ளது. (ம-422-108)



# சென். சேவியர் சம்பியனானது காந்திஜி அணியை வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஓக. 17

சிவலப்பிட்டி சனசமூக நிலையமும் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் புங்குடுதீவு சென். சேவியர் அணி சம்பியனானது.

அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் புங்குடுதீவு சென். சேவியர் அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி அணி மோதியது.

நிர்ண யிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவு செய்யாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை எற்பட்டது.

இதில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது செண். செவியர் அணி. சிறந்த வீரனாக சென். சேவியர் அணியின் தனுசன், சிறந்த கோல் காப்பாளராக காந்திஜி அணியின் சிவந்தன் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)

## ஆவரங்கால் மத்தி. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 17

கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

வொலிகிங்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.

முதலிரு செற்களையும் முறையே 25:20, 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை வகித்தது ஆவரங்கால் மத்தி.

மூன்றாவது செற்றையும் ஆவரங்கால் மத்தி கைப்பற்றும் பட்சத்தில் அந்த அணி நேர் செற் வெற்றிபெறும் என்ற நிலையில் அடுத்த இரு செற்களையும் முறையே 25:23, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது மோகனதாஸ் வி.கழகம். ஐந்தாவதும் இறுதியானதுமான செற்றில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த செற்றை 16:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23-422)

## இமையாணன் மத்தியின் தொடரில் கிண்ணம் வென்றது ஞானம்ஸ் வி.க.

யாழ்ப்பாணம், ஓக. 17

இமையாணன் மத்தியின் துடுப்பாட்டத் தொடரில் உடுவில் சலஞ்சேர்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனானது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம்.

இமையாணன் மத்தியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து உடுவில் சலஞ்சேர்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி ஜீவனின் அதிரடியான துடுப்பாட்டத்தின் உதவியுடன் நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக ஜீவன் 24 ஓட்டங்களையும், பிரகாஸ் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நிமல் 2 இலக்குகளையும், ஜிந்தா மற்றும் சிந்து இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

69 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய உடுவில் சலஞ்சேர்ஸ் அணி பத்துப் பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் 8 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களையே பெற்றது. இதனையடுத்து 8 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியனானது ஞானம்ஸ். அதிகபட்சமாக கபிசாந் 18 ஓட்டங்களையும், அனோஜன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-108)






## பூப்பந்தாட்டத்தில் தங்கம் வென்றது வடமாகாணம்

யாழ்ப்பாணம், ஓக. 17

இலங்கை விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில், ஆண்களுக்கான பூப்பந்தாட்டத் தொடரின் இரட்டையர் ஆட்டத்தில் வடமாகாணத்துக்குத் தங்கம் கிடைத்தது.

எம்பிலிப்பிட்டிய உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. வடமாகாணத்தைப் பிரதிநித்துவம் செய்த ரம்மிய ராகுலன், அன்ரனிஸ் இணை வடமத்திய மாகாண இணையை எதிர்த்து மோதியது. முதலிரு செற்களையும் முறையே 21:7, 21:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வடமாகாண இணை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

## றோயல், யங்கம்பன்ஸ் முன்னேற்றம் கண்டன

யாழ்ப்பாணம், ஓக. 17

பொலிகை பாரதியின் கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மற்றும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன முன்னேற்றம் கண்டன.

பாரதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. முதல் பாதியில் 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்த யங்கம்பன்ஸ் அணி இரண்டாவது பாதியிலும் தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அந்த அணியின் சார்பாக பிரகாஸ், ரதன் இருவரும் தலா இரண்டு கோல்களையும் பார்த்தீபன் ஒரு கோலையும் பதிவுசெய்தனர்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் அராலி சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தின் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த றோயல் அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரம் பாய்தலில் வடக்குக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 17
இலங்கை விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு இடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தலில் வடக்குக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.
வடக்கு மாகாணத்தின் சார்பாகக் களமிறங்கிய ஜெறோமி 1.75 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-23)



# குத்துச்சண்டையில் தங்கம் சொந்தமாக்கியது ரஷ்யா



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 91 கிலோ குத்துச்சண்டைப் போட்டியில் (ஹெவி வெய்ட்) ரஷ்யாவுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது. ரஷ்யாவைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய எவின்கினி ரிசின்கினோ, கஜகஸ்தானின் வாஸ்கினி லெவிட்டை வீழ்த்தித் தங்கம் வென்றார். கஜகஸ்தான் வீரருக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும் போட்டியில் தோல்வியடைந்த வீரர்களான கியூபாவின் எரிஸ்லாண்டி, உஸ்பெகிஸ்தானின் ரஸ்ரம் ருலகானோவ் இருவருக்கும் வெண்கலப் பதக்கம் கிடைத்தது. (ம)



# ஜேர்மனியின் படகோட்ட வீரர் கார் விபத்தில் சாவடைந்தார்

ஜேர்மனியின் முன்னாள் படகோட்ட வீரரும் தற்போதைய பயிற்சியாளருமான ஸ்ரீபன் ஹன்சா வீதி விபத்தில் படுகாயமடைந்து சாவடைந்தார்.
ரியோ ஒலிம்பிக் தொடரில் ஜேர்மனியின் சார்பாகக் களமிறங்கிய படகோட்ட அணிக்கு ஸ்ரீபன் ஹன்சாவே பயிற்சியாளராக உள்ளார். இதனால் இவர் தனது அணியுடன் ரியோவுக்கு வந்திருந்தார். கடந்த வெள்ளிக்கிழமை சக பயிற்சியாளர் கிரிஸ்ரியனுடன் இணைந்து காரில் விடுதியொன்றுக்குச் சென்றுகொண்டிருந்த வேளை அவர்கள் சென்ற கார் விபத்துக்குள்ளானது. படுகாயமடைந்த ஸ்ரீபன் ஹன்சா சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுச் சாவடைந்தார். கிரிஸ்ரியன் சில சிராய்ப்புக் காயங்களுடன் உயிர் தப்பினார். (ம)



# பளுதூக்கலில் உஸ்பெகிஸ்தானுக்கு தங்கப்பதக்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பளுதூக்கும் போட்டியில் உஸ்பெகிஸ்தானுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது. ரியோ ஒலிம்பிக்கில் அந்த நாடு வென்ற முதல் தங்கப் பதக்கமாக இப்பதக்கமே அமைந்தது.
உஸ்பெகிஸ்தானின் சார்பாகக் களமிறங்கிய ரஸ்லன் நருடினோவ் என்ற வீரர் ஒட்டுமொத்தமாக 431 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தைத் தனதாக்கினார். ஆர்மெனிய வீரரான சீமொன் 417 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், கஜகஸ்தானின் அலெக்சாண்டர் 416 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (ம)

# இந்தியா - மே. தீவுகள் இறுதி டெஸ்ட் நாளை

தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய அணி நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன் நான்காவது டெஸ்ட் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களில் இந்தியா 2:0 என்று முன்னிலையில் உள்ளது. முதலாவது, மூன்றாவது ஆட்டங்களில் இந்தியா வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டம் சமநிலை கண்டது. இதனால் நாளை ஆரம்பமாகும் ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணம் இந்தியாவிடமிருந்து செல்ல வாய்ப்பில்லை. இந்தியாவைப் பொறுத்த மட்டில் இது ஒரு சம்பிரதாயபூர்வமான ஆட்டமாகவே உள்ளது. ஆனால் சொந்த மண்ணில் நடைபெறும் தொடரில் குறைந்தபட்சம் ஒரு வெற்றியையாவது பெறவேண்டும் என்ற கௌரவச் சிக்கல் தீவுகளுக்கு உள்ளது.(ம)

Study in Australia




Why Study in Australia?
❖After G.C.E. O/L or G.C.E A/L or Degree
❖Foundation / Diploma / Bachelors / Masters
படிக்க ஓர் அரிய வாய்ப்பு!
❖July 1st இருந்து இலகு Visa நடைமுறைகள்
❖குறைந்த பாடநெறிக் கட்டணங்கள்
❖Spouse can travel together
❖பகுதி நேர வேலை வாய்ப்புகள் (20 Hours per week)
Admission open for 2016/2017 Intake
ics Foreign Education Services
Admission Help line
077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road, Colombo - 06

VACANCY @ ESOFT
JAFFNA & KILINOCHCHI
Shaping Lives, Creating Futures.

Student Counselors
(JAFFNA & KILINOCHCHI)

- Shoud be have a International Diploma / HND Qualifications
- Handle the queries and questions of customers/students and provide them with proper guidance
- Handing student registration
- Maintain information with regard to class schedules and payment structures
- Fluency in English and Computer Literacy
- Prior experience in similar positions,customer care and front office operations willbe advantageous
- Should be work on week ends
- Eligible to candidate will receive attactive home take salary plus commisions

HOW TO APPLY :
Send us your Completed CV with in 10 Days of this advertisment including a covering letter introducing your self to jaffna@esoft.lk please state the position applied as the subject line of the email

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS - JAFFNA
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka.
Hotline :077 309 9 308 Tel : 021 - 222 4142

BA 1st Year (G.A.Q) 2016
பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)
*மேற்படி பல்கலைக்கழகத்தினால் முதலாம் ஆண்டுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
*A/L இல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
*A/L 2014 /2015 ம் இதற்கு முன்னர் பரீட்சை எடுத்த மாணவர்களும் விண்ணப்பிக்கமுடியும்.
* பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
*புதிய பிரிவுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
*பதிவு முடிவு திகதி: 25.08.2016 வரையாகும்.
குறிப்பு: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் B.BA (Management) B.Com இவற்றுக்குரிய பதிவுகளும், விரிவுரைகளும் ஆரம்பமாகி விட்டன.
⇨ கவனிக்குக: விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.
விவரங்களுக்கு: S. அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 8148, 021 568 9477, 077 846 9721

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.